सत्यमेव जयते

# தமிழக சட்டமன்றத் தேர்தல் - 2016

## கையேடு



பத்திரிகைத் தகவல் அலுவலகம்

சென்னை

## பொறுப்பு வரம்பு

இந்த தமிழக சட்டமன்றத் தேர்தல் -2016 கையேடு சென்னை பத்திரிகைத் தகவல் அலுவலகத்தால் தயாரிக்கப்பட்டது. இந்திய தேர்தல் ஆணையத்தால் முன்பு நடத்தப்பட்ட பொதுத் தேர்தல்கள் பற்றிய தகவல்கள் மற்றும் ஊடகம் தொடர்புடைய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டி நெறிமுறைகளை ஊடக செய்தியாளர்களுக்கு வழங்கும் விதமாக தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகத்தில் துல்லியமான சமீபத்திய தகவல்களை வழங்குவதற்கு அனைத்து வகையிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதை சட்ட ரீதியான புத்தகமாக பயன்படுத்த முடியாது என்பதுடன் சட்ட நடவடிக்கைகளுக்காகவும் இதைப் பயன்படுத்தக்கூடாது. இதில் ஏதேனும் தெளிவில்லையென்றாலோ, சந்தேகம் எழுந்தாலோ இந்தப் புத்தகத்தைப் படிப்பவர்கள் இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் (www.eci.nic.in) சரிபார்த்துக் கொள்ளலாம்.

## புள்ளியியல் ஆதாரங்கள் மற்றும் குறிப்புகள்


சட்டமன்றத் தேர்தல்கள் குறித்த புள்ளியியல் தகவல்கள், தரவுகள் இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆணைகள் ஆகியவை தேர்தல் ஆணையத்தின் இணைய தளத்திலிருந்து (www.eci.nic.in) எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

## உங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க

திரு. கரு. முத்து குமார், கூடுதல் தலைமை இயக்குநர் (ஊடகம் மற்றும் தொடர்பு), பத்திரிகைத் தகவல் அலுவலகம் சென்னை என்ற முகவரிக்கு மின் அஞ்சல் மூலமாக அனுப்பலாம்.

**மின் அஞ்சல் முகவரி:** pibchennai@gmail.com

**தொலைபேசி எண் : 044-28228146 / 28228147 / 28228148**




**பத்திரிகைத் தகவல் அலுவலகம்**
**தகவல் ஒலிபரப்பு அமைச்சகம்**
**இந்திய அரசு**
**சென்னை**

---

**தொலைபேசி** - 044-28228146/47/48
**மின்னஞ்சல்** - pibchennai@gmail.com/pibchennai@nic.in
**இணையதளம்** - www.pibchennai.gov.in

RAJESH LAKHONI, I.A.S.,
CHIEF ELECTORAL OFFICER &
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

PUBLIC (ELECTIONS) DEPARTMENT
SECRETARIAT, CHENNAI 600 009

நாள் : 22.03.2016

சென்னையில் உள்ள தென் மண்டலங்களுக்கான பத்திரிக்கை தகவல் அலுவலகம் 2016ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலையொட்டி ஒரு கையேட்டினை வெளியிட்டுள்ளது. இந்தக் கையேடு, 1952ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் நடைபெற்ற தேர்தல்கள் குறித்த புள்ளிவிவரங்களை வாசகர்களுக்கு வழங்குவதாக அமைந்துள்ளது. இந்தப் புள்ளிவிவரங்கள் இந்திய தேர்தல் ஆணையத்தின் புள்ளிவிவரக் காப்பகம் மற்றும் பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் ஆவணக் காப்பகம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்தவை ஆகும்.

தேர்தல் நடைமுறைகளான மாதிரி நடத்தை விதிமுறைகள், மின்னணு மற்றும் சமூக ஊடகங்கள் உள்ளிட்ட ஊடகங்களுக்கான மாதிரி நடத்தை விதிமுறைகள், இந்திய தேர்தல் ஆணையத்தின் முக்கியமான உத்தரவுகள், 1951ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் முக்கிய அம்சங்கள் அடங்கிய தொகுப்பாக இந்தக் கையேடு அமைந்துள்ளது. ஊடகத்துறை நண்பர்கள், ஆய்வாளர்கள், நிபுணர்கள் ஆகியோருக்கு இந்தக் கையேடு மிகுந்த பயனுள்ளதாக அமையும் என்று நம்புகிறேன்.

(RAJESH LAKHONI)

फ्रैंक नरोन्हा
**Frank Noronha**
Tel. : 23383643
Fax : 23383094
E-mail : pdg-pib@nic.in

सत्यमेव जयते

महानिदेशक (सूचना एवं माध्यम)
DIRECTOR GENERAL
(MEDIA & COMMUNICATION)
पत्र सूचना कार्यालय
PRESS INFORMATION BUREAU
भारत सरकार
GOVERNMENT OF INDIA
शास्त्री भवन, नई दिल्ली
SHASTRI BHAWAN, NEW DELHI-110001

**புது தில்லி, மார்ச் 18, 2016**

## அணிந்துரை

இந்திய தேர்தல் ஆணையம் ஐந்து மாநில சட்டமன்றங்களுக்கான தேர்தலை அறிவித்ததைத் தொடர்ந்து 2016ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றத்திற்கான பொதுத் தேர்தல் ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன. தமிழ்நாட்டில் வரும் மே 16ஆம் தேதியன்று வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள ஜனநாயகத்திற்கான கொண்டாட்டத்தில் இந்த முறை 5,79,15,075 பேர் பங்கேற்கவுள்ள நிலையில், இந்திய தேர்தல் ஆணையம் அவர்களது வாக்குப்பதிவை எளிதாக்கும் வகையில் கிட்டத்தட்ட 65,616 வாக்குச் சாவடிகளை ஏற்படுத்த உள்ளது.

இத்தருணத்தில் சென்னையில் உள்ள எமது பத்திரிக்கை தகவல் அலுவலகம் பொதுத் தேர்தல்கள் குறித்த மிகச் சமீபத்திய விதிமுறைகள்- நடைமுறைகள் ஆகியவற்றை உள்ளடக்கி உருவாக்கியுள்ள **'தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்- 2016** என்ற கையேட்டினை ஊடகத்துறை நண்பர்கள், நிபுணர்கள் ஆகியோருடன் பகிர்ந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

மேற்கண்ட எதுவும் அல்ல (நோட்டா) என்ற தேர்விற்கான சின்னம், தேர்தல் செலவுகளை கண்காணிப்பதற்கான வழிமுறைகள், வாக்காளர்களுக்கு அறிவுறுத்தவும், வாக்குரிமையில் அவர்கள் பங்கேற்கவும் முறையான வகையில் பயிற்சி அளிப்பது, வாக்காளர்கள் தாங்கள் வாக்களித்தது யாருக்கு என்பதை அவர்கள் மட்டும் கண்டறியும் வகையிலான காகித அச்சு முறை ஆகிய அம்சங்கள் குறித்த விவரங்கள் இந்த கையேட்டின் ஒரு சில முக்கியமான அம்சங்களாக அமைகின்றன. 1951ஆம் ஆண்டில் மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் மற்றும் ஊடகம் & பணத்திற்காக செய்தி; சமூக ஊடகங்களுக்கான நடைமுறை விதிகள்; 1951ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 126ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் ஊடகச் செயல்பாடுகள் ஆகிய முக்கியமான நடைமுறை விதிகளும் இந்தக் கையேட்டில் இணைக்கப்பட்டுள்ளன.

இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் பத்திரிக்கை தகவல் அலுவலகம் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கையேடானது சென்னையில் உள்ள எமது பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் இணைய தளத்தில் (www.pibchennai.nic.in) பதிவேற்றப்பட்டுள்ளது.

இந்தக் கையேடு தங்களது தொழில்முறையிலான தேவைகளுக்கு ஏற்ப பயனுள்ள வகையில் உள்ளது என ஊடகத்துறை நண்பர்களும் வாசகர்களும் கருதுவார்கள் என நம்புகிறேன்.

Frank Noronha

**(Frank Norohna)**

# பொருளடக்கம்


| பொருளடக்கம் | | |
|---|---|---|
| வ.எண் | பொருள் | பக்கம் |
| 1. | தேர்தல் அட்டவணை | 1 |
| 2. | இந்தியாவில் தேர்தல் முறைமையின் வளர்ச்சி | 2 |
| 3. | தேர்தல் சட்டங்கள் | 10 |
| 4. | தேர்தல் செலவைக் கண்காணிக்கும் அமைப்பு | 15 |
| 5. | "ஸ்வீப்" - அனைவரையும் தேர்தலில் பங்கேற்க வகை செய்யும் முயற்சிகள் | 19 |
| 6. | மாதிரி நடத்தைக் கோட்பாடுகளும் அதன் வளர்ச்சியும் | 22 |
| 7. | தேர்தல் ஆணையம் பிறப்பித்த ஆணைகள் | 33 |
| 8. | தமிழக சட்டமன்ற வரலாறு | 74 |
| 9. | தொகுதி சீரமைப்பு | 86 |
| 10. | தொகுதி பட்டியல் | 95 |
| 11. | தேர்தல் முடிவுகள் | 103 |

அறிவிப்பு

22.04.2016

வேட்புமனு தாக்கல்

29.04.2016

வேட்புமனு பரிசீலனை

30.04.2016

வேட்புமனு வாபஸ்

02.05.2016

வாக்கு எண்ணிக்கை

19.05.2016

வாக்குப் பதிவு

16.05.2016

தேர்தல் நடைமுறை நிறைவு

21.05.2016

# தேர்தல் அட்டவணை


# அத்தியாயம் 1


## தேர்தல்அட்டவணை

*2016 சட்டமன்றத் தேர்தல் - கால அட்டவணை*


| வ.ண் . | நிகழ்வு | தேதிகள் 234 தொகுதிகளிலும் |
|---|---|---|
| 1 | அறிவிப்பு வெளியாகும் நாள் | 22.04.2016 (வெள்ளி) |
| 2 | வேட்புமனு தாக்கல்செய்ய கடைசி நாள் | 29.04.2016 (வெள்ளி) |
| 3 | வேட்புமனு பரீசலனைக்கு எடுக்கப்படும் நாள் | 30.04.2016 (சனி) |
| 4 | வேட்புமனுவை திரும்பப்பெறும் கடைசி தேதி | 02.05.2016 (திங்கள்) |
| 5 | வாக்குப்பதிவு நாள் | 16.05.2016 (திங்கள்) |
| 6 | வாக்குகள் எண்ணப்படும் நாள் | 19.05.2016 (வியாழன்) |
| 7 | தேர்தல் நடைமுறைகள் நிறைவு பெறவேண்டிய நாள் | 21.05.2016 (சனி) |

➔ 234 தொகுதிகளுக்கும் ஒரே நாளில் தேர்தல் நடைபெறும்







The app will also tell users the EPIC number



# இந்தியாவில் தேர்தல் முறைமையின் வளர்ச்சி



# அத்தியாயம் 2

## இந்தியாவில் தேர்தல் முறைமையின் வளர்ச்சி

1947-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்தியா சுதந்திரம் அடைந்தபின், வயது வந்தவர்களுக்கான ஓட்டு உரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட அரசை அமைக்க பொதுத் தேர்தல் நடத்த வேண்டிய அவசியம் எழுந்தது. எனவே அரசியல் சாசனத்தின் 324வது பிரிவு சுயேச்சை அதிகாரம் கொண்ட அரசியல் சாசன அமைப்பாக தேர்தல் ஆணையத்தை அமைக்க வழிவகுத்தது. இது 1949-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ம் நாள் நடைமுறைக்கு வந்தது. அரசியல் சாசனத்தின் பெரும்பாலான மற்ற அம்சங்கள் 1950-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் தேதி அமலுக்கு வந்தன. (இந்தத் தேதியிலிருந்து தான் நமது அரசியல் அமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்தது).

1950-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் தேதி அதாவது நமது நாடு ஜனநாயக குடியரசாக மாறியதற்கு ஒரு நாள் முன்பாக தேர்தல் ஆணையம் முறைப்படி உருவாக்கப்பட்டது. முதலாவது தலைமைத் தேர்தல் ஆணையராக திரு. சுகுமார் சென் 1950-ம் ஆண்டு மார்ச் மாதம் 21ம் தேதி நியமிக்கப்பட்டார். 1952-ம் ஆண்டு முதல் 1989-ம் ஆண்டு அக்டோபர் 16-ம் தேதி வரை தேர்தல் ஆணையம் ஒற்றை உறுப்பினர் கொண்ட அமைப்பாக செயல்பட்டது. 1989-ம் ஆண்டு அக்டோபர் 16-ம் தேதியிலிருந்து 1990-ம் ஆண்டு ஜனவரி முதல் தேதிவரை இந்திய தேர்தல் ஆணையம் 3 உறுப்பினர் கொண்ட அமைப்பாக மாற்றி அமைக்கப்பட்டது. ஆனால் 1990-ம் ஆண்டு ஜனவரி முதல் தேதியன்று இந்த ஆணையம் ஒரு உறுப்பினர் கொண்ட அமைப்பாக மாற்றப்பட்டது. எனினும், தேர்தல் ஆணையம் 1993-ம் ஆண்டு அக்டோபர் முதல் தேதியிலிருந்து 3 உறுப்பினர்கள் கொண்ட அமைப்பாக செயல்பட்டு வருகிறது.




தலைமைத் தேர்தல் ஆணையருக்கும் மற்ற இரு ஆணையர்களுக்கும் உச்ச நீதிமன்ற நீதிபதிக்கு வழங்கப்படுவது போன்ற சம்பளமும் படிகளும் வழங்கப்படுகின்றன. முடிவு எடுப்பதில், இந்த 3 உறுப்பினர்களுக்கும் ஒரே மாதிரியான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் எந்த ஒரு பிரச்சினையிலும் கருத்து வேறுபாடு ஏற்பட்டால், பெரும்பான்மையான உறுப்பினர்களின் முடிவின் அடிப்படையில் இறுதி முடிவு மேற்கொள்ளப்படும். தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் இரு ஆணையர்களின் பதவிக்

காலம் ஆறு ஆண்டுகள் ஆகும். அல்லது 65 வயது வரை பதவியில் இருக்கலாம். இதில் எது முதலில் வருகிறதோ அதுவே நடைமுறைப்படுத்தப்படும்.

மக்களவைக்கான முதலாவது பொதுத் தேர்தல் மற்றும் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதலாவது வரையறைக்கான உத்தரவை குடியரசுத் தலைவர் தேர்தல் ஆணையத்தின் ஆலோசனையின் அடிப்படையில் நாடாளுமன்றத்தின் ஒப்புதலுடன் 1951-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13-ம் தேதி வெளியிட்டார்.

## தேர்தல்களை நடத்துவதற்கான சட்டபூர்வ கட்டமைப்பு:

தேர்தல்களை நடத்துவதற்கான சட்டபூர்வ கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான முதல் ஷரத்தை நாடாளுமன்றம் 1950-ம் ஆண்டு மே 12-ம் தேதி இயற்றியது. இது 1950-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் எனப்படும். வாக்காளர்கள் பட்டியல்களைத் தயாரிக்க இது வகை செய்கிறது. 1951-ம் ஆண்டு ஜூலை 17-ம் தேதி இயற்றப்பட்ட 1951-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் எனப்படும். 2வது சட்டம் நாடாளுமன்ற இரு அவைகளுக்கும், மாநிலச் சட்டப்பேரவைகளுக்கும் தேர்தல்களை நடத்துவதற்கான வழிமுறைகளை வரையறை செய்கிறது.


இந்தத் தொகுதிகளுக்கான வாக்காளர்கள் பட்டியல் 1951-ம் ஆண்டு நவம்பர் 15-ம் தேதி எல்லா மாநிலங்களிலும் வெளியிடப்பட்டன. ஜம்மு காஷ்மீர் நீங்கலாக மற்ற மாநிலங்களின் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 17,32,13,635 ஆகும். அப்பொழுது ஜம்மு காஷ்மீர் நீங்கலாக மொத்த நாட்டின் மக்கள் தொகை 35,66,91,760. இது 1951-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலானதாகும். மக்களவைக்கான முதல் பொதுத் தேர்தலும், மாநிலச் சட்டப்பேரவைகளுக்கான முதல் தேர்தல்களும் 1951-ம் ஆண்டு அக்டோபர் முதல் 1952-ம் ஆண்டு மார்ச் வரையிலான காலகட்டத்தில் நடைபெற்றன. 497 உறுப்பினர்களைக் கொண்ட முதலாவது மக்களவை 1952-ம் ஆண்டு ஏப்ரல் 2-ம் நாள் அமைக்கப்பட்டது. 216 உறுப்பினர்களுடன் முதலாவது மாநிலங்கள் அவை 1952-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 3-ம் நாள் அமைக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளும், மாநில சட்டப்பேரவைகளும் அமைக்கப்பட்டபின், முதலாவது குடியரசுத் தேர்தல் 1952-ம் ஆண்டு மே மாதம் நடைபெற்றது. முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுத் தலைவர் 1952-ம் ஆண்டு மே மாதம் 13-ம் தேதி பதவி ஏற்றுக் கொண்டார். 1951-52ல் நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலின்பொழுது 14 அரசியல் கட்சிகளை பல மாநிலங்களில் செயல்பட்டு வரும் அரசியல் கட்சிகளாகவும், 39 கட்சிகளை மாநிலக் கட்சிகளாகவும் தேர்தல் ஆணையம் அங்கீகரித்தது. இப்பொழுது 7 அங்கீகரிக்கப்பட்ட தேசிய கட்சிகளும், 40 மாநில கட்சிகளும் உள்ளன.

### வாக்குச் சீட்டு:

1951-52ம் ஆண்டு மற்றும் 1957-ம் ஆண்டும் நடைபெற்ற முதலாவது இரண்டாவது பொதுத் தேர்தல்களில் தேர்தல் ஆணையம் வாக்குச் சீட்டு முறையைக் கடைப்பிடித்தது. இந்தத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு வேட்பாளருக்கும் எல்லா வாக்குச்சாவடிகளிலும்


தனித்தனி வாக்குப் பெட்டி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தடுப்பிற்குள் வைக்கப்பட்டிருக்கும் இந்த வாக்குப் பெட்டிகளில், வாக்காளர்கள் வாக்குகளை தங்கள் விருப்பப்பட்ட வேட்பாளர்களின் பெட்டிக்குள் போட வேண்டும். வாக்குகள் முன்னதாகவே பொதுவாக அச்சடிக்கப்பட்டிருக்கும்.




1962-ம் ஆண்டு நடைபெற்ற 3-வது பொதுத் தேர்தலிலிருந்து வாக்குகளை பதிவு செய்யும் முறையை ஆணையம் அறிமுகம் செய்தது. இந்த முறையின் கீழ், வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் அவர்களது சின்னங்கள் அச்சிடப்பட்ட பொதுவான வாக்குச் சீட்டில், வாக்காளர்கள் தங்களது விருப்பப்பட்ட வேட்பாளர்களின் சின்னம் அல்லது அதற்கு அருகில் அம்புக்குறி, ரப்பர் முத்திரையைப் பதிக்க வேண்டும். இவ்வாறு முத்திரை குத்தப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் பொதுவான வாக்குப்பெட்டியில் இடப்படும்.

**மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம்:**

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம், முதல் முறையாக சோதனை அடிப்படையில் 1982-ம் ஆண்டு கேரள மாநிலத்தில் பருர் சட்டப்பேரவைத் தொகுதியில் சில பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டது.




மின்னணு வாக்கு இயந்திரத்தைப் பயன்படுத்துவது பின்னர் 1998-ம் ஆண்டு பரவலாக்கப்பட்டது. 2004-ம் ஆண்டு நடைபெற்ற 14-வது மக்களவைக்கான தேர்தலில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் எல்லா வாக்குச் சாவடிகளிலும் முதல்முறையாக பயன்படுத்தப்பட்டது. அதையடுத்து மக்களவை மற்றும் சட்டப்பேரவைகளுக்கான எல்லாத் தேர்தல்களிலும் இந்த இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

1951-52-ம் ஆண்டிலிருந்து மக்களவைக்கு 15 பொதுத்தேர்தல்களும், 348க்கு மேற்பட்ட சட்டப்பேரவைத் தேர்தல்களும் நடைபெற்றுள்ளன.

**வாக்காளர்கள் அளித்த வாக்கைச் சரிபார்க்கும் காகித சோதனைமுறை**

2010-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4-ம் தேதி நடைபெற்ற அனைத்துக்கட்சிக் கூட்டத்தில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை தொடர்ந்து பயன்படுத்துவது குறித்து அரசியல் கட்சிகளிடையே விரிவான பொதுக்கருத்து காணப்பட்டது. எனினும் பல கட்சிகள், வாக்காளர்கள், தங்களது வாக்கைச் சரிபார்ததுக் கொள்ள உதவும் காகித முறையை அறிமுகப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து பரிசீலிக்கப்பட வேண்டுமென்று யோசனை தெரிவித்தனர்.




2014-ம் ஆண்டு 543 நாடாளுமன்ற மக்களவைத் தொகுதிகள் அனைத்திலும், "வி.வி.பி.ஏ.டி." முறையை அறிமுகம் செய்ய தேர்தல் ஆணையத்திற்கு 14 லட்சம் "வி.வி.பி.ஏ.டி." இயந்திரங்கள் தேவைப்படும். எனினும் இப்பொழுதுள்ள குறைந்த கால அளவில் இத்தனை எண்ணிக்கையிலான இயந்திரங்களைத் தயாரித்து, சோதனை செய்வது குறித்து ஆணையம், ஐயப்பாடு கொண்டுள்ளது. 2019-ம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கு முன், எல்லா நாடாளுமன்ற தொகுதிகளிலும் இந்த முறையைப் பயன்படுத்துவது சாத்யமில்லை என்று ஆணையம் கருதுகிறது. 2014-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்கு "வி.வி.பி.ஏ.டி." இயந்திரங்களை கொள்முதல் செய்து, அவற்றை நாட்டிலுள்ள எல்லா வாக்குச்சாவடிகளிலும் நிறுவனத்திற்கு சுமார் ரூ.1500 கோடி ரூபாய் தேவைப்படும் என்று ஆணையம் கூறியுள்ளது.

**2016 சட்டமன்றத் தேர்தலில் தமிழகத்தில் 17 தொகிதிகளிலும் புதுச்சேரியில் மூன்று தொகுதியிலும் வி.வி.பி.ஏ.டி. இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது**

**'மேற்குறிப்பிட்ட எவருமில்லை' (NOTA) என்ற தேர்விற்கான சின்னம்:**

| | |
|---|---|
|  | நோட்டா<br>மேற்குறிப்பிட்ட எவருமில்லை<br>என்பதற்காக தேர்தல் ஆணையம்<br>வடிவமைத்துள்ள சின்னம் |

**இந்திய தேர்தல் ஆணையம்**
**நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புது தில்லி - 110 001.**

**பத்திரிக்கை செய்தி**

எண். இதேஆ/ பசெ/ 58/2015 நாள்: செப்டெம்பர், 18, 2015

**பொருள்: 'மேற்குறிப்பிட்ட எவருமில்லை' (NOTA) என்ற தேர்விற்கான சின்னம்.**

உச்சநீதிமன்றத்தின் செப்டம்பர் 27, 2013 தேதிய உத்தரவிற்கிணங்க அக்டோபர் 11, 2013 முதல் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மற்றும் அனைத்து இதர வாக்குச் சீட்டுகளிலும் 'மேற்குறிப்பிட்ட எவருமில்லை' (நோட்டா) என்ற தேர்வினை இந்திய தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தியது என்பது இத்தருணத்தில் நினைவுகூரத் தக்கதாகும்.

இதர தேர்தல் சின்னங்களைப் போலவே, மேற்கூறிய 'மேற்குறிப்பிட்ட எவருமில்லை' (நோட்டா) என்ற தேர்விற்கு உதவி செய்யும் வகையில், கீழே கொடுக்கப்பட்டுள்ளது போல், தனிப்பட்ட தேர்தல் சின்னத்தை இந்திய தேர்தல் ஆணையம் தற்போது அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தச் சின்னமானது இனிவரவிருக்கும் அனைத்து தேர்தல்களிலும் பயன்படுத்தப்படவிருக்கும் அனைத்து மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களிலும், இதர வாக்குச் சீட்டுகளிலும் வேட்பாளர் வரிசையில் கடைசியாக இருக்கும். இதற்கென அனைத்து தலைமை தேர்தல் அலுவலர்களுக்கும் உரிய வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது.

தேர்தலில் நிற்கும் எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்களிக்க விரும்பாத, தங்களது முடிவின் ரகசியத் தன்மையை மீறாத வகையில், எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்களிப்பதில்லை என்ற தங்களது உரிமையை நிலைநாட்ட அவர்களுக்கு உதவி செய்வதே இந்த முயற்சியின் முக்கிய நோக்கமாகும்.

'மேற்குறிப்பிட்ட எவருமில்லை' என்ற தேர்விற்குரிய இந்த சின்னத்தை அகமதாபாத் நகரிலுள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனம் வடிவமைத்தது.



***நடைபெற்று வரும் தேர்தல் செயல்பாடுகளை எளிதாகவும், சிறப்பாகவும், வெளிப்படையானதாகவும் ஆக்குவதற்கென தேர்தல் ஆணையத்தின் தகவல் தொழில்நுட்ப ரீதியான முன்முயற்சிகள்.***

**இந்தியத் தேர்தல் ஆணையம்**

**நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புதுதில்லி - 110001.**

எண். இதேஆ/பகு/26/2016 தேதி: 19.03.2016

*பத்திரிக்கைக் குறிப்பு*

பொருள்: **நடைபெற்று வரும் தேர்தல் செயல்பாடுகளை எளிதாகவும், சிறப்பாகவும், வெளிப்படையானதாகவும் ஆக்குவதற்கென தேர்தல் ஆணையத்தின் தகவல் தொழில்நுட்ப ரீதியான முன்முயற்சிகள்.**

—

அசாம், கேரளா, புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் மாநில சட்டமன்றங்களுக்கான தேர்தலுக்காக தற்போது நடைபெற்று வரும் தேர்தல் நடவடிக்கைகளை எளிதாகவும் சிறப்பாகவும், வெளிப்படையானதாகவும் ஆக்குவதற்கென இந்திய தேர்தல் ஆணையம் தகவல் தொழில்நுட்ப செயலிகளின் பயன்பாட்டை அணிதிரட்டியுள்ளது. தேர்தல் செயல்பாட்டை கண்காணிப்பதற்கான தேர்தல் திட்டமிடலில் புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. வாக்காளர்கள் குறித்த தேசிய அளவிலான புள்ளிவிவரங்களின் தொகுப்பு, வாக்குச் சாவடிகளின் செயல்பாடு, பணியில் உள்ள அதிகாரிகளுக்கான வேலைப் பிரிவினை, கைபேசி செயலி மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், புவிசார் தகவல் முறை தொழில்நுட்பம் போன்றவற்றுடன் தங்களை இணைத்துக் கொண்ட வகையில் இந்தத் தகவல் தொழில்நுட்பச் செயலிகளின் வரம்பு அமைந்திருக்கும். இதுதொடர்பாக இந்திய தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ள முன்முயற்சிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை செயல்படுத்துதல் பற்றிய முக்கிய அம்சங்கள் கீழே தொகுத்துத் தரப்படுகின்றன:

தேர்தல் நிர்வாகத்தைச் சிறந்த முறையில் நடத்துவதற்கு உதவும் வகையில் தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்களில் *சமாதான், சுவிதா* மற்றும் *சுகம்* ஆகிய செயலிகள் செயல்படுத்தப்படுகின்றன.

*சமாதான்* என்பது பொதுமக்களின் குறைகளைக் களைவதற்கான முறை ஆகும். (இணையம் மூலமாக, இலவச தொலைபேசி எண் 1950 மூலமாக), இமெயில், கைபேசி செயலி, ∴பேக்ஸ், தபால், குறுஞ்செய்தி ஆகிய வழிகளில் பெறப்படும் புகார்களை இணையம் மூலமாகவே ஒழுங்குபடுத்தவும், புகார்களின் மீதான நடவடிக்கைகள் குறித்த விவரங்களை சோதிக்கவும் என பல வழிகளிலும் முழுமையான ஒரு முறையாக இந்த முறை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த பொதுமக்கள் குறைகளைக் களைவதற்கான முறைக்கென ஒரு ஆண்ட்ராய்ட் செயலியும் உருவாக்கப்பட்டுள்ளது.

*சுவிதா* என்பது வேட்பாளர்களும் அரசியல் கட்சிகளும் தேர்தல் தொடர்பான (கூட்டங்கள், ஊர்வலங்கள், வாகனங்கள், தற்காலிக தேர்தல் அலுவலகம், ஒலிபெருக்கிகள், ஹெலிகாப்டர்கள், ஹெலிபேட்கள் போன்றவற்றிற்கான) அனுமதி பெற விண்ணப்பம் செய்வதற்கான ஒற்றைச் சாளர முறையாகும். இது தொடர்பான கோரிக்கை கிடைக்கப்பெற்ற 24 மணி நேரத்திற்குள் உரிய அனுமதியை வழங்க இந்திய தேர்தல் ஆணையம் உரிய உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது.

*சுகம்* என்பது வாகன நிர்வாக முறையாகும். வாகனங்களுக்கான கோரிக்கை கடிதங்களை வழங்குவது, வாகனம் குறித்த விவரங்களை முகவரி, வாகன உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் ஆகியோரின் கைபேசி எண், வங்கிக் கணக்கு எண் போன்றவற்றை பதிவு செய்வது, ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு மாறுதல் செய்வது போன்றவற்றிற்கான வசதிகளைக் கொண்டதாக இது அமைந்துள்ளது. வாகன நிர்வாக முறைக்கென (*சுகம்*) ஒரு ஆண்டிராய்ட் செயலியும் உருவாக்கப்பட்டுள்ளது.

வாக்காளர்களின் வசதிகளை மேம்படுத்துவதற்கென மேலும் சில கைபேசி செயலிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தத் தேர்தல்களில் கீழ்கண்ட முக்கிய கைபேசி செயலிகள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன.

***மேட் டேட்டா:*** வாக்காளர் பட்டியலில் தேடும் வசதி, வாக்குச் சாவடிகள் அமைந்துள்ள இடங்கள் பற்றிய விவரங்கள் ஆகியவற்றுக்கான ஆண்டிராய்ட் செயலி.

***மேட் டான்:*** வாக்குப் பதிவு நாளன்று வாக்குச் சாவடியின் செயல்பாடுகளை கண்காணிப்பதற்கான ஆண்டிராய்ட் செயலி.

***எலெகாம்:*** தேர்தல் தொடர்பான செய்திகள்/ செய்திக் குறிப்புகள் ஆகியவற்றை வெளியிடுவதற்கான ஆண்டிராய்ட் செயலி.

***எஸ்.எம்.எஸ். தேர்தல் கண்காணிப்பு:*** வாக்குச்சாவடி அதிகாரி, பகுதி அதிகாரி ஆகிய தேர்தல் அதிகாரிகளிடமிருந்து பல்வேறு வகையான தகவல்களை குறுஞ்செய்தி வழியாகப் பெறுவதற்கான ஏற்பாடு. மற்றும் வாக்கு எண்ணிக்கையில் உள்ள போக்குகள்/ தேர்தல் முடிவு போன்றவற்றிற்கான *ஈ-கவுண்டிங்* என்ற ஆண்டிராய்ட் செயலி.

***பி.ஜி.ஆர்.எஸ். (பொதுமக்கள் குறை நிவர்த்திக்கான முறை)*** - மக்கள் தங்கள் குறைகளை தெரிவிப்பதற்கான ஒற்றைச் சாளர முறை. இந்த முறையானது பல்வேறு வழிகளில் பெறப்படும் புகார்களை உரிய அலுவலருக்கு அனுப்பி வைப்பதோடு, அதன் மீதான நடவடிக்கைகள் எந்த அளவில் உள்ளன என்ற தகவலையும் புகார் அளித்தவருக்கும் தெரிவித்த வண்ணம் இருக்கும். இந்தச் செயலியுடன் ஒரு குறு அழைப்பு மையமும் இணைக்கப்பட்டுள்ளது.

***ஜெனிசிஸ் & வாக்கு எண்ணிக்கைக்கு முன்பாக வாக்குப்பதிவு இயந்திரங்களின் வரிசைக்கிரமம் அற்ற வகையிலான பதிவுகள்*** - நியமனம் தொடர்பான வேட்பாளர் குறித்த விவரங்களை சேகரிப்பது மற்றும் வாக்குப் பதிவு இயந்திரங்களில் வரிசைக்கிரமம் அற்ற வகையில் பதிவுகளை முதல் மற்றும் இரண்டாவது முறை மாற்றி அமைப்பது.

***செலவு கண்காணிப்பு & வேட்பாளர் உறுதிமொழி இணைய வழி பதிவு:*** ஈ.ஈ.எம்.எஸ். (மாவட்டத் தேர்தல் அதிகாரியின் பரிசீலனை அறிக்கை) - வேட்பாளர்களால் பதியப்பட்ட செலவுக் கணக்குகளை சரிபார்ப்பதற்கான இணையம் வழிப்பட்ட கண்காணிப்பு மற்றும் தடம் பின்பற்றிச் செல்லும் முறை.

***வேட்பாளரின் செலவுகள் குறித்த சுருக்க அறிக்கை*** - வேட்பாளர்கள் செலவு குறித்த தங்களது சுருக்கமான அறிக்கையை பதிவு செய்வதற்கான இணைய வழி வசதி.

***வேட்பாளர்கள் உறுதிமொழி இணைய வழி பதிவு*** - இந்த மென்பொருள் இணைய வழி தங்கள் உறுதிமொழி படிவங்களை பதிவு செய்ய உதவுவதை நோக்கமாகக் கொண்டதாகும். தேர்தல் அதிகாரியால் இது பின்னர் சரிபார்க்கப்படும்.


***ஈ.சி.ஆர்.பி. வகை-*** தேர்தல் ஆணையத்தின் விவர அறிக்கை தயாரிக்க உதவும் திட்டம் - இதன்படி உறுதிமொழி மற்றும் சுருக்க அறிக்கை ஆகியவற்றை இணைய வழி பதிவு செய்வதற்கான உதவியை இதன் மூலம் பெறலாம்.

மேற்கூறிய தகவல் தொடர்பு தொழில்நுட்ப வசதிகள் என்ற இந்த அனைத்து நடவடிக்கைகள் மூலம் இந்த தேர்தல் நடைமுறை முழுவதையுமே எளிமையானதாக, சிக்கல் ஏதுமற்றதாக, வெளிப்படையானதாக, சிறப்பானதாக இருப்பதை இந்திய தேர்தல் ஆணையம் உறுதிப்படுத்துகிறது.

*****

# தேர்தல் சுவரொட்டிகள்






# அத்தியாயம் 3

## தேர்தல் சட்டங்கள்

இந்தியா, இறையாண்மை மிக்க, சோஷலிச, மதசார்பற்ற ஜனநாயக குடியரசாகும். ஜனநாயகம், இந்திய அரசியல் சாசனத்தில் பிரிக்க முடியாத அடிப்படை அம்சங்களில் ஒன்று. இது நமது அரசியல் சாசனத்தின் அடிப்படைக் கூறாகவும் உள்ளது. நமது அரசியல் சாசனத்தில் வலியுறுத்தியிருப்பது போல், ஜனநாயகம் என்பது, மக்களின் பிரதிநிதிகள் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, நாடாளுமன்றத்திலும், சட்டப்பேரவைகளிலும் இடம் பெற்று இருப்பதாகும். ஜனநாயகம் நிலைத்து நிற்க, சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட வேண்டும். நாடு நல்ல முறையில் ஆட்சி செய்யப்படுவதற்கு, சிறந்தவர்கள் மக்களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்து எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். சிறந்த நல்ல மனிதர்கள் மக்களின் பிரதிநிதிகளாகத் தேர்த்தெடுக்கப்படுவதற்குத் தேர்தல்கள் நேர்மையாகவும், நியாயமாகவும், இருப்பதுடன், வாக்காளர்கள் தங்களது வேட்பாளர்களை எந்த விதமான கட்டுப்பாடும், நெருக்குதலும் இல்லாமல் சுதந்திரமாக தேர்வு செய்யக்கூடிய சூழ்நிலை நிலவ வேண்டும். எனவே நேர்மையான, நியாயமான சுதந்திரமான தேர்தல்கள் ஜனநாயகத்தின் வலுவான அடித்தளமாக அமைகிறது.

இந்தியா பிரிட்டனின் வெஸ்ட்மின்ஸ்டர் நாடாளுமன்ற அரசு முறையை ஏற்றுக் கொண்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுத் தலைவர், துணைத் தலைவர், தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றம் மற்றும் ஒவ்வொரு மாநிலத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவை ஆகியவற்றை நாம் கொண்டுள்ளோம். மேலும் இப்பொழுது நாம் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர சபைகள், பஞ்சாயத்துக்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளையும் பெற்றுள்ளோம். இந்த அமைப்புகளுக்கும், பதவிகளுக்கும் நியாயமான மற்றும் நேர்மையான தேர்தல்கள் நடைபெறுவதற்கு 3 அடிப்படைத் தேவைகள் முக்கியமானதாகும்:

(1) இந்தத் தேர்தல்களை நடத்துவதற்கு ஒரு அதிகார அமைப்பு. இந்த அமைப்பு அரசியல் மற்றும் அதிகார தலையீடுகளால் பாதிக்கப்படாததாக இருக்க வேண்டும்.

(2) தேர்தல்களை நடத்தும் பொறுப்புடைய ஆணையம் தேர்தலை நடத்துவதற்கு வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளை முழுமையாக நிறைவேற்ற வேண்டும்.

(3) இந்தத் தேர்தல்களின் பொழுது எழக்கூடிய ஐயப்பாடுகள் மற்றும் வேறுபாடுகளைக் களையக்கூடிய அமைப்பு.

அரசியல் சாசனம் இந்த விஷயங்களுக்கு உரிய கவனம் செலுத்தியிருப்பதுடன், இவற்றை எதிர்கொள்ளத்தக்க ஏற்பாடுகளையும் உருவாக்கியுள்ளது.

சுயேச்சை அதிகாரம் கொண்ட தேர்தல் ஆணையத்தை அரசியல் சாசனம் உருவாக்கியுள்ளது. வாக்காளர்கள் பட்டியல்களைத் தயாரிப்பதை மேற்பார்வையிடுவது, வழிகாட்டு நெறிகளை அளிப்பது, நிர்வகிப்பது போன்ற பொறுப்புகள் இந்த ஆணையத்திற்கு

வழங்கப்பட்டுள்ளன. மேலும், குடியரசுத் தலைவர், துணைத் தலைவர் பதவிகளுக்கும் நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளுக்கும் தேர்தல்களை இந்த ஆணையம் நடத்துகிறது. இதைப்போன்று நகர சபைகள், பஞ்சாயத்துக்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல்கள் நடத்துவதற்கு மற்றொரு சுயேச்சை அதிகார அமைப்பை அரசியல் சாசனம் உருவாக்கியுள்ளது.

குடியரசுத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் பதவிக்கும், நாடாளுமன்ற சட்டப்பேரவைகளுக்கும் தேர்தல் நடத்தும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. நகர சபைகள், பஞ்சாயத்துக்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல்கள் நடத்துவது குறித்தான சட்டங்கள் அந்தந்த மாநில சட்டப்பேரவைகள் இயற்றும். குடியரசுத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல்கள் குறித்து எழும் ஐயப்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் உச்சநீதிமன்றம் கவனிக்கும்.

நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்கள் தேர்தல்கள் குறித்தான வழக்குகளை தொடக்கத்தில் அந்தந்த மாநில உயர்நீதிமன்றங்கள் விசாரிக்கும். அந்த தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்திலும் விண்ணப்பிக்க முடியும். நகர சபைகள் போன்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் தொடர்பாக எழும் வழக்குகளை அம்மாநில அரசுகள் உருவாக்கியுள்ள சட்டங்களுக்கு ஏற்ப கீழ் நீதிமன்றங்கள் விசாரிக்கும்.

குடியரசுத் தலைவர், துணைத் தலைவர் பதவிகளுக்கான தேர்தல் சட்ட விதிமுறைகளை குடியரசுத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல் சட்டம் - 1952 என்ற படிவில் நாடாளுமன்றம் இயற்றியது. இந்தச் சட்டங்களுக்கு கூடுதலாக வலு சேர்க்கும் வகையில் குடியரசுத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல் விதிமுறைகள் 1974 ல் சேர்க்கப்பட்டன. மேலும் விதிமுறைகளில் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்கள் மற்றும் உத்தரவுகளும் பின்னர் சேர்க்கப்பட்டன.

நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டப்பேரவைகளுக்கு தேர்தல்கள் நடத்துவதற்கு 1950-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் மற்றும் 1951-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் விதிமுறைகள் வகை செய்கின்றன.

1950-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், வாக்காளர்கள் பட்டியல்களைத் தயாரிப்பது மற்றும் திருத்தி அமைப்பது பற்றிய விஷயங்கள் குறித்து விவரிக்கிறது. இந்தச் சட்டத்தின் ஷரத்துக்களை விரிவுபடுத்தும் வகையில் பரவலான விதிமுறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. மத்திய அரசு, தேர்தல் ஆணையத்தின் ஆலோசனையின் அடிப்படையில் 1960-ம் ஆண்டு வாக்காளர்கள் பதிவு விதிமுறைகளை வரைந்தது. வாக்காளர்கள் பட்டியல்களைத் தயாரித்தல், குறிப்பிட்ட கால இடைவெளியில் அவற்றைத் திருத்தி அமைத்தல், பட்டியல்களை மேம்படுத்துதல் போன்ற எல்லா விஷயங்கள் குறித்தும் இந்த விதிமுறைகள் எடுத்துரைக்கின்றன. பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டைகளை மாநில அரசின் செலவில் தயாரித்து வழங்குவதற்கும் இந்த விதிமுறைகள் வகை செய்கின்றன. மேலும் புகைப்படத்துடன் கூடிய வாக்காளர்கள் பட்டியல்களைத் தயாரிப்பதற்கும் இந்த விதிகள் இடமளிக்கின்றன. வாக்காளர்களின் மற்ற விவரங்களும் இப்பட்டியலில் இடம் பெற்று இருக்கும். இந்த

விதிமுறைகளைப் பயன்படுத்தி, எல்லா நாடாளுமன்ற சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் வாக்காளர்களின் புகைப்படத்துடன் கூடிய வாக்காளர்கள் பட்டியலை தேர்தல் ஆணையம் தயாரித்து வருவதுடன், வாக்காளர்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

தேர்தல் நடத்துவதற்கான அனைத்து செயல்பாடுகளும் 1951-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டது. தேர்தல் ஆணையத்துடன் கலந்து மத்திய அரசால் உருவாக்கப்பட்ட 1961-ம் ஆண்டு தேர்தல் விதிமுறைகள், இந்தச் சட்டத்தை மேலும் வலுப்படுத்துவதாக உள்ளன. இந்தச் சட்டமும் விதிகளும் தேர்தல் நடத்துவதற்கான அனைத்து கட்டங்கள் பற்றியும் விரிவான சரத்துகளை கொண்டுள்ளது. தேர்தலுக்கான அறிவிக்கை வெளியிடுதல், வேட்பு மனுத்தாக்கல், பரிசீலனை, விலக்கிக் கொள்ளுதல், வாக்குப்பதிவு, எண்ணிக்கை தேர்தல் முடிவிற்குப் பின் தேர்ந்தெடுக்கப்பட்ட அவைகளை தேர்தல் முடிவின் அடிப்படையில் அமைத்தல் போன்ற பல்வேறு விஷயங்கள் குறித்து இவை எடுத்துரைக்கின்றன.

மேற்பார்வை, தேர்தல்களை நடத்துவதற்கான உத்தரவுகள் வெளியிடுதல் போன்றவற்றிற்கு தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் அளித்துள்ள அரசியல் சாசனம், அவ்வப்பொழுது எழும் நிலமையை சமாளிக்க உதவும் வகையில் சிறப்பு உத்தரவுகளையும், வழிகாட்டு நெறிகளையும் வெளியிடவும் அதிகாரம் வழங்கியுள்ளது.

1968-ம் ஆண்டு தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் வழங்குதல்) உத்தரவு, தேசிய தேச மற்றும் மாநிலங்கள் நிலையில் அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் வழங்குதல், தேர்தல் சின்னங்கள் ஒதுக்கீடு, கட்சிகள் பிளவுபடும்பொழுது ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் போன்றவை இவற்றிற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன.

அரசியல் கட்சிகள், மற்றும் வேட்பாளர்களுக்கான மாதிரி நடத்தை விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்காக தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் இந்த வகையைச் சார்ந்ததாகும். தேர்தல்களின்போது, அரசியல் கட்சிகள் செயல்படுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளான, மாதிரி நடத்தை விதிமுறைகள் அரசியல் கட்சிகளே உருவாக்கியவை என்பது சிறப்பான அம்சமாகும். தேர்தல்களின்போது எல்லா அரசியல் கட்சிகளுக்கும் சமவாய்ப்பை அளிப்பதை இந்த மாதிரி நடத்தை விதிமுறைகள் உறுதி செய்கின்றன. குறிப்பாக, ஆளும் கட்சி வேட்பாளர்கள் தங்களது வாய்ப்பைப் பெருக்கிக் கொள்ளும் வகையில் அரசு இயந்திரத்தையும் அதிகாரத்தையும் தவறாகப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்த இவை வகை செய்கின்றன.

தேர்தல் முடிவுகள் அல்லது தேர்தல்கள் குறித்து பின்னர் எழும் எல்லாப் பிரச்சினைகளும் வழக்குகளும், 1951-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப கையாளப்படுகின்றன. இந்தச் சட்டத்தின்கீழ், எல்லா ஐயப்பாடுகள் மற்றும் வழக்குகளை அம்மாநில உயர்நீதிமன்றத்தில் எழுப்பலாம். ஆனால் தேர்தல்கள் முடிந்த பிறகே இதை எழுப்பமுடியும். தேர்தல் நடைமுறைகள் செயல்பாட்டில் இருக்கும்பொழுது, இதை மேற்கொள்ள முடியாது.

நாடாளுமன்ற இரு அவைகள் மற்றும் சட்டமன்ற தேர்தல்கள் சம்மந்தப்பட்ட எல்லா விஷயங்களுக்கும், மேலே குறிப்பிடப்பட்டுள்ளதை 1950 மற்றும் 1951-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டங்கள், 1960-ம் ஆண்டு வாக்காளர்கள் பதிவு விதிமுறைகள், 1961-ம் ஆண்டு தேர்தல்களை நடத்துவதற்கான விதிகள், ஆகியவை முழு அளவு நெறிமுறைகளை வழங்குகின்றன. தேர்தல் ஆணையத்தின் முடிவுகள் அல்லது இந்த ஆணையத்தின் கீழான அதிகாரிகளின் உத்தரவுகளினால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த சட்டங்கள் மற்றும் விதிமுறைகளின் கீழ் தீர்வு காண முடியும்.

இந்தச் சட்டங்கள், மற்றும் விதிமுறைகள், வாக்காளர்கள் பட்டியல்களைத் தயாரித்தல், திருத்தி அமைத்தல், தேர்தல்களை நடத்துதல் ஆகியவை சம்பந்தமான உத்தரவுகளுக்கும் வழிகாட்டுதல்களுக்கும் வகை செய்கின்றன. இவை குறித்த வழக்கு விஷயங்களிலும் தேர்தல் ஆணையமே நடவடிக்கை எடுக்க வகை செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தேர்தல் ஆணையம் வழங்கியுள்ள உத்தரவுகளும், வழிகாட்டு நடவடிக்கைகளும் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்றம் இயற்றியுள்ள சட்டங்கள் அவற்றை வலுப்படுத்தும் விதிமுறைகள், தேர்தல் ஆணையத்தின் உத்தரவுகள் மற்றும் வழிகாட்டு நடவடிக்கைகள் அவ்வப்போது உச்சநீதிமன்றத்தின் பரிசீலனைக்கு வந்துள்ளன. பல முக்கியமான விஷயங்களில் இந்தச் சட்டங்களுக்கு உறுதுணையாக உச்சநீதிமன்றம் பரிந்துரைகளை வழங்கியுள்ளது. இதற்கு சில உதாரணங்கள் எடுத்துரைக்கலாம். மொஹிந்தர் சிங், கில் மற்றும் தலைமைத் தேர்தல் ஆணையருக்கு இடையிலான வழக்கில், தேர்தல் ஆணையம் அரசியல் சாசனத்தின் உருவாக்கம் என்பதால், நாடாளுமன்றம் இயற்றியுள்ள சட்டங்களுக்கு தேவைப்படும் சமயத்தில், உறுதுணையான விதிமுறைகளை வகுக்கலாம் என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. அந்த அதிகாரத்தின் வாயிலாகவே ஆணையம் மாதிரி நடத்தை விதிமுறைகளை செயல்படுத்துகிறது. தேர்தல்கள் நியாயமாகவும், நேர்மையாகவும் நடைபெறுவதற்கு அரசியல் கட்சிகளே முன்வந்து அளித்துள்ள பிரத்தியேக பங்களிப்பு இது.

மேலும், சிவில் உரிமைகளுக்கான மக்கள் ஒன்றியத்தின் வழக்கில், நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளரும், குற்றப் பின்னணி ஏதேனும் இருந்தால் அது பற்றியத் தகவல்களையும், சொத்து, கடன், பற்றிய தகவல்களையும், துணைவியர் மற்றும் குழந்தைகள் குறித்த தகவல்களையும் வேட்பாளரின் கல்வித் தகுதி பற்றியும் பிரமாண பத்திரம் அளிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. இதனால் ஜனநாயகத்தில் உண்மையான ஆட்சியாளர்களான மக்கள் தங்கள் பிரதிநிதிகளைப் பற்றித் தெரிந்து கொண்டு தெரிவு செய்ய இயலும். வேட்பாளர் பிரமாண பத்திரத்தில மேலே குறிப்பிட்ட விவரங்களை அளிக்கத் தவறினால், தேர்தல் அலுவலர் எடுத்துரைக்கலாம் என மற்றொரு வழக்கில் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. தவறும்பொழுது அவரது வேட்பு மனு பரிசீலனையின்போது நிராகரிக்கப்படக் கூடும்.

ஒரு தொகுதியில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்கள் மீதும் அதிருப்தி வெளியிட வாக்காளர்களுக்கு உரிமை உண்டு என்றும், மறுதலிப்பு வாக்கைப் பதிவு செய்ய முடியும் என்று மற்றொரு வழக்கின் வாயிலாக உச்ச நீதிமன்றம் குறிப்பிட்ட பங்களிப்பை

அளித்துள்ளது. உச்ச நீதிமன்றத்தின் இந்த உத்தரவை செயல்படுத்தும் வகையில் தேர்தல் ஆணையம் வாக்குப்பதிவு இயந்திரத்தில் கூடுதலாக ஒரு தெரிவைப் பதிவு செய்யும் வகையில் நோட்டா என்ற பெயரில் இதற்கென ஒரு பொத்தானை வைத்துள்ளது. இது வாக்காளர்கள் தங்களது விருப்பத்தை இரகசியமாக பதிவுசெய்யும் வசதியை அளித்துள்ளது. ஆனால் இந்த மாதிரி எதிர்மறையாகப் பதிவு ஆகும் வாக்குகளின் எண்ணிக்கை உயர்ந்த அளவாக பதிவாகும் வேட்பாளர்களின் வாக்குகளின் எண்ணிக்கைக்கும் அதிகமாக இருந்தால், அவரது தேர்தலைப் பாதிப்பது குறித்து சட்டம் குறிப்பிடவில்லை. டாக்டர் சுப்பிரமணயன் சுவாமி தொடர்ந்த வழக்கு ஒன்றில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வாக்காளர்கள் தங்கள் வாக்கை சரிபார்ப்பதற்கான சீட்டு தரும் அமைப்பு இருக்க வேண்டுமென்று, உச்சநீதிமன்றம் முக்கியமான தீர்ப்பை வழங்கியுள்ளது.

ஒரு வாக்காளர் வாக்கைப் பதிவு செய்த பின், அவர் வாக்கு அளித்த வேட்பாளர் பெயர், சின்னம் அச்சிடப்பட்ட சீட்டு வழங்கும் வசதியே இந்த முறையாகும். இந்த முறையினால், வாக்காளர்கள், தாங்கள் அளித்த வாக்குகள், சரியான முறையில் பதிவாகி அவரது விருப்ப வேட்பாளருக்கு கிடைத்துள்ளது என்பதை உறுதி செய்து கொள்ள இயலும்.


**இந்தியத் தேர்தல்கள் பற்றிய சில முக்கிய அம்சங்கள்**

2007-ம் ஆண்டு நடைபெற்ற கேரள சட்டப்பேரவைத் தேர்தலின்பொழுது, பெரம்பரா சட்டப்பேரவைத் தொகுதியில் ஒரே ஒருவருக்காக ஒரு வாக்குச்சாவடி அமைக்கப்பட்டது. இதேப்போன்று 2012-ம் ஆண்டு ஒரே ஒரு வாக்காளருக்காக குஜராத்தில் கிர்வளாகத்தில் ஒரு வாக்கு சாவடி அமைக்கப்பட்டது.

ஜம்மு காஷ்மிர் மாநிலத்தில் மிகவும் உயரமான இடத்தில் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டன. லேஹ் சட்டப்பேரவைத் தொகுதியில் 5 ஆயிரம் மீட்டர் உயரத்தில், லேஹ் மற்றும் அன்லே பூவிலும் அமைக்கப்பட்டன.

1996-ம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலின்பொழுது மொடக்குறிச்சி தொகுதியில் 1033 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

மக்களவைத் தொகுதியில் மிக அதிக அளவு வேட்பாளர்கள் போட்டியிட்ட தொகுதி நல்கொண்டா ஆகும். ஆந்திர மாநிலத்தில் உள்ள இத்தொகுதியில் 1996-ம் ஆண்டு தேர்தலில் 480 வேட்பாளர்கள் களத்தில் இருந்தனர்.



# தேர்தல் செலவைக் கண்காணிக்கும் அமைப்பு

# அத்தியாயம் 4
# தேர்தல் செலவைக் கண்காணிக்கும் அமைப்பு

குடியரசுத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் பதவிகளுக்கும் நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளுக்கும் தேர்தலை தேர்தல் ஆணையம் நடத்துகிறது. தேர்தல்களை மேற்பார்வையிடுவது, வழிகாட்டுநெறிகளை வகுப்பது, தேர்தல்களை நடத்துவது ஆகியவற்றை தேர்தல் ஆணையம் மேற்கொள்ள அரசியல் சாசனம் அந்த அமைப்பிற்கு அதிகாரம் வழங்கியுள்ளது.

நிதி வசதி இல்லாமல் பல கட்சிகளைக் கொண்ட ஜனநாயகம் திறம்பட செயல்பட முடியாது என்பது தெளிவான உண்மையாகும். ஆனால் 'பணசக்தி'யில் சில எதிர்மறை ஆபத்துக்களும் உள்ளன. அவற்றை கீழ்கண்டவாறு பட்டியல் இடலாம்.

1) போட்டியிடும் கட்சிகளுக்கு சம வாய்ப்பு இல்லாமல் போவது, போட்டி நியாயமான முறையில் இல்லாதிருப்பது.
2) சில பிரிவினர்களுக்கு ஏற்படும் சாதகமில்லாத சூழ்நிலை இதனால் அரசியலில் இருந்து தனிமைப்படுத்துவது.
3) பிரச்சார இயக்கக் கடன்கள்.
4) கறைபடிந்த ஆளுகை. சட்டத்தின் ஆட்சிக்கு தடங்கல்.

பொதுத் தேர்தல்கள் மற்றும் சட்டப்பேரவைத் தேர்தல்களில் பணசக்தியின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஆணையம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதற்காக, தேர்தல் செலவினங்களைக் கண்காணிப்பதற்காக விரிவான அமைப்பை தேர்தல் ஆணையம் ஏற்படுத்தியுள்ளது. இந்த நடவடிக்கை முதல் முறையாக 2010-ம் ஆண்டு பீஹாரில் சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து 2010 முதல் 2013-ம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில், மேற்கு வங்காளம், அசாம், கேரளா, தமிழ்நாடு, புதுச்சேரி, உத்தரபிரதேசம், பஞ்சாப், உத்தராகண்ட், மணிப்பூர், கோவா, ஆந்திரப்பிரதேசம், ஜார்க்கண்ட், குஜராத், இமாச்சல்பிரதேசம், மேகாலயா, நாகலாந்து, திரிபுரா, கர்நாடகா, ராஜஸ்தான், தில்லி, மத்தியப்பிரதேசம், சத்திஸ்கர், மிசோராம் ஆகிய மாநிலங்களில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்கள் மற்றும் இடைத் தேர்தல்களில் கண்காணிப்புப் பணி வெற்றி கரமாகவும், முறையாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த நடவடிக்கைகளின் காரணமாக, பெரிய அளவிலான பணம் எடுத்துச் செல்வது தடுக்கப்பட்டதுடன், பறிமுதலும் செய்யப்பட்டது. இந்த நடவடிக்கையின் மூலம் ரூ.215 கோடி பறிமுதல் செய்யப்பட்டது.

**தேர்தல் செலவு கண்காணிப்பு முறையின் முக்கிய அம்சங்கள்:**

1. போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளரும், தேர்தலுக்கான எல்லாப் பெரிய செலவினங்களையும் மேற்கொள்ள தனி வங்கிக் கணக்கு ஒன்றைத் தொடங்க வேண்டும். இத்தகைய செலவினங்களை இந்த வங்கிக் கணக்கின் மூலம் காசோலை அல்லது வரைவோலை மூலம் மேற்கொள்ள வேண்டும்.

2. பொது மக்களிடமிருந்து புகார்களைப் பெற 'புகார் கண்காணிப்பு' மையம் ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படும். 24 மணி நேரமும் செயல்படும் இம்மையத்துடன் கட்டணமில்லாத தொலைபேசி மூலம் பொதுமக்கள் தொடர்பு கொள்ள முடியும்.
3. ஒவ்வொரு தொகுதியிலும் பறக்கும்படை, உடனடியாக செயல்பாட்டுப் படை, ஒரே இடத்தில் இருந்து செயல்படும் கண்காணிப்பு குழு ஆகியவை அமைக்கப்படும். விதிக்குப் புறம்பாக பணப் பரிமாற்றம், பரிசுப் பொருட்களையோ அல்லது மதுவையோ, விநியோகித்தல், வாக்காளர்களை ஈர்க்கும் வகையில் செயல்படுதல் போன்றவற்றைக் கண்காணிக்கும் பணியை, செயல் மாஜிஸ்திரேட் தலைமையிலான இக்குழுக்கள் மேற்கொள்ளும். தேர்தல் செலவினங்கள் பற்றிய எல்லாப் புகார்களையும் இக்குழு கவனிக்கும்.
4. மாநிலத்தில் உள்ள எல்லா விமான தளங்கள், பெரிய இரயில் நிலையங்கள், ஓட்டல்கள், பண்ணை இல்லங்கள், விதிக்கு முரணாக பணப் பரிமாற்றத்தைச் செயல்படுத்தும் ஹவாலா முகவர்கள், இடைத்தரகர்கள், பரிமாற்ற பணத்தை எடுத்துச் செல்லுபவர்கள், அடகுக்கடைக்காரர்கள், மற்றும் சந்தேகத்துக்கு உரிய முகமைகள், நபர்கள், ஆகியோர் வருமான வரித்துறையின் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படுவார்கள். தேவைப்பட்டால் வருமான வரிச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.
5. தேர்தல் விதிகள் நடைமுறையில் இருக்கும்பொழுது எந்த வங்கிக் கணக்கில் இருந்தும் சந்தேகத்துக்கு உரிய வகையில் பணம் எடுக்கப்படுவது கண்காணிக்கப்படும்.
6. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேர்தல் செலவினப் பார்வையாளர்கள் நியமிக்கப்படுவார்கள். வருமானவரித்துறை, கலால் மற்றும் சுங்கத்துறை, நிதி மற்றும் கணக்குத்துறை போன்றவற்றிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மூத்த அதிகாரிகளின் சேவை பெறப்பட்டு, வேட்பாளரின் தேர்தல் செலவினத்தை மேற்பார்வையிடும் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள். இந்த அதிகாரிகள் பிற மாநிலங்களைச் சார்ந்தவர்களாக இருப்பார்கள்.
7. இந்த செலவின பார்வையாளர்களுக்கு உதவ ஒவ்வொரு தொகுதியிலும் துணை செலவின பார்வையாளர் நியமிக்கப்படுவார்கள்.
8. ஒவ்வொரு தொகுதியிலும் எல்லா வேட்பாளர்களும் மேற்கொள்ளும் பெரிய செலவினங்கள் கண்டறியப்பட்டு அதன் அடிப்படையில் "நிழல் கண்காணிப்பு பதிவேடுகள்" பராமரிக்கப்படும்.
9. புகைப்படக் கலைஞர்கள் மற்றும் அரசு அலுவலர் கொண்ட வீடியோ கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்படும். இந்தக் குழு வேட்பாளர்களின் பிரச்சாரத்தில் பெரிய செலவுகளை வீடியோவில் பதிவு செய்யும்.
10. ஒவ்வொரு தொகுதியிலும் கணக்கிடும் குழுவொன்று அமைக்கப்படும். இக்குழு நிழல் கண்காணிப்பு பதிவேட்டையும் ஆதாரங்களையும் பராமரிக்கும்.
11. தேர்தல் விளம்பரங்கள், பணத்திற்காக வெளியிடப்பட்டுள்ள செய்திகள் என்று சந்தேகிக்கப்படுவனவற்றைக் கண்காணிக்க பத்திரிகைகள் மற்றும் மின்னணு ஊடகங்கள், கேபிள் கட்டமைப்பு சமூக ஊடகங்கள் போன்றவற்றைக் கண்காணிக்க

ஊடக சான்றிதழ் மற்றும் ஊடகச் செலவுக் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்படும்.

12. நியாயமான மற்றும் சுதந்திரமான வாக்களிப்புக்கான இயக்கம் வாக்களர்களிடையே விழிப்புணர்வையும், பணம் மற்றும் பரிசுப் பொருட்களைப் பெற்றுக் கொண்டு வாக்களிப்பது சட்ட விரோதமானது என்பது குறித்தும் எடுத்துரைக்கப்படுகிறது.

தேர்தல்கள் நியாயமாகவும், நேர்மையாகவும் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் தேர்தல்களில் பணசக்தியை தவறாக பயன்படுத்துவதைத் தடுக்க தேர்தல் செலவின கண்காணிப்பு அமைப்பு நடைமுறைக்கு வந்துள்ளது. கீழ்கண்ட அணுகுமுறை கடைப்பிடிக்கப்படுகிறது.

1. தேர்தலின் போது மத்திய, மற்றும் மாநில அரசு துறைகளிடையே நேரடித் தகவல் பரிமாற்றம். சட்டத்திற்கு புறம்பான பண பரிமாற்றம், போதைப் பொருள் நடமாட்டம், அந்திய செலாவணி மோசடி போன்றவற்றைத் தடுத்தல், வேட்பாளர்கள் அவரது முகவர்கள், அவர் சார்ந்த கட்சியினர் ஆகியோர் பணசக்தியை தவறாகப் பயன்படுத்துவதை தடுத்தல்.
2. பண நடமாட்டத்தைத் தடுக்க கண்காணிப்பை மேம்படுத்துதல், தேர்தல் நடைபெறும் மாநிலங்களில் வேட்பாளர்கள், அவரது முகவர்கள், மற்றும் அவரது கட்சியினர் விதிக்குப் புறம்பாக பணம் மற்றும் விலை உயர்ந்த உலோகங்களை எடுத்துச் செல்லுவதில் ஈடுபடுவதை தடுக்க, கண்காணிக்கும் பணியில் மத்திய தொழில்துறை பாதுகாப்புப்படையினர் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.
3. தேர்தல் நடைபெறும் மாநிலங்களில் உள்ள எல்லா பெரிய விமான தளங்களிலும், "விமான நிலையங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள புலனாய்வு அமைப்பு அமைத்து" விழிப்புடன் செயல்படச் செய்யுமாறு மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் கேட்டுக் கொள்ளப்படும்.
4. மத்திய அரசின் நிதி புலனாய்வுத்துறை போன்ற அமைப்புகள், வங்கிகளில் சந்தேகத்துக்குரிய வகையில் நடைபெறும் பண பரிமாற்றம் குறித்து தகவல் தருமாறு கூறப்பட்டுள்ளது. மேலும் குறிப்பிட்ட அளவிற்கு மேல் பணம் எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் கண்காணிக்குமாறும் கூறப்பட்டுள்ளது.
5. தேர்தல் நடைபெறும் சர்வதேச எல்லை மாநிலங்களில் சட்ட விரோதமான பொருட்கள் மற்றும் ரொக்கம் போன்றவற்றின் நடமாட்டங்களின் மீது தீவிர விழிப்புடன் செயல்படுமாறு எல்லைக் காவல் படையினர் மற்றும் பாதுகாப்புப் படையினர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.
6. சரியான செலவின கணக்குகளைச் சமர்ப்பிக்காத வேட்பாளர்களின் வழக்குகள் 1951-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துச் சட்டத்தின் 10-ஏ-ன் கீழ் தகுதி நீக்க நடைமுறைகள் ஆராயப்பட்டு, பரிசீலிக்கப்படும்.

கடந்த நான்கு ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில், பணச்சக்தியின் எதிர்மறை விளைவுகளைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கைகள் பெரிதும் உதவியுள்ளன. எனினும், புரையோடிப் போன இந்தத் தீய விளைவுகளை முழுமையாக அகற்ற பயணிக்க வேண்டிய தொலைவு அதிகம் உள்ளது. தேர்தல்களில் பணசக்தியை

பயன்படுத்துவதற்கு எதிராக பொது விழிப்புணர்வை ஏற்படுத்த தேர்தல் ஆணையம் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு சிந்தனைவாதிகளும், ஊடகங்களும், சமுதாய அமைப்புகளும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

***அதிக பட்ச தேர்தல் செலவுகள் குறித்த விதிகள், சட்டப் பிரிவு 90, தேர்தல் நடத்தை விதிகள், 1961ன் படி:***

அங்கீகரிக்கப்பட்ட தேர்தல் நடத்தை விதிகள் 1961, பிரிவு 77ல் உள்ளபடி, ஒரு மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தில் தேர்தல் தொடர்பாக ஏற்படக்கூடிய மொத்த செலவானது, பத்தி 2ன்படி கீழுள்ள தொகைக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(அ) மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தில் உள்ள ஒரு நாடாளுமன்றத் தொகுதியில் பத்தி 3ல் உள்ள தொகையை மீறாமல் இருக்க வேண்டும்.

(ஆ) மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தில் ஒரு சட்டமன்றத் தொகுதியில் பத்தி 4ல் உள்ள தொகையை மீறாமல் இருக்க வேண்டும்.

இந்த வகையில் தமிழ்நாட்டில் நாடாளுமன்ற தேர்தலில் ஒரு தொகுதிக்கு ரூ. 40 லட்சமும், சட்டமன்றத் தொகுதிக்கு ரூ. 16 லட்சமும் தேர்தல் செலவுத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரிக்கு நாடாளுமன்றத் தொகுதிக்கு அதிகபட்ச செலவு வரம்பாக ரூ. 32 லட்சமும் சட்டமன்ற தொகுதிக்கு ரூ. 8 லட்சமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# “ஸ்வீப்”



## அனைவரையும் தேர்தலில் பங்கேற்க வகை செய்யும் முயற்சிகள்


# அத்தியாயம் 5

# "ஸ்வீப்" -அனைவரையும் தேர்தலில் பங்கேற்க வகை செய்யும் முயற்சிகள்

"இந்திய குடி மக்களாகிய நாங்கள் ஜனநாயகத்தின் மீது முழு நம்பிக்கை கொண்டுள்ளோம். நமது நாட்டின் ஜனநாயக பாரம்பரியத்தையும், அமைதியான, நியாயமான சுதந்திர பண்புகளையும் பேண உறுதி கொள்கிறோம். மதம், இனம், ஜாதி, சமுதாயம், மொழி போன்ற உணர்வுகளுக்கும், மற்ற கவர்ச்சிகளுக்கும் இலக்காகாமல் எல்லாத் தேர்தல்களிலும் அச்சமின்றி வாக்களிக்க உறுதி பூணுகிறோம்" என்ற உறுதிமொழி, கடந்த மூன்று ஆண்டுகளில் புதிய வாக்காளர்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது. இது இளைய தலைமுறையினர் தேர்தல் குறித்து கொண்டிருந்த எண்ணத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் முயற்சியில் மேற்கொள்ளப்பட்ட "ஸ்வீப்" என்றழைக்கப்படும் "வாக்காளர் விழிப்புணர்வு மற்றும் பங்களிப்பு இயக்கம்" இதற்கு வழி வகுத்துள்ளது.



வாக்காளர்களின் பங்கேற்பை அதிகரிக்கும் விதமாக தேர்தல் ஆணையம் ஸ்வீப் (Systematic Voters' Education and Electoral Participation) என்ற பெயரில் பிரச்சார நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. ஆணையத்தின் இந்த சிறப்பான முயற்சி தேர்தல் நடைமுறையின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் புது உத்வேகம் அளித்துள்ளது. வாக்குப்பதிவில் பங்களிப்பு மேம்படுவதையும் உறுதி செய்துள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் வாக்காளர்களின் பதிவு குறிப்பாக, இளைய தலைமுறையினர் பதிவு செய்து கொள்வது கணிசமாக அதிகரித்துள்ளது. இது 10 - 15 சதவீதத்திலிருந்து 30 - 35 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. 2010ம் ஆண்டிலிருந்து நடைபெற்ற எல்லா சட்டப்பேரவைத் தேர்தல்களிலும் வாக்குப்பதிவு சதவீதம் அதிகரித்துள்ளது. இதில் இளைஞர்கள் மற்றும் மகளிரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.




வாக்காளர்களிடையே காணப்படும் குறைந்த விழிப்புணர்வு மற்றும் குறைந்த சதவீத வாக்குப்பதிவு நிலையை எடுத்துரைக்கும் வகையில், 2010ம் ஆண்டு வைர விழாவைக் கொண்டாடிய இந்தியத் தேர்தல் ஆணையம் "வலுவான ஜனநாயகத்திற்கு பெரும் பங்களிப்பு" என்பதை பிரகடன வாசகமாக ஏற்றுக் கொண்டது. இதே ஆண்டு நடைபெற்ற பீகார் சட்டப்பேரவைத் தேர்தலின்போது வாக்குப்பதிவு சதவீதத்தை அதிகரிப்பதற்கான "ஸ்வீப்" திட்டம் தொடங்கியது. தேர்தல் நடைமுறையில், மக்களின் பங்களிப்பை மேம்படுத்துவதற்கு உதவும் பல்வேறு கொள்கை முன் முயற்சிகளும், செயல்பாடுகளும், இந்தத் திட்டத்தில் அடங்கும். இதையடுத்து, மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக, பல மாநிலங்களில் சட்டப்பேரவைத் தேர்தல்களில் வாக்குப்பதிவு சதவீதம் அதிகரித்தது. 2009-ம் ஆண்டு இறுதியில் நடைபெற்ற ஜார்க்கண்ட மாநிலத் தேர்தலில் நடைமுறைப்படுத்தப்பட்ட தகவல் விழிப்புணர்வு மற்றும் தகவல் தொடர்பு இயக்கம், 2010-ம் ஆண்டு பீகாரில் நடைபெற்ற தேர்தலின்பொழுது, "ஸ்வீப்" திட்டமாகத் தொடர்ந்தது. பின்னர், தமிழ்நாடு, கேரளா, அசாம், மேற்கு வங்காளம், ஆகிய மாநிலங்களிலும், 2011-ல் புதுச்சேரியிலும் இது தொடர்ந்தது. உத்தரப்பிரதேசம், கோவா, பஞ்சாப், உத்தர்காண்ட், மணிப்பூர் ஆகிய மாநிலங்களிலும், 2012-ல் இமாச்சலபிரதேசம் மற்றும் குஜராத்தில் நடைபெற்ற தேர்தல்களிலும், 2013-ம் ஆண்டு துவக்கத்தில் திரிபுரா, மேகாலயா, நாகலாந்து ஆகிய வடகிழக்கு மாநிலங்களிலும் நடைபெற்ற தேர்தல்களிலும் இத்திட்டச் செயல்பாடு இருந்தது.

### *கண்டறியப்பட்ட இடையூறுகள்:*

"ஸ்வீப்" திட்டத்தின் ஒரு அங்கமாக வாக்காளர்களின் மன போக்கு குறித்து ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. கண்டறியப்பட்ட காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன. குறைந்த அளவிலான வாக்காளர்கள் பதிவு, புகைப்பட அடையாள அட்டையின் நகலைப் பெறுவதில்

பிரச்சினை, வாக்காளர்கள் பட்டியலில் பெயரைத் திருத்துவது, பதிவு செய்யப்பட்டுள்ள தகவல்களில் குறைபாடு, குறைந்த அளவு வாக்குப்பதிவு ஆகியவை ஆகும். மேலும், குறைந்த அளவு வாக்காளர்கள் பங்களிப்பு உள்ள பகுதிகள் பற்றிய விவரங்களும் கண்டறியப்பட்டன.

### *குறியளவுடன் கூடிய முயற்சிகள்:*

வாக்கு அளிக்காதவர்களில் இளைஞர்களும், மகளிரும் கணிசமான சதவீதத்தில் இடம் பெற்று இருப்பது தெரியவந்துள்ளது. அனைத்துத் தரப்பு வாக்காளர்களும் அதிகளவில் பங்கேற்கும் வகையில், தகவல் பெறுவதிலும், ஊக்குவிப்பு அளிப்பதிலும் உள்ள இடைவெளியைக் குறைக்கும் முயற்சியை ஆணையம் மேற்கொண்டது.

### *தேசிய வாக்காளர் தினம்:*


குடியுரிமை பற்றிய தகவல்கள் மக்களைச் சென்று அடையச் செய்யும் வகையில், இந்தியத் தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்ட தினமான, ஜனவரி 25-ம் நாளை தேசிய வாக்காளர் தினமாக அனுசரிக்கும் நடைமுறை 2011-ம் ஆண்டு செயல்பாட்டிற்கு வந்தது. "ஸ்வீப்" திட்டப்பணிகளில் இது மிகவும் முக்கியமானது என்று கருதப்படுகிறது. வாக்காளர்கள் பதிவை மேம்படுத்தும் நோக்குடன், ஒவ்வொரு ஆண்டும் இத்தினம் கொண்டாடப்படுகிறது. இதன் வாயிலாக "வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை" என்ற குறிக்கோள் நனவாகும். இளைய தலைமுறையினரின் மனதில் 'பொறுப்பான குடிமகன்' என்ற எண்ணத்தை விதைப்பதுடன், அவர்கள் தங்களது குடியரசு உரிமையை தவறாது பதிவு செய்வதை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளையும் ஆணையம் எடுத்து வருகிறது. அவர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்படுவதுடன், "வாக்காளராக இருப்பதில் பெருமிதம் கொள்ளுகிறேன்; வாக்களிக்கத் தயாராக உள்ளேன்" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட "பேட்ஜும்" கொடுக்கப்படுகிறது. "தேர்தலில் பங்கேற்பதின் மூலம் ஜனநாயகத்தை வலுப்படுத்துவேன்" என்ற உறுதிமொழியையும் அவர் ஏற்கிறார்கள். 2011-ம் ஆண்டிலிருந்து தேசிய வாக்காளர் தினம், மிகவும் உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, கருத்தரங்கங்கள், சைக்கிள் பேரணிகள், மனித சங்கிலி, கிராமிய கலை நிகழ்ச்சிகள், நெடுந்தொலைவு ஓட்டம் (மாரத்தான்), விழிப்புணர்வு போட்டிகள், பட்டிமன்றங்கள் ஆகியவை நடத்தப்படுகின்றன.

வாக்காளராக இருப்பதில் பெருமிதம் அடைகிறேன்
வாக்களிக்கத் தயாராக உள்ளேன்

தேசிய வாக்காளர் தினம் ஜனவரி - 25

வலுவான ஜனநாயகத்திற்கு பெருமளவு பங்கேற்பு

# மாதிரி நடத்தைக் கோட்பாடுகளும்




# அதன் வளர்ச்சியும்

# அத்தியாயம் 6

## மாதிரி நடத்தைக் கோட்பாடுகளும் அதன் வளர்ச்சியும்

சுதந்திரமான, நியாயமான தேர்தல்களே வலுவான ஜனநாயகத்தின் அடித்தளமாகும். போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களுக்கும் சம வாய்ப்புக்கள் அளிக்கப்படுவதுடன் எல்லாக் கட்சிகளுக்கும் தங்களுடைய கொள்கைகளையும், செயல்திட்டங்களையும் வாக்காளர்களிடம் எடுத்துரைக்க, அக்கட்சிகள் அனைத்துக்கும் சம உரிமைகள் தரப்பட வேண்டும் என்பதையே இது வலியுறுத்துகிறது. இந்தச் சூழ்நிலையில் மாதிரி நடத்தைக் கோட்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இத்தகைய கோட்பாடுகள், எல்லாக் கட்சிகளுக்கும் ஒரே மாதிரியான வாய்ப்புகள் வழங்குவதை நோக்கமாகக் கொண்டதாகும். மேலும் இவை தேர்தல் பிரச்சாரங்கள் நியாயமானதாகவும், ஆரோக்கியமானதாகவும் இருப்பதையும் கட்சிகளுக்கு இடையே தகராறுகள் மற்றும் சண்டைகள் ஏற்படுவதை தவிர்ப்பதையும், அமைதியையும், சட்ட ஒழுங்கு நிலமை பராமரிக்கப்படுவதையும் வலியுறுத்துகின்றன. இவை தவிர, மத்திய, மாநில அரசுகளில் ஆட்சியில் இருக்கும் கட்சிகள் தேர்தல் சமயத்தில் தங்களுடைய அதிகாரத்தை தவறான முறைகளில் பயன்படுத்தி, நிலமையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளுவதை தவிர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டன. இந்தக் கோட்பாடுகள் குடியாட்சித் தத்துவத்திற்கு இந்திய தேர்தல் அமைப்பு முறை தந்துள்ள மாபெரும் பங்களிப்பாகும்.

அரசியல் கட்சிகள் குறிப்பாக கட்சி வேட்பாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடத்தை மற்றும் செயல்பாடு நியதிகளை வரையறை செய்வதே மாதிரி நடத்தைக் கோட்பாடுகள் ஆகும். இந்த மாதிரி கோட்பாடுகள், அரசியல் கட்சிகளுடன் எட்டப்பட்ட பொதுக் கருத்துக்களின் அடிப்படையில் வரையப்பட்டு மேம்படுத்தப்பட்ட ஆவணம் என்பதுதான் இதன் சிறப்பாகும். 1960-ம் ஆண்டு கேரள மாநில சட்டப்பேரவைத் தேர்தலின்போது, வகுக்கப்பட்ட, "செய்யத்தக்கவை" மற்றும் "செய்யத்தகாதவையின்" தொகுப்பே இந்த மாதிரி கோட்பாட்டின் தொடக்கமாகும். இவ்வாறு மாதிரி நடத்தைக் கோட்பாடுகள் 1960-ம் ஆண்டில், சிறிய அளவில் வரையப்பட்டன. தேர்தல் கூட்டங்கள் / ஊர்வலங்களை நடத்துவது, தேர்தல் உரைகள், பிரச்சார வாசகங்கள், சுவரொட்டிகள், விளம்பரப் பலகைகள் போன்றவை குறித்தே இந்த மாதிரி கோட்பாட்டு பணிகள் வரையறை செய்தன. (தலைமை தேர்தல் ஆணையர் - திரு. கே.வி.கே. சுந்தரம்)

1962-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலின்போது, இந்த மாதிரி கோட்பாடுகளை ஆணையம், எல்லா அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளிடையே சுற்றுக்கு விட்டது. இந்த கோட்பாடுகளுக்கு கட்சிகளின் ஒப்புதலைப் பெறுமாறு மாநில அரசுகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. (தலைமை தேர்தல் ஆணையர் - திரு. கே.வி.கே. சுந்தரம்)

1962-ம் ஆண்டு பொறுத்தே தகவலுக்குப் பிறகு பெறப்பட்ட அறிவிக்கைகள் இந்தக் கோட்பாடுகள் பெருமளவு பின்பற்றப்பட்டதாகத் தெரிவித்தன. 1967-ம் ஆண்டு நடைபெற்ற

மக்களவைத் தேர்தலிலும், மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களிலும் இந்தக் கோட்பாடுகள் கடைபிடிக்கப்பட்டன. (தலைமை தேர்தல் ஆணையர் - திரு. கே.வி.கே. சுந்தரம்)

## *மாதிரி நடத்தைக் கோட்பாடுகளின் வளர்ச்சியும் 1967-ம் ஆண்டிலிருந்து அவற்றின் அமலாக்கமும்:*

- 1968-ம் ஆண்டு தேர்தல் ஆணையம் அரசியல் கட்சிகளுடன் மாநில அளவில் கலந்துரையாடல், கூட்டங்களை நடத்துவது, தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் குறைந்த அளவிலான நடத்தை விதிமுறைகளையாவது பின்பற்றப்பட்டு, அந்த கோட்பாடுகள் சுற்றுக்கு விடப்பட்டன. (தலைமை தேர்தல் ஆணையர் - திரு. எஸ்.பி. சென் வர்மா)
- 1971-72-ல் மக்களவைக்கும் மாநில சட்டப்பேரவைகளுக்கும் நடைபெற்ற பொதுத் தேர்தல்களின்போது, இந்த மாதிரிக் கோட்பாடுகள் மீண்டும் சுற்றுக்கு விடப்பட்டன. (தலைமை தேர்தல் ஆணையர் - திரு. எஸ்.பி. சென் வர்மா)
- 1971-ம் ஆண்டு சில மாநிலச் சட்டப்பேரவைகளுக்கு நடைபெற்ற தேர்தல்களின்போது, தேர்தல் நடைபெற்ற மாநிலங்களில் அரசியல் கட்சிகளுக்கு இந்த மாதிரிக் கோட்பாடுகளை தேர்தல் ஆணையம் அனுப்பியது.
- மாவட்ட நிலையில் மாவட்ட ஆட்சியாளர்கள் தலைமையில் குழுக்களை அமைக்குமாறு ஆணையம் யோசனை வழங்கியது. இக்குழுக்களில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் இடம் பெற்று இருப்பர். இக்குழு மாதிரிக் கோட்பாடுகள் மீறல் வழக்குகளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதுடன் எல்லா அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் இந்தக் கோட்பாடுகளை கடைப்பிடிப்பதை உறுதி செய்தது.
- 1977-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலின்போது இந்தக் கோட்பாடுகள் அரசியல் கட்சிகளிடையே மீண்டும் சுற்றுக்கு விடப்பட்டன. (தலைமை தேர்தல் ஆணையர் - திரு. டி. சுவாமிநாதன்)
- 1979-ம் ஆண்டு தேர்தல் ஆணையம் அரசியல் கட்சிகளுடன் நடத்திய ஆலோசனைகளின் அடிப்படையில் இந்த மாதிரிக் கோட்பாடுகளை விரிவாக்கியது. ஆட்சியில் உள்ள கட்சிகளுக்கு சில கட்டுப்பாடுகளை விதிக்கும் புதிய பிரிவு சேர்க்கப்பட்டது. ஆட்சியில் உள்ள கட்சிகள், மற்ற கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கும் பாதகமாக, தங்களது அதிகாரத்தையும் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்கானதாகும் இது. (தலைமை தேர்தல் ஆணையர் - திரு. எஸ்.எல். ஷக்தர்)
- 1991-ம் ஆண்டு இந்தக் கோட்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டு இப்பொழுதுள்ள வடிவில் வெளியிடப்பட்டன. (தலைமை தேர்தல் ஆணையர் - திரு. டி.என். சேஷன்)
- இப்பொழுதுள்ள கோட்பாடுகள் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்காக பொதுவான நடத்தை வழிகாட்டு நெறிகளாகும். (தனி நபர் சொந்த வாழ்க்கை குறித்த தாக்குதலுக்கு சமய உணர்வு அடிப்படையில் விண்ணப்பம் செய்த

தகவலுக்குத் தடை, கூட்டங்களிலும், ஊர்வலங்களிலும், கண்ணியத்தையும், ஒழுங்கையும் பேணுதல், அதிகாரத்தில் உள்ள கட்சிகளுக்கான நெறிமுறைகள், தேர்தல் பிரச்சார பணிகளில் அரசு இயந்திரத்தையும், வசதிகளையும் பயன்படுத்தாமை, அமைச்சர்களும், மற்ற அதிகாரிகளுக்கும் மானியம், புதிய திட்டங்கள் போன்றவற்றை அறிவிக்கத் தடை)

- அமைச்சர்களுக்கும், பொதுச் சேவையில் ஈடுபட்டு இருப்பவர்களும் தங்களுடைய அலுவலகப் பணி பயணத்துடன் தேர்தல் பிரச்சாரப் பயணங்களை இணைக்க அனுமதி கிடையாது.
- அரசு செலவில் விளம்பரங்களை வெளியிடத் தடை.
- மானியங்கள், புதிய திட்டங்கள் போன்றவற்றை அறிவிக்கத் தடை. மாதிரி நடத்தைக் கோட்பாடுகள், நடைமுறைக்கு வரும் முன்னரே திட்டங்கள் அறிவிக்கப்பட்டு இருந்தாலும், உண்மையில் அதற்கான பணிகள் தொடங்கப்பட்டு விட்டால் அவற்றை செயல்படுத்துவது நிறுத்தி வைக்கப்பட வேண்டும்.
- ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்பு இத்தகைய கட்டுப்பாடுகளின் வாயிலாக கட்டுப்படுத்தப்படுகிறது. எல்லா போட்டியாளர்களுக்கும் ஏறத்தாழ ஒரே அளவிலான வாய்ப்புக்கள் கிடைக்கின்றன.
- மாதிரி நடத்தைக் கோட்பாடுகளுக்கு உச்சநீதிமன்றத்தின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது. இந்தக் கோட்பாடுகள் எந்தத் தேதியிலிருந்து நடைமுறைக்கு வருகின்றன என்ற பிரச்சினைக்கு மத்திய அரசிற்கும், ஹர்பன்ஸ் சிங் ஜலால் மற்றும் இதரர்களுக்கும் இடையிலான வழக்கின் தீர்ப்பில் விடை கிடைத்துள்ளது. (எஸ்.எல்.வி. (சிவில்) No. 22724 - 1997) தீர்ப்பு வழங்கப்பட்ட தினம் 26.04.2001 - வாக்குப்பதிவு தேதியை அறிவித்து தேர்தல் ஆணையம் செய்தி வெளியிடும் தினம் அல்லது இது தொடர்பாக அறிவிக்கை வெளியிடப்பட்ட நாள்-)

தேர்தல் ஆணையம் செய்திக் குறிப்பு வெளியிட்ட உடனேயே மாதிரி நடத்தைக் கோட்பாடுகள் நடைமுறைக்கு வருகின்றன என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இந்த செய்திக் குறிப்பு தேர்தல் அறிவிக்கை வருவதற்கு சற்று ஏறக்குறைய இரண்டு வாரத்திற்கு முன்பே வெளியாகும். இதனால் நடத்தைக் கோட்பாடுகள் குறித்து எழுந்த பிரச்சினை முடிவிற்கு வந்தது. இதன் விளைவாக தேர்தல் அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து, தேர்தல் முடியும் தேதி வரை இந்தக் கோட்பாடுகள் அமலில் இருக்கும்.

***நடத்தைக் கோட்பாடுகளுக்கு சட்டப்பூர்வ நிலை: தேர்தல் ஆணையத்தின் கருத்துக்கள்:-***

மாதிரி நடத்தைக் கோட்பாடுகளுக்கு சட்டப்பூர்வ அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென்ற கருத்து சிலரிடையே உள்ளது. ஆனால் இந்தக் கோட்பாடுகளுக்கு சட்ட அந்தஸ்து வழங்குவதற்கு எதிரான நிலையை தேர்தல் ஆணையம் எடுத்துள்ளது. இந்த கோட்பாடுகளை சட்டப்புத்தகத்தில் இடம்பெறச் செய்தால் எதிர்மறை விளைவுகள் தான்

இருக்குமென்று ஆணையம் கருதுகிறது. நமது நாட்டில் தேர்தல்கள், திட்ட மிடப்பட்ட அட்டவணையின்படி குறிப்பிட்ட காலவரம்பிற்குள் நடத்தப்படுகிறன. சாதாரணமாக ஒரு மாநிலத்தில் பொதுத் தேர்தல் முறையை ஆணையம் தேர்தல் அட்டவணை அறிவித்த தினத்திலிருந்து 45 நாட்களுக்குள் நிறைவு செய்யப்படுகிறது. இதனால் மாதிரி நடத்தைக் கோட்பாடுகள் மீறப்படுவது பற்றிய வழக்குகள் உடனடியாகவும் விரைவாகவும் தீர்க்கப்படவேண்டியது அவசியமாகும். விதிமீறல்களை கட்டுப்படுத்தவும், மீறுபவர்கள் மீதும், தேர்தல் நடைமுறை அமலில் உள்ள இந்த குறுகிய கால அளவில் நடவடிக்கை எடுக்காவிட்டால், இந்த கோட்பாடுகளுக்குள் முக்கியத்துவம் இல்லாமல் போய்விடும். மாறாக கோட்பாடுகளை மீறுபவர்களுக்கு மீறல்களின் பலன்களும் கிடைக்கும். மாதிரி நடத்தை விதிமுறைகள் சட்டமாக்கப்பட்டால், இதன் கீழான புகார் கால்துறை / மாஜிஸ்திரேட்டிடம் இருக்கும். நீதித்துறையின் நடைமுறை செயல்பாடுகளினால், இந்தப் புகார் மீதான எத்தகைய முடிவும் தேர்தல் முடிந்த பிறகு வெகுகாலத்திற்கு பின்னேதான் கிடைக்கக்கூடும்.

***மாதிரி நடத்தைக் கோட்பாடுகள் வளர்ச்சிப் பணிகளுக்கு இடையூறு இல்லை:***

மாதிரி நடத்தைக் கோட்பாடுகள் வளர்ச்சிப் பணிகளின் செயலாக்கத்திற்கு இடையூறாக அமைகின்றன என்ற புகார் அடிக்கடி கூறப்படுகிறது. மாறாக மாதிரி நடத்தை கோட்பாடுகள் அமலாக்கத்தில் இருக்கும் குறுகிய காலத்தில் கூட நடைமுறையில் உள்ள வளர்ச்சிப் பணிகள் நிறுத்தப்படுவதில்லை. இவை எவ்வித இடர்பாடுகளும் இல்லாமல் தொடர அனுமதிக்கப்படுகின்றன. புதிய திட்டங்கள் போன்றவைதான் பணிகள் ஏற்கனவே தொடங்கப்படாவிட்டால் தேர்தல் முடியும் வரை ஒத்தி வைக்கப்படுகின்றன. சீரழிவு உதவி நடவடிக்கைகள் போன்ற காலம் தாழ்த்த முடியாத பணிகள் குறித்து, அனுமதிக்கென தேர்தல் ஆணையத்திடம் தெரிவிக்கலாம்.

இந்தத் தருணத்தில் அலஹாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பிலிருந்து (லக்னோ பிரிவு) [(16.02.2012 தேதியிட்டது) - ரிட் மனு No.1361-2012 - (டாக்டர் நூதன் தாகூர் vs தேர்தல் ஆணையம்)]கீழ்கண்ட பகுதியை சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாக இருக்கும். இங்கே குறிப்பிடுவது முரணாக இருக்காது.

"தேர்தலுக்குப் பிறகு மக்கள் பிரதிநிதிகள் தங்களுடைய கடமைகளை 5 வருட காலத்திற்கு ஆற்றுபவர்கள். சட்டப்பேரவையோ, நாடாளுமன்றமோ, தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டாலோ அல்லது முன்கூட்டியே கலைக்கப்பட்டாலோ அன்றி தேர்தல்கள் அவர்களுடைய பதவிக்கால இறுதியில் நடைபெறுகின்றன. பதவி வகிக்கும்பொழுது மக்கள் பிரதிநிதிகள் தங்களுடைய கடமைகளை நேர்மையாக நிறைவேற்றுவ்துட்ன் நாட்டிற்கு நியாயமாக சேவை செய்ய வேண்டிய பணி உள்ளது. அவர்கள் அந்த கடமைகளை தங்களுடைய பதவி காலத்தில் நிறைவேற்றத் தவறிவிட்டு, தேர்தல் பற்றிய அறிவிக்கை வெளியிடப்பட்ட பின் மக்களைக் கவரும் வகையிலோ அல்லது திருப்தி செய்யும் வகையிலோ அறிக்கை வெளியிடுவது, அவர்களின் நியாயமற்ற செயல்பாட்டைத் தவிர வேறு எதுவுமில்லை".

***அரசியல் கட்சிகளுக்கும், வேட்பாளர்களுக்குமான மாதிரி நடத்தைக் கோட்பாடுகள்:***

*I. பொதுவான நடத்தை:*

1. பல்வேறு இனத்தவர்கள், ஜாதியினர், சமயத்தினர், சமூகத்தினர் மற்றும் மொழியினர்களுக்கு இடையே ஏற்கனவே இருந்து வரும் வேற்றுமைகளை பரஸ்பர வெறுப்பையும் அதிகரிக்கும் செயல்பாடுகளிலோ, பதற்றத்தைக் கூடுதலாக்கும் நடவடிக்கைகளிலோ எந்தக் கட்சியும், வேட்பாளர்களும் ஈடுபடக் கூடாது.
2. மற்ற அரசியல் கட்சிகளை குறை கூறும்பொழுது அவை அக்கட்சிகளின் கொள்கைகள், திட்டங்கள் முந்தைய "சாதனைகள்" மற்றும் பணிகள் பற்றியதாக மட்டுமே இருக்க வேண்டும். மற்றவர்களின் சொந்த வாழ்க்கை சம்மந்தப்பட்ட அனைத்து விசயங்களையும் கட்சிகளும் வேட்பாளர்களும் தவிர்க்க வேண்டும். மற்றக் கட்சித் தலைவர்கள் மற்றும் தொண்டர்களின் பொது வாழ்க்கை செயல்பாடுகளைத் தவிர மற்ற சொந்த வாழ்க்கை விசயங்களைக் குறிப்பிடக்கூடாது. மற்றக் கட்சிகள் மற்றும் தொண்டர்கள் மீதான சரிபார்க்கப்படாத குற்றச்சாட்டுக்களையும், திரித்துக் கூறப்படும் செய்திகளையும் தவிர்க்க வேண்டும்.
3. வாக்குகளை பெறுவதற்காக ஜாதி அல்லது சமுதாய உணர்வுகளின் அடிப்படையில் விண்ணப்பிக்கக்கூடாது. தேர்தல் பிரச்சாரத்திற்கு மசூதிகள், தேவாலயங்கள் (சர்ச்சுகள்), கோவில்கள் அல்லது வழிபாட்டுத்தலங்களைப் பயன்படுத்தக் கூடாது.
4. ஊழல் நடவடிக்கை, வாக்காளர்களுக்கு லஞ்சம், வாக்காளர்களை அச்சுறுத்துதல், ஆள்மாறாட்டம், வாக்குச்சாவடியிலிருந்து 100 மீட்டருக்கு உட்பட்ட பகுதியில் பிரச்சாரம், வாக்குப்பதிவு முடிய நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முந்தைய 48 மணி நேரத்தில் பொதுக்கூட்டங்களை நடத்துவது, வாக்காளர்கள், சாவடிக்கு வந்து செல்ல வாகன வசதி அளித்தல் போன்றவை தேர்தல் சட்டத்தின் கீழ் குற்றங்களாகும், ஊழல் நடவடிக்கைகளையும் எல்லாக் கட்சிகளும், வேட்பாளர்களும் கவனமாகத் தவிர்க்க வேண்டும்.
5. அமைதியான பிறரால் இடையூறு இழைக்கப்படாத வாழ்க்கை நடத்த ஒவ்வொரு தனி நபருக்கும் உள்ள உரிமை மதிக்கப்பட வேண்டும். அந்த தனி நபரின் அரசியல் கருத்துக்கள் அல்லது செயல்பாடுகளை அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், தனி நபரின் உரிமை மதிக்கப்பட வேண்டும். இத்தகைய தனி நபர்களின் கருத்துக்கள் அல்லது செயல்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அவர்களின் இல்லங்களின் முன் ஆர்ப்பாட்டங்கள் போன்றவற்றை நடத்துவதில் எந்த சூழ்நிலையிலும் ஈடுபடக்கூடாது.
6. கொடி மரம் நடுதல், பதாகைகளைத் தொங்கவிடுதல், சுவரொட்டிகள் ஒட்டுதல், பிரச்சார வாசகங்களை எழுதுதல் போன்றவைகளை தனி நபரின் நிலம், கட்டிடம், சுற்றுப்புறச் சுவர் போன்றவற்றை அவருடைய அனுமதியின்றி பயன்படுத்த எந்தக் கட்சியோ, அல்லது வேட்பாளர்களோ தங்களுடைய தொண்டர்களை அனுமதிக்கக் கூடாது.
7. மற்றக் கட்சிகள் ஏற்பாடு செய்யும், கூட்டங்கள், ஊர்வலங்கள் போன்றவற்றிற்கு இடையூறு ஏற்படுத்துதல், தொந்தரவு அளித்தல் போன்றவற்றில் தொண்டர்கள்

ஈடுபடாமல் இருப்பதை அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் உறுதி செய்ய வேண்டும்.

8. ஒரு கட்சியின் தொண்டர்கள், மற்றும் ஆதரவாளர்கள் மற்றொரு கட்சியினர் ஏற்பாடு செய்யும் பொதுக் கூட்டங்களுக்கு எழுத்து மூலமாகவோ, வாய்மொழி வாயிலாகவோ, கேள்வி எழுப்புதல், தங்களது கட்சியின் துண்டு பிரசுரங்களை விநியோகித்தல் போன்றவற்றின் மூலம் இடையூறு விளைவிக்கக் கூடாது. ஒரு கட்சி கூட்டங்கள் நடத்தும் இடங்களின் வழியாக மற்றொரு கட்சி ஊர்வலங்களை நடத்தக் கூடாது. ஒரு கட்சி ஒட்டிய சுவரொட்டிகளை மற்றொரு கட்சி அகற்றக் கூடாது.

## II. *கூட்டங்கள்*

1. காவல்துறையினர் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும், அமைதி, சட்ட ஒழுங்கை பராமரிகவும் ஏதுவாக ஒரு கட்சியோ அல்லது வேட்பாளரோ நடத்த உத்தேசித்துள்ள கூட்டம் நடைபெறவுள்ள இடம் மற்றும் நேரம் பற்றிய தகவலை உள்ளூர் காவல்துறையிடம் முன்னதாகவே தெரிவிக்க வேண்டும்.
2. கூட்டம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்தில் ஏதாவது கட்டுப்பாடு அல்லது தடை உத்தரவு அமலில் உள்ளதா என்பதை கட்சியோ அல்லது வேட்பாளரோ உறுதி செய்து கொள்ள வேண்டும். ஏதேனும் இருந்தால் அவை கண்டிப்பாக கடைப்பிடிக்கப் பட வேண்டும். இந்த உத்தரவிலிருந்து விலக்கு ஏதேனும் தேவைப்பட்டால் அதற்கு விண்ணப்பித்து முன் கூட்டியே அனுமதி பெற வேண்டும்.
3. உத்தேச கூட்டத்திற்கு ஒலிபெருக்கி பயன்பாடு, அல்லது வேறு ஏதாவது வசதி தேவைப்பட்டால் அதற்கான அனுமதி அல்லது லைசென்ஸ் பெற வேண்டும். அதற்கு கட்சியோ அல்லது வேட்பாளரோ உரிய அதிகாரிக்கு முன்கூட்டியே விண்ணப்பித்து அனுமதி பெற வேண்டும்.
4. கூட்டத்திற்கு இடையூறு அல்லது குழப்பம் ஏற்படுத்த முயலுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க பணியில் உள்ள காவல்துறையினரின் உதவியை கூட்ட அமைப்பாளர்கள் நாட வேண்டும். கூட்ட ஏற்பாட்டாளர்களே இடையூறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது.

## III. *ஊர்வலங்கள்*

1. ஒரு ஊர்வலத்தை ஏற்பாடு செய்யும் கட்சியோ அல்லது வேட்பாளரோ அதற்கான நேரம், ஊர்வலம் தொடங்கும் இடம், செல்லும் பாதை, ஊர்வலம் முடிவடையும் இடம் மற்றும் நேரம் ஆகியவற்றை முன்கூட்டியே தீர்மானிக்க வேண்டும். இந்தத் திட்டத்திலிருந்து மாற்றம் இருக்கக் கூடாது.
2. அமைப்பாளர்கள் தங்களது திட்டம் பற்றிய விவரங்களை உள்ளூர் காவல்துறையினரிடம் முன்கூட்டியே தகவல் தெரிவிக்க வேண்டும். காவல்துறையினர் தகுந்த ஏற்பாடு செய்ய இது உதவும்.

3. ஊர்வலம் செல்லும் பாதையில் உள்ள இடங்களில் தடை உத்தரவு ஏதேனும் அமலில் உள்ளதா என்பதை ஏற்பாட்டாளர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும். உரிய அதிகாரிகளிடமிருந்து விலக்கு பெற்றால் அன்றி தடை உத்தரவுகளை ஏற்பாட்டாளர்கள் மதிக்க வேண்டும். போக்குவரத்து விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளையும் கவனமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.
4. ஊர்வலம் செல்லத் தேவையான ஏற்பாடுகளை அமைப்பாளர்கள் முன்கூட்டியே செய்ய வேண்டும். இதனால் போக்குவரத்துக்கு இடையூறோ பாதிப்போ இராது. ஊர்வலம் மிக நீண்டதாக இருந்தால், அது சாத்தியமான அளவு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட வேண்டும். இதனால் சவுகரியப்பட்ட இடைவெளியில், குறிப்பாக இந்த ஊர்வலம் சந்திப்பு மையங்களை கடக்க வேண்டிய இடங்களில் இந்த ஊர்வலத்தை சிறு பகுதிகளாகப் பிரிக்கலாம். இதனால் போக்குவரத்தில் தேக்கம் தவிர்க்கப்படும்.
5. சாலைகளின் வலது புறத்தில் செல்லும் வகையில் ஊர்திகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். பணியில் உள்ள காவல்துறையினரின் வழிகாட்டுதல், மற்றும் உத்தரவுகள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
6. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்கள், ஒரே வழியில் அந்தப் பாதையின் பகுதிகளில் ஊர்வலங்களை நடத்த உத்தேசித்தால் அமைப்பாளர்கள், முன்கூட்டியே தொர்பு கொண்டு இந்த ஊர்வலங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ளாமலும், போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமலும் இருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் பற்றித் தீர்மானிக்க வேண்டும். திருப்திகரமான ஏற்பாட்டைக் கண்டறிய உள்ளூர் காவல்துறையினர் உதவியை நாட வேண்டும். இதற்காக அரசியல் கட்சிகள் காவல்துறையினருடன் முதல் வாய்ப்பிலேயே தொடர்பு கொள்ள வேண்டும்.
7. ஊர்வலம் செல்லும்போது அதில் கலந்துக் கொள்ளும் விரும்பத்தகாத சக்திகள் உணர்ச்சிவசப்பட்டு, எடுத்துச் செல்லும் பொருட்களை தவறான வழிகளில் பன்படுத்தக் கூடும் என்பதால் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்படும் பொருட்கள் விஷயத்தில் அரசியல் கட்சிகளுக்கும், வேட்பாளர்களுக்கும் சாத்தியமான அளவுக்கு கட்டுப்பாடு மேற்கொள்ள வேண்டும்.
8. மற்றக் கட்சிகளை சேர்ந்தவர்கள் மற்றும் அந்தக் கட்சி தலைவர்களின் உருவ பொம்மைகளை எடுத்துச் செல்லுவது, அதை பொது இடங்களில் எரிப்பது, மற்றும் இத்தகைய ஆர்ப்பாட்டங்களை நடத்துவதை ஒரு கட்சியோ அல்லது வேட்பாளரோ அனுமதிக்கக்கூடாது.

## *IV. வாக்குப்பதிவு தினம்*

**எல்லா அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் கடைபிடிக்க வேண்டியது:**

1. வாக்குப்பதிவு அமைதியாகவும், ஒழுங்காகவும் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் தேர்தல் பணியில் உள்ள அலுவலர்களுடன் ஒத்துழைக்க வேண்டும். வாக்காளர்களுக்கு எந்த இடையூறுகளும், தொந்தரவும் இல்லாமல், அவர்களது உரிமையை பதிவு செய்ய அனுமதிக்க வேண்டும்.

2. அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள ஊழியர்களுக்கு பொருத்தமான "பேட்ஜ்"க்களையோ அல்லது அடையாள அட்டைகளையோ வழங்க வேண்டும்.
3. வாக்காளர்களுக்கு கட்சிகள் வழங்கும் அடையாள சீட்டு சாதாரண வெள்ளைத் தாளாக இருக்க வேண்டும். இந்தக் காகிதத்தில் சின்னம், வேட்பாளரின் பெயர், அல்லது கட்சியின் பெயர் இடம் பெற்று இருக்கக் கூடாது.
4. வாக்குப்பதிவு தினத்தின்போதும் அதற்கு முந்தைய 24 மணி நேரத்தின் போதும் மது பானங்கள் வழங்குவது தவிர்க்கப்பட வேண்டும்.
5. வாக்குச்சாவடிகளின் அருகில் அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் அமைக்கும் முகாம்களில் தேவையற்ற வகையில் கூட்டம் சேருவதை அனுமதிக்கக் கூடாது. கட்சி மற்றும் வேட்பாளர்கள், மற்றும் ஊழியர்கள் மற்றும் அனுதாபிகளிடையே வாக்குவாதம் பதற்றம் போன்றவை ஏற்படுவதை இது தடுக்கும்.
6. வேட்பாளர்களின் முகாம்கள் எளிய முறையில் அமைவதை உறுதி செய்ய வேண்டும். இந்த முகாம்களில் சுவரொட்டிகள், கொடிகள், சின்னங்கள், மற்றும் பிரச்சார சாதனங்கள் இடம்பெறக் கூடாது. உணவுப் பண்டங்கள் எதுவும் வழங்கப்படக் கூடாது. இந்த முகாம்களில் கூட்டம் சேரவும் அனுமதிக்கக் கூடாது.

வாக்குப் பதிவு தினத்தன்று, வாகனங்களை பயன்படுத்துவது குறித்து விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைக் கடைபிடித்து அலுவலர்களுடன் ஒத்துழைக்க வேண்டும்.
பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு அனுமதி பெற்று அதை வண்டிகளில் நன்கு தெரியும்படி வைத்திருக்க வேண்டும்.

*V.* ***வாக்குச்சாவடி:***

வாக்காளர்களைத்தவிர தேர்தல் ஆணையத்தின் அனுமதி இல்லாமல் வேறு யாரும் வாக்குச்சாவடிகளுக்குள் செல்லக்கூடாது.

*VI.* ***பார்வையாளர்கள்:***

தேர்தல் ஆணையம் பார்வையாளர்களை நியமிக்கிறது. தேர்தல் நடத்துவது குறித்து வேட்பாளருக்கோ அல்லது அவரது பிரதிநிதிக்கோ ஏதேனும் குறிப்பிட்ட புகார் அல்லது பிரச்சினை இருந்தால் அதை பார்வையாளரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

*VII.* ***அரசில் இருக்கும் கட்சி***

அரசு அதிகாரத்தை தேர்தல் பிரச்சாரத்திற்கு ஆட்சியில் இருக்கும் கட்சி பயன்படுத்துவதாக எந்தப் புகாருக்கம் இடம்மின்றி மத்தியிலோ மாநிலங்களிலோ ஆட்சியில் இருக்கும் கட்சிகள் நடந்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக,

1. (a) அமைச்சர்கள் தங்களது அரசு அலுவல் பயணத்துடன் தேர்தல் பணியை இணைக்கக் கூடாது. அரசு இயந்திரத்தையோ ஊழியர்களையோ பயன்படுத்தக் கூடாது.

   (b) ஆளும் கட்சிக்கு ஆதரவாக அரசு விமானங்களோ வாகனங்களோ இதர அரசு இயந்திரமோ அரசு ஊழியர்களோ பயன்படுத்தப்படக் கூடாது.

2. மைதானம் போன்ற பொது இடங்களில் தேர்தல் கூட்டங்களை நடத்துதல், தேர்தல் தொடர்பான பணிகளுக்கு வான்வழிப் பயணத்தை மேற்கொள்ளும்பொழுது ஹெலிகாப்டர்களை பயன்படுத்துதல் போன்றவற்றில் ஏகபோக உரிமையாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இதர வேட்பாளர்களும் அந்த வசதியை அதே நிபந்தனையுடன் பெற்று பயன் படுத்துவதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.
3. ஓய்வு இல்லங்கள், விடுதிகள் மற்றும் இதர அரசு தங்கும் இடங்களை ஆளும் கட்சிகளும் அவர்களுடைய வேட்பாளர்களும் மட்டும் பயன்படுத்தாமல் மற்ற கட்சிகளும், வேட்பாளர்களும், பயன்படுத்த நியாயமான முறையில் அனுமதிக்க வேண்டும். இந்த இடங்களை எந்தக் கட்சியும், வேட்பாளர்களும் பிரச்சார அலுவலகமாகப் பயன்படுத்தக் கூடாது.
4. ஆளும் கட்சிக்கு சாதகமான முறையில் அரசு செலவில், செய்தியேடுகளிலும், மற்ற ஊடகங்களிலும், விளம்பரங்களை வெளியிடுவதையும் சாதனைகளை ஒருதலைப்பட்சமாக வெளியிடுவதையும் தவிர்க்க வேண்டும்.
5. ஆணையம் தேர்தல் தேதியை அறிவித்த பிறகு அமைச்சர்களோ அல்லது மற்ற ஆணையங்களோ விருப்புரிமை நிதியிலிருந்து மானியங்கள் அல்லது பணப்பட்டுவாடாக்களை அறிவிக்கக் கூடாது.
6. தேர்தல் தேதியை ஆணையம் அறிவித்த தேதியிலிருந்து அமைச்சர்கள் மற்றும் அதிகார அமைப்புகள் கீழ்கண்டவற்றைத் தவிர்க்க வேண்டும்:
   - நிதி மானியம் அல்லது அது பற்றிய உறுதிமொழி அறிவிப்பு.
   - எந்த விதமான திட்டங்களுக்கும், வளர்ச்சிப் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டுதல்.
   - சாலை அமைத்தல். குடிநீர் வசதி போன்றவை குறித்து உறுதிமொழி.
   - அரசுத்துறை, பொதுத்துறை நிறுவனங்களில் தற்காலிக நியமனம் (ஆளும் கட்சிக்குச் சாதகமான வகையில் வாக்காளர்களை ஊக்குவிக்கும் வகையில்).

### VIII. *தேர்தல் அறிக்கைகளுக்கான நெறிமுறைகள்:*

1. தேர்தல் அறிக்கையின் உள்ளடக்கம் தொடர்பாக வழிகாட்டு நெறிகளை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் கலந்து உருவாக்குமாறு உச்சநீதிமன்றம் 2013 ஜூலை 5ந் தேதி தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவு பிறப்பித்தது. (எஸ். சுப்ரமணியம் பாலாஜிக்கும் தமிழ்நாடு அரசுக்கும் இதரர்களுக்கும் இடையிலான வழக்கு) இதற்கான கொள்கைகளை வகுப்பதற்கான பின்வரும் நெறிமுறைகள் வருமாறு.

   i. தேர்தல் அறிக்கையில் கூறப்படும் வாக்குறுதிகள் மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 123-வது விதியின்படி லஞ்சமாக கருதப்பட முடியாது என்றாலும் வாக்காளர்களுக்கு வழங்கப்படும் இலவசங்கள் நியாயமான சுதந்திரமான தேர்தலின் அடிப்படையையே பெருமளவு அசைக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை.
   ii. கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கு இடையே சமமான நிலை ஏற்படவும் தேர்தல் நடவடிக்கை நியாயமான தன்மை மாசுபடாமல் இருக்கவும் மாதிரி நடத்தை கோட்பாடுகள் அடிப்படையில் தேர்தல் ஆணையம் உத்தரவுகளை

பிறப்பித்துள்ளது. தேர்தலை நியாயமாகவும் சுதந்திரமாகவும் நடத்த வேண்டும் என்ற அரசியல் சாசனத்தின் 324-வது சரத் அடிப்படையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரத்தை தேர்தல் ஆணையம் பெற்றுள்ளது.

iii. தேர்தல் அறிவிப்பு வெளியாவதற்கு முன்னதாகவே அரசியல் கட்சிகள் தங்கள் தேர்தல் அறிக்கையை வெளியிடுவதை அறிந்துள்ள நிலையில் தேர்தல் தேதி அறிவிக்கப்படும் முன் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் இல்லை என்பதை ஆணையம் உணர்ந்துள்ளது. என்றாலும் தேர்தல் அறிக்கை என்பது தேர்தல் நடவடிக்கையோடு நேரடி தொடர்புடையது என்பதால் இந்த விஷயத்தில் விதி விலக்கு கோரமுடியும்.

2. உச்சநீதிமன்ற உத்தரவின் பேரில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடனும் மாநில கட்சிகளுடனும் தேர்தல் ஆணையம் பேச்சு நடத்தி அவர்கள் அளித்த ஆலோசனையை கருத்தில் கொண்டுள்ளது. இத்தகைய வழிகாட்டு நெறிகள் தேவை என்று சில அரசியல் கட்சிகள் ஆதரவு தெறிவித்த போதிலும் வேறு சில கட்சிகள், ஆரோக்கியமான ஜனநாயக அமைப்பில் வாக்காளர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமை, அளிக்கும் உதவிகளை தேர்தல் அறிக்கை சேர்ப்பதில் தவறு இல்லை என்றும் அது தங்கள் கடமை என்றும் வாதிட்டன. தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்கான வழிமுறைகளை வகுப்பது அரசியல் கட்சிகளின் உரிமை என்பதை தேர்தல் ஆணையம் ஏற்றுக்கொண்ட போதிலும் இதுபோன்ற வாக்குறுதிகளாலும் இலவசங்களாலும் கட்சிகள் மற்றும் வேட்பாளர் இடையே சமன்பட்ட நிலை மீது தாக்கத்தை ஏற்படுத்தி நியாயமான சுதந்திரமான தேர்தலில் விரும்பத்தகாத பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை தேர்தல் ஆணையத்தால் புறக்கணிக்க முடியவில்லை.


3. நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்ட மன்றங்களின் தேர்தலை தேர்தல் ஆணையம் நடத்த வேண்டும் என்று அரசியல் சட்டத்தின் 324-வது சரத் பணிக்கிறது. உச்சநீதிமன்ற உத்தரவுக்கு மதிப்பளிக்கும் அரசியல் கட்சிகளுடன் நடத்திய ஆலோசனை அடிப்படையிலும் நியாயமான சுதந்திரமான தேர்தல் நடத்துவதற்கு ஏதுவாக அரசியல் கட்சிளும் வேட்பாளர்களும் தேர்தல் அறிக்கை வெளியிடும்போது பின்பற்றுவதற்கான பின்வரும் நெறிமுறைகளை ஆணையம் வகுத்துள்ளது.

i. அரசியல் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள கொள்கைகளுக்கு மாறான எந்த அம்சமும் தேர்தல் அறிக்கையில் இடம் பெறக் கூடாது. தேர்தலுக்கான நடத்தை கோட்பாடுகளுக்கு உட்பட்டதாகவே தேர்தல் அறிக்கை அமையும்.

ii. அரசியல் சாசனத்தின் வழிகாட்டு நெறிமுறைகளில் மக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றுவது அரசின் கொள்கை என்று இருப்பதால் அதுபோன்ற நலத் திட்டங்களை தேர்தல் அறிக்கையில் வாக்குறுதியாக அளிப்பது ஆட்சேபத்துக்குரியதல்ல. எனினும் வாக்காளர்களின் சுதந்திரமான வாக்குப்பதிவு உரிமையில் தாக்கத்தை ஏற்படுத்தி அவர்களை நியாயமற்ற

முறையில் கவர்ந்து தேர்தலின் புனிதத்தை கெடுக்கும் வகையிலான வாக்குறுதிகள் வழங்குவதை தவிர்க்க வேண்டும்

iii. ஒளிவு மறைவற்ற தன்மையை நிலைநாட்டவும் தேர்தலில் சமன்பட்ட நிலையை பேணவும் அளிக்கும் வாக்குறுதிகளில் நம்பகத் தன்மையை ஏற்படுத்தவும் தேர்தல் அறிக்கையில் கூறப்படும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நிதி ஆதாரம் எங்கே உள்ளது என்பதை அரசியல் கட்சிகள் தெரிவிக்க வேண்டும். நிறைவேற்றக் கூடிய வாக்குறுதிகள் மட்டுமே இடம் பெற்றுள்ளதாக வாக்காளர்கள் நம்பிக்கை பெற வேண்டும்.



# தேர்தல் ஆணையம் பிறப்பித்த ஆணைகள்

# அத்தியாயம் 7
# தேர்தல் ஆணையம் பிறப்பித்த ஆணைகள்

*தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் வழங்குதல்) குறித்த ஆணை, 1968*
*(ஜூலை, 2013 வரை திருத்தப்பட்டது)*

*முக்கிய நிபந்தனைகள்*

*பிரிவு 4:* சின்னங்கள் ஒதுக்குதல்: போட்டி நடக்கின்ற ஒவ்வொரு தேர்தலிலும் போட்டியிடும் வேட்பாளருக்கு இந்த ஆணையின் நிபந்தனைகளுக்கு உட்பட்ட வகையில் ஒரு சின்னம் ஒதுக்கப்படவேண்டும். ஒரு தேர்தலில் ஒரே தொகுதியில் போட்டியிடும் பல்வேறு வேட்பாளர்களுக்கும் வெவ்வேறு வகையான சின்னங்கள் ஒதுக்கப்பட வேண்டும்.

*பிரிவு 5. சின்னங்களின் வகை பிரிப்பு:*

1. இந்த ஆணையின் நோக்கத்தின்படி சின்னங்கள் என்பவை ஒதுக்கீடு செய்யப்பட்டவையாகவோ அல்லது சுதந்திரமானதாகவோ அமையும்.
2. இந்த ஆணையில் வேறுவகையாகத் தெரிவிக்கப்படவில்லையெனில், ஒதுக்கீடு செய்யப்பட்ட சின்னம் என்பது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றுக்காக அந்தக் கட்சியினால் நிறுத்தப்பட்டு தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு மட்டுமே ஒதுக்கப்படுவதாகும்.
3. சுதந்திரமான சின்னம் என்பது ஒதுக்கீடு செய்யப்படாத சின்னத்தைக் குறிப்பதாகும்.

*பிரிவு 6. அரசியல் கட்சிகளின் வகைபிரிப்பு:*

1. இந்த ஆணையின் நோக்கத்தின்படியும், தேவைப்படும் நேரங்களில் தேர்தல் ஆணையம் வேறு காரணங்களின் அடிப்படையில் குறிப்பிடும் வகையிலும், அரசியல் கட்சிகள் என்பவை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள் என இரு வகையாக மட்டுமே அமையும்.
2. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி என்பது தேசிய கட்சியாகவோ அல்லது மாநில கட்சியாகவே இருக்கலாம்.

*பிரிவு 6 ஏ.* மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்படுவதற்கான நிபந்தனைகள்: எந்தவொரு அரசியல் கட்சியும் மாநிலம் ஒன்றில் மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்படுவதற்கு, கீழ்கண்ட நிபந்தனைகளில் ஏதாவதொன்றை நிறைவேற்றுவதன் மூலமே தகுதி பெற முடியும்:

1. மாநிலத்தின் சட்டமன்றத்திற்கு நடைபெற்ற கடந்த பொதுத்தேர்தலில், கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்ட வேட்பாளர்கள் மாநிலத்தின் பதிவான செல்லுபடியான மொத்த வாக்குகளில் ஆறு சதவீதத்திற்குக் குறையாத வாக்குகளை பெற்றிருக்க வேண்டும்; மேலும், அந்தத் தேர்தலில் மாநில சட்டமன்றத்திற்கு குறைந்தபட்சம் இரண்டு உறுப்பினர்களாவது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும்; அல்லது
2. மாநிலத்திலிருந்து மக்களவைக்கு நடைபெற்ற கடந்த பொதுத்தேர்தலில் அந்தக் கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்ட வேட்பாளர்கள் மாநிலத்தின் பதிவான செல்லுபடியான மொத்த வாக்குகளில் ஆறு சதவீதத்திற்குக் குறையாத வாக்குகளை பெற்றிருக்க வேண்டும்; இந்தத் தேர்தலில் குறைந்தபட்சம் ஒரு உறுப்பினராவது அந்தக் கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும்; அல்லது
3. மாநிலத்தின் சட்டமன்றத்திற்கு நடைபெற்ற கடந்த பொதுத்தேர்தலில், அந்தக் கட்சியானது சட்டமன்றத்தின் மொத்த இடங்களில் குறைந்தபட்சம் மூன்று சதவீத

இடங்களில், அல்லது குறைந்த பட்சம் மூன்று இடங்களில், இதில் எது அதிகமோ அதில், வெற்றி பெற்றிருக்க வேண்டும்.(பாதிக்கு மேலான எந்தவொரு பகுதியும் முழுமையானதாகக் கருதப்படும்); அல்லது

4. மாநிலத்திலிருந்து மக்களவைக்கு நடைபெற்ற கடந்த பொதுத்தேர்தலில், அந்த மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு 25 இடங்களுக்கு அல்லது அதன் எந்தவொரு பகுதிக்கும் ஒரு உறுப்பினர் என்ற வகையில் அந்தக் கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும்; அல்லது
5. மாநிலத்திலிருந்து மக்களவைக்கு நடைபெற்ற கடந்த பொதுத்தேர்தலில் அல்லது மாநிலத்தின் சட்டமன்றத்திற்கு நடைபெற்ற கடந்த பொதுத் தேர்தலில் அந்தக் கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்ட வேட்பாளர்கள் அந்த மாநிலத்தின் பதிவான மொத்த செல்லுபடியான வாக்குகளில் எட்டு சதவீதத்திற்குக் குறையாமல் பெற்றிருக்க வேண்டும்.

***பிரிவு 6பி. தேசியக் கட்சியாக அங்கீகரிக்கப்படுவதற்கான நிபந்தனைகள்:***

எந்தவொரு அரசியல் கட்சியும் தேசியக் கட்சியாக அங்கீகரிக்கப்படுவதற்கு, கீழ்கண்ட நிபந்தனைகளில் ஏதாவதொன்றை நிறைவேற்றுவதன் மூலம் மட்டுமே தகுதி பெற முடியும்:

1. அந்தக் கட்சியினால் தேர்தலில் நிறுத்தப்பட்ட வேட்பாளர்கள், நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில், அந்த மாநிலங்களிலிருந்து மக்களவைக்கு நடைபெற்ற பொதுத் தேர்தலிலோ அல்லது சம்பந்தப்பட்ட மாநிலத்தின் சட்டமன்றத்திற்கு நடைபெற்ற பொதுத் தேர்தலிலோ, அந்த மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் பதிவான வாக்குகளில் மொத்த செல்லுபடியான வாக்குகளில் ஆறு சதவீதத்திற்குக் குறையாத அளவில் வாக்குகளை அந்தப் பொதுத் தேர்தலில் பெற்றிருக்க வேண்டும். மேலும் எந்தவொரு மாநிலத்திலிருந்தோ அல்லது மாநிலங்களிலிருந்தோ குறைந்தது நான்கு உறுப்பினர்களாவது அந்தக் கட்சியின் சார்பில் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும்.; அல்லது
2. மக்களவைக்கு நடைபெற்ற கடந்த பொதுத் தேர்தலில் அந்தக் கட்சியானது மக்களவையின் மொத்த இடங்களின் எண்ணிக்கையில் குறைந்தபட்சம் இரண்டு சதவீத இடங்களில் வெற்றி பெற்றிருக்க வேண்டும். பாதிக்கு மேலான எந்தவொரு பகுதியும் முழுமையானதாகக் கணக்கிடப்படும்; அந்தக் கட்சியின் சார்பில் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மூன்றுக்குக் குறையாத மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும்; அல்லது
3. அந்தக் கட்சியானது குறைந்தது நான்கு மாநிலங்களில் மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

***பிரிவு 6 சி - தொடர்ந்து தேசிய அல்லது மாநிலக் கட்சியாக அங்கீகாரம் பெறுவதற்கான நிபந்தனைகள்:*** பிரிவு 6ஏ-யின் படி ஒரு அரசியல் கட்சியானது மாநிலக் கட்சியாகவோ அல்லது பிரிவு 6பி-யின் படி தேசிய கட்சியாகவோ அங்கீகரிக்கப்பட்டிருக்குமாயின், அந்தக் கட்சியானது அதைத் தொடர்ந்து நடைபெறும் பொதுத் தேர்தலுக்குப் பிறகு அத்தகைய அந்தஸ்து அந்தக் கட்சிக்கு நீட்டிக்கப்படுவதென்பது அந்தந்த பிரிவுகளில் கூறப்பட்ட நிபந்தனைகளை அந்தக் கட்சி அந்தப் பொதுத் தேர்தலில் பெறுவதைப் பொறுத்தே அமையும்.

## *தொலைக்காட்சிகளிலும் கேபிள் தொலைக்காட்சிகளிலும் அரசியல் தன்மை கொண்ட விளம்பரங்கள் வெளியிடுவது குறித்த தேர்தல் ஆணையத்தின் ஆணை*

எண். 509/75 2004/ஜேஎஸ்-1 நாள்: ஏப்ரல் 15, 2004

**ஆணை**

1. கேபிள் தொலைக்காட்சி (ஒழுங்கமைப்பு) சட்டம், 1995இன் பிரிவு 6இன் படி எவரொருவரும், கேபிள் சேவையொன்றின் மூலமாக, எந்தவொரு விளம்பரத்தையும், விளம்பரங்களுக்கென வகுக்கப்பட்ட விதிமுறைகளுக்கு உகுந்ததாக அந்த விளம்பரம் அமைந்திருந்தாலொழிய ஒளிபரப்பவோ அல்லது மறு ஒளிபரப்பு செய்யவோ கூடாது; மேலும்
2. கேபிள் தொலைக்காட்சி வலைப்பின்னல் (ஒழுங்கமைப்பு) விதிகள், 1994இன் பிரிவு 7இன் கீழ் துணைவிதி (3) ஆனது மேற்கூறிய பிரிவு 6 சுட்டிக்காட்டியிருந்த விளம்பரங்களுக்கென வகுக்கப்பட்ட விதிமுறைகள் பற்றிக் குறிப்பிடுகையில் "ஒரு விளம்பரத்தின் நோக்கமானது முழுமையாகவோ அல்லது குறிப்பாகவோ மத ரீதியான அல்லது அரசியல் தன்மை கொண்டதாக இருந்தாலோ, எந்தவொரு மத ரீதியான அல்லது அரசியல் நோக்கம் கொண்டதாக இருந்தாலோ அத்தகைய விளம்பரங்கள் அனுமதிக்கப்படக் கூடாது" என்று குறிப்பிட்டுள்ளது; மேலும்
3. WPMP எண் 5214/2004 ( ஜெமினி டிவி பிரைவேட் லிமிடெட் எதிர் இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் பிறர்: ) என்ற வழக்கில் ஆந்திரப் பிரதேச உயர்நீதிமன்றம் தனது 23.03.2004 தேதிய தீர்ப்பு மற்றும் ஆணையில் மேற்கூறிய கேபிள் தொலைக்காட்சி வலைப்பின்னல் (ஒழுங்கமைப்பு) விதிகள், 1994இன் பிரிவு 7இன் கீழ் துணைவிதி (3) யின் விதிமுறைகளை தற்காலிகமாக நிறுத்தி வைத்தது; மேலும்
4. சிறப்பு விடுப்பு மனு(பொது) எண் 6679/2004 ( செய்தி மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகம் எதிர் ஜெமினி டிவி மற்றும் இதரர்கள்) மீதான தனது இடைக்கால ஆணையின் மூலம் மாண்புமிகு உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவிக்கப்பட்ட ஆணைக்குப் பதிலாக கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பித்தது:
   - நாட்டின் சட்டத்திற்கு ஏற்புடையதாக இல்லாத, நெறிமுறை, ஒழுக்கம் ஆகியவற்றைப் பாதிக்கும் வகையிலான, மற்றவர்களை தன் கருத்துக்கு ஆட்படுத்துகின்ற அல்லது அதிர்ச்சியூட்டும், அசூயை ஊட்டும், மனக் கிளர்ச்சியைத் தரும் எந்தவொரு விளம்பரத்தையும் எந்தவொரு கேபிள் ஒளிபரப்பு நடத்துபவரோ அல்லது தொலைக்காட்சி நிறுவனமோ ஒளிபரப்பக் கூடாது.
   - இத்தகைய ஒளிபரப்புகள் இந்திய தேர்தல் ஆணையத்தால் மேற்பார்வையிடப்பட வேண்டும்.
   - இத்தகைய விளம்பரத்தை வெளியிடுவதற்கு வேட்பாளர் செய்யும் செலவு அவரது செலவுக்கணக்கில் சேர்க்கப்பட வேண்டுமா? அல்லது கூடாதா?என்ற கேள்வியானது ஏப்ரல் 5, 2004 அன்று கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்படும்.
   - இதுபோன்ற விளம்பரங்கள் சட்டத்திற்கு ஏற்புடையதாக உள்ளதா? என்பது குறித்த வரைமுறைகள் இந்திய தேர்தல் ஆணையத்தால் வகுக்கப்பட வேண்டும்.

5. சிறப்பு விடுப்பு மனு(பொது) எண் 6679/2004 இல் மாண்புமிகு உச்சநீதிமன்றம் ஏப்ரல் 13, 2004 அன்று வெளியிட்ட தனது அடுத்த ஆணையில் கீழ்கண்டவாறு வழிகாட்டியிருந்தது:

"..... இந்த வழக்கு குறித்த எங்களது ஆணையை வழங்குவதற்கு முன்பாக, அவ்வப்போது திருத்தப்பட்ட, அதன் அடிப்படையில் விதிகள் வகுக்கப்பட்ட, கேபிள் தொலைக்காட்சி வலையம் (ஒழுங்கமைப்பு) விதிகள், 1995 இன் (சுருக்கமாக 'சட்டம்') ஒரு சில வரைமுறைகளை நாம் பார்ப்பது உதவிகரமான ஒன்றாக இருக்கும். இந்தச் சட்டத்தின் நோக்கம் என்பது நாட்டில் கேபிள் தொலைக்காட்சி வலையத்தின் செயல்பாட்டை ஒழுங்கமைப்பதே ஆகும். இச்சட்டத்தின் 6வது பிரிவானது எந்தவொரு விளம்பரமும், அது வரையறுக்கப்பட்ட விளம்பர வகைமுறைகளுக்கு ஒத்ததாக இருக்கவில்லையெனில், அத்தகைய விளம்பரமானது கேபிள் சேவையின் மூலம் ஒளிபரப்பவோ அல்லது மறுஒளிபரப்பு செய்யவோ கூடாது என்று குறிப்பிடுகிறது. இந்தச் சட்டத்தின் 11வது பிரிவானது எந்தவொரு கேபிள் சேவை நடத்துனரும் இந்தச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு மாறாக செயல்பட்டதாகவோ அல்லது செயல்படுவதாகவோ இதற்கென அனுமதிக்கப்பட்ட அலுவலர் எவரும் கருதினால், இத்தகைய கேபிள் சேவை வழங்குவதற்கு பயன்படும் கருவியை பறிமுதல் செய்யலாம் என்று குறிப்பிடுகிறது.இந்தச் சட்டத்தின் விதிமுறைகளை எந்தவகையில் மீறினாலும் ஒளிபரப்புவதற்கான கருவிகளை பறிமுதல் செய்வதற்கு பிரிவு 12 வழிசெய்கிறது.பிரிவு 13உம் கூட கருவிகளை பறிமுதல் செய்வது மற்றும் தண்டனை ஆகியவற்றுக்கு வழி செய்கிறது.பிரிவு 16 ஆனது சட்டத்தின் விதிமுறைகளை மீறியதற்கான தண்டனைகள் குறித்துக் குறிப்பிடுகிறது. இதற்கென அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் எவரொருவரும் பொதுநலனுக்கு உகந்தது என்று கருதினால், மதம், இனம், மொழி, சாதிம் வகுப்பு அல்லது வேறெந்த அடிப்படையிலும் கசப்புணர்வை எழுப்பக் கூடும் என்றோ அல்லது விரோத உணர்வை, கசப்புணர்வை பல்வேறு மத, இன, மொழி அல்லது பகுதியினரிடையே அல்லது சாதி, வகுப்பினரிடையே எழுப்பி பொது அமைதியை குலைக்கக் கூடும் என்றோ கருதினால் எந்தவொரு விளம்பரத்தையும் ஒளிபரப்பு செய்யவோ அல்லது மறு ஒளிபரப்பு செய்யவோ, செய்வதிலிருந்து எந்தவொரு கேபிள் சேவை நிறுவனத்தையும், இதற்கான உத்தரவு ஒன்றின் மூலம், தடுக்க பிரிவு 19 வகை செய்கிறது. இந்தச் சட்டத்தின் விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான விதிமுறைகளை வகுப்பதற்கு இந்தச் சட்டத்தின் 22 வது பிரிவு மத்திய அரசுக்கு அனுமதி அளிக்கிறது. இதற்கான விதிமுறைகளை வகுக்க இந்தச் சட்டத்தின் 22 வது பிரிவு தனக்கு அளித்த அதிகாரங்களின் அடிப்படையில் மத்திய அரசானது கேபிள் தொலைக்காட்சி வலையங்களுக்கான விதிமுறைகள், 1994 ( சுருக்கமாக 'விதிகள்')-ஐ உருவாக்கியது. இந்த விதிமுறைகளின் 7வது விதிமுறையானது கேபிள் சேவையில் ஒளிபரப்பப்படும் எந்தவொரு விளம்பரமும் நாட்டின் சட்டங்களுக்கு ஒத்ததாக, இந்த சேவையின் சந்தாதாரர்களின் நெறிமுறையை, ஒழுக்கத்தை, மதரீதியாக பாதிப்புகளை ஏற்படுத்தாத ஒன்றாக இருக்கவேண்டும் என்று குறிப்பிடுகிறது. இதன் துணைவிதி (2)ஆனது எந்தவொரு இனத்தையும், சாதியையும், நிறத்தினரையும், பகுதியினரையும், தேசிய இனத்தினரையும் தரந்தாழ்த்தும் வகையிலான, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எந்தவொரு விதிமுறைக்கும் எதிரானதாக, மக்களை குற்றம் செய்யத் தூண்டுவதாக, அமைதியைக்

குலைப்பதாக, வன்முறையைத் தூண்டுவதாக, சட்டத்தை மீற முயல்வதாக, வன்முறையை உயர்த்திப் பேசுவதாக, எந்தவகையிலும் அநாகரீகமான தன்மை கொண்டதாக விளங்கும் எந்தவொரு விளம்பரமும் ஒளிபரப்ப அனுமதிக்கப்படக் கூடாது என்றும் குறிப்பிடுகிறது. துணைவிதி (3) ஆனது மேலும் குறிப்பிடுகையில் எந்தவொரு விளம்பரத்தின் ஒட்டுமொத்த நோக்கமும் மதரீதியான அல்லது அரசியல் தன்மை கொண்டதாக இருக்குமேயானால், எந்தவொரு மதரீதியான அல்லது அரசியல் நோக்கத்துடன் இருக்குமேயானால், அத்தகைய விளம்பரங்கள் எதுவும் ஒளிபரப்பவோ அல்லது மறு ஒளிபரப்பவோ அனுமதிக்கலாகாது. இத்தகைய பின்னணியில் இப்போது நாங்கள் கீழ்கண்ட ஆணையை பிறப்பிக்க விழைகிறோம்:

தொலைக்காட்சியிலோ அல்லது கேபிள் வலைப்பின்னல் மூலமாக விளம்பரம் அளிக்க விரும்பும் ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட தேசிய, மாநிலக் கட்சியும், போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளரும் தேர்தல் ஆணையத்திற்கு/ இதற்கென குறிப்பிடப்பட்ட அலுவலருக்கு (தேர்தல் ஆணையம் இவர்களை பட்டியலிட வேண்டும்) அந்த விளம்பர ஒளிபரப்பு துவங்குவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பாக தெரிவிக்க வேண்டும்.வேறு நபர்களோ அல்லது பதிவு செய்யப்படாத அரசியல் கட்சிகளாக இருப்பின் இத்தகைய ஒளிபரப்பு செய்யப்படுவதற்கு ஏழு நாட்களுக்கு முன்பாக மனுச் செய்ய வேண்டும். இத்தகைய மனுக்களுடன் வெளியிடவிருக்கின்ற விளம்பரத்தின் மின்னணு வடிவும் அதுகுறித்த எழுத்து வடிவிலான விவரங்கள் முறையாக ஒப்பளிக்கப்பட்ட வகையில் அனுமதிக்காக அளிக்க வேண்டும். தேர்தலின் முதல் கட்டமாக இருப்பின், இந்த மனுவின் மீதான முடிவு மனு கிடைக்கப்பெற்ற இரண்டு நாட்களுக்குள்ளும், இந்த முடிவு எடுக்கப்படும் வரை இதற்கு முன்பு நாங்கள் ஏப்ரல் 2, 2004 அன்று பிறப்பித்த ஆணை பொருந்தும். தேர்தலின் அடுத்த கட்டங்களாக இருப்பின், மனு மீதான உத்தரவு மனு கிடைக்கப்பெற்ற மூன்று நாட்களுக்குள் பிறப்பிக்கப்பட வேண்டும்.இந்த முடிவு எடுக்கப்படும்வரை, நாங்கள் ஏப்ரல் 2, 2004 அன்று பிறப்பித்த ஆணை பொருந்தும். இந்த மனுவின் மீது உரிய உத்தரவு பிறப்பிக்கும்போது விளம்பரத்தின் எந்தவொரு பகுதியையும் நீக்கவேண்டும் என்றோ அல்லது மாற்றி அமைக்க வேண்டுமென்றோ கூறுவதற்கான அதிகாரம் தேர்தல் ஆணையத்திற்கோ/ குறிப்பிடப்பட்ட அலுவலருக்கோ உண்டு.

இந்த சான்றிதழுக்கான மனு கீழ்கண்ட விவரங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்:

1. விளம்பரத்தினை தயாரிப்பதற்கு ஆன செலவு.
2. தொலைக்காட்சி நிறுவனத்திலோ அல்லது கேபிள் வலையம் மூலமாகவோ இத்தகைய விளம்பரத்தை ஒளிபரப்ப திட்டமிட்ட வகையில் எத்தனை முறை அந்த விளம்பரம் ஒளிபரப்ப திட்டமிடப்பட்டுள்ளது? ஒவ்வொரு ஒளிபரப்புக்கும் உரிய கட்டண விகிதம் ஆகியவை பற்றிய முழு விவரங்கள் தெரிவிக்கப்பட வேண்டும்.
3. இவ்வாறு ஒளிபரப்பு செய்யவிருக்கும் விளம்பரமானது வேட்பாளர் /அரசியல் கட்சிகளின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டே வெளியிடப்படுகிறது என்ற ஓர் அறிவிப்பையும் மனுவுடன் இணைக்க வேண்டும்.

4. அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் அல்லாத வேறு ஒருவரால் இந்த விளம்பரம் வெளியிடப்படுமானால், அத்தகைய நபர் இந்த விளம்பரமானது அரசியல் கட்சி அல்லது வேட்பாளரின் நலனுக்காக வெளியிடப்படவில்லை என்றும், எந்தவொரு அரசியல் கட்சியோ அல்லது வேட்பாளரோ இந்த விளம்பரத்திற்கான ஏற்பாடு செய்யவோ, அதற்கான தொகையை வழங்கவோ இல்லை என்ற உறுதிமொழியையும் தனது மனுவுடன் இணைக்க வேண்டும்.
5. இந்த விளம்பரத்திற்கான அனைத்து தொகைகளும் காசோலை மூலமாகவோ அல்லது கேட்போலை மூலமாகவோ வழங்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பையும் தனது மனுவுடன் அளிக்க வேண்டும்.

இந்தச் சட்டத்தின் பிரிவு 2(அ) அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் என்பதை உள்ளூர் அளவிலான அதிகாரம் கொண்டவர்களை குறிப்பதாக, அதாவது அ) மாவட்ட ஆட்சியர் ஆ) கோட்ட ஆட்சியர் அல்லது இ) காவல் ஆணையர் என்பதாகத் தெரிவிக்கிறது. அதைப் போன்றே 1951ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 28-அ தேர்தல் அலுவலர், துணைத் தேர்தல் அலுவலர், தலைமை அலுவலர், வாக்குப்பதிவு அலுவலர் மற்றும் மாநில அரசினால் இந்த தேர்தல் பணிக்காக சுட்டிக் காட்டப்பட்ட எந்தவொரு காவல் துறை அலுவலரும், தேர்தல் நடப்புக் காலத்தில் தேர்தல் ஆணையத்திற்கு மாற்றுப் பணியில் வந்தவர்களாகவே கருதப்படுவர் என்றும், இந்தக் காலமானது இத்தகைய தேர்தல் பற்றிய அறிவிப்பு செய்யும் நாளிலிருந்து தேர்தல் முடிவுகள் வெளியாகும் நாள் வரை தேர்தல் ஆணையத்தில் பணிபுரிபவர்களாகவே கருதப்படுவர். இந்தக் காலப்பகுதியில் இவர்களை கட்டுப்படுத்துவது, மேற்பார்வையிடுவது, ஒழுங்குபடுத்துவது ஆகியவற்றை தேர்தல் ஆணையமே மேற்கொள்ளும்.

பல்வேறு கேபிள் தொலைக்காட்சி வலைப்பின்னல்களிலும் தொலைக்காட்சி நிலையங்களிலும் வெளியாகும் அனைத்து விளம்பரங்களையும் வெளியிடுவதற்கு முன்பாக தணிக்கை செய்வதென்பது முற்றிலும் இயலாத ஒன்றாகும் என்ற நிலையில் தேர்தல் ஆணையம் தன் சார்பாக இந்த அதிகாரங்களை அனைத்து மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் உள்ள மாவட்ட ஆட்சியர்களிடம், துணைக் கோட்ட ஆட்சியரின் தகுதிக்குக் குறையாத அலுவலரிடம் அல்லது மாநில குடிமைப்பணியைச் சேர்ந்த உறுப்பினரிடம் வழங்க வேண்டும். தேர்தல் ஆணையம் பொதுவான ஓர் உத்தரவை பிறப்பிப்பதன் மூலம் இதைச் செய்ய முடியும்.இந்த அலுவலர்கள் தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாடு, மேற்பார்வை, ஒழுங்குமுறைக்குள் வருவார்கள்.இதற்கு பதிலாக தேர்தல் ஆணையம் இத்தகைய தனது அதிகாரத்தை மாநில, யூனியன் பிரதேசங்களின் தலைமை தேர்தல் அலுவலரிடம் வழங்கலாம்.

ஒவ்வொரு மாநில, யூனியன் பிரதேச தலைமை தேர்தல் அலுவலர் இதுகுறித்த புகார்களை, குறைகளைப் பற்றி விசாரிக்க ஒரு குழுவை நியமிக்கலாம்.விளம்பரத்திற்கான சான்றிதழ் வழங்குவது அல்லது மறுப்பது ஆகிய முடிவுகள் மீது எந்தவொரு அரசியல் கட்சியோ, வேட்பாளரோ அல்லது தனிநபரோ இந்தக் குழுவிடம் தங்களது புகாரை அளிக்கலாம்.இவ்வாறு நியமிக்கப்பட்ட குழுவானது தனது முடிவை தேர்தல் ஆணையத்திற்கு அனுப்ப வேண்டும்.

இவ்வாறு நியமிக்கப்பட்ட குழுவானது தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாடு, மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைக்கு உட்பட்டதாக அமையும்.

மின்னணு ஊடகத்தின் மூலமாக விளம்பரங்கள் செய்வதற்கு மனுச்செய்யும் எந்தவொரு அரசியல் கட்சியும், வேட்பாளரும், தனிநபரும் இந்தக் குழுவின் முடிவுகளுக்குக் கட்டுப்பட வேண்டும். மேலே விரிவாகக் கூறப்பட்ட வகையில் இந்தச் செயல்பாடு அமைய வேண்டும்.

விளம்பரத்தை நீக்குவது அல்லது திருத்துவது ஆகியவற்றுக்கான கருத்துக்களும் யோசனைகளும் இது தொடர்பான அனைவரையும் கட்டுப்படுத்துவதாகும். இதுபோன்ற தகவல் பெறப்பட்ட 24 மணிநேரத்திற்குள் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சி, வேட்பாளர் அல்லது வேறெந்த தனிநபரும் கூறப்பட்ட மாற்றங்களை செய்து மீண்டும் பரிசீலனைக்காகவும் சான்றிதழ் பெறவும் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த ஆணையின் வரம்பிற்குள் வரும் விளம்பரங்களுக்கு 1951ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 126வது பிரிவின் விதிமுறைகள் பொருந்தும் எனவும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தக் குழுவினால் அல்லது அதிகாரபூர்வ அலுவலரால் அல்லது தேர்தல் ஆணையத்தின் முடிவினால் பாதிக்கப்பட்ட எந்தவொரு அரசியல் கட்சியும், வேட்பாளரும், தனிநபரும் எந்தவொரு புகாரையும் உரிய தீர்வு கோரி இந்த (உச்ச) நீதிமன்றத்தைத் தவிர வேறு எந்தவொரு நீதிமன்றத்தையோ, ஆணையத்தையோ, தீர்ப்பாயத்தையோ அணுக இயலாது. இந்த அமைப்புகளும் இதுபோன்ற மனுக்களை அனுமதிக்கலாகாது.இந்த ஆணையானது ஏப்ரல் 16, 2004 முதல் அமலுக்கு வருகின்றது என்பதோடு மே 10, 2004 வரை இது தொடர்ந்து அமலில் இருக்கும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 142வது ஷரத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை செயல்படுத்தும் விதத்தில் இந்த ஆணை வழங்கப்படுகிறது. கேபிள் தொலைக்காட்சி வலைப்பின்னல், தொலைக்காட்சி நிலையங்கள், கேபிள் நடத்துநர்கள் உள்ளிட்ட மின்னணு ஊடகத்தில் விளம்பரம் செய்ய திட்டமிட்டுள்ள அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், தனிநபர்கள், நபர்களைக் கொண்ட குழுக்கள் அல்லது டிரஸ்டுகள் போன்ற அனைவரையும் இது கட்டுப்படுத்தும்.

இதுபோன்ற விளம்பரங்களை கண்காணிப்பதற்குத் தேவைப்படும் ஊழியர்களை கோருவதற்கான உரிமையும் தேர்தல் ஆணையத்திற்கு உண்டு.இந்த உத்தரவை மீறியதாக தேர்தல் ஆணையம் கருதுமேயானால், அவ்வாறு உத்தரவை அல்லது இந்தச் சட்டத்தை மீறியவர்களுக்கு இத்தகைய விதிமீறல்களை உடனடியாக நிறுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கவும், இதற்குரிய கருவிகளை நேரடியாகப் பறிமுதல் செய்யவும் தேர்தல் ஆணையத்திற்கு உரிமை உண்டு. இவ்வாறு பிறப்பிக்கப்பட்ட ஒவ்வொரு உத்தரவையும் பெறுவோர் உடனடியாக அதற்கு இணங்க நடக்க வேண்டியது அவசியமாகும்.

இவ்வாறு விளம்பரங்களை கண்காணிப்பதற்கு தேவைப்படும் நிதியை மத்திய அரசு தேர்தல் ஆணையத்திற்கு வழங்க வேண்டும்.இந்த ஆணை பற்றி போதுமான பிரச்சாரத்தையும்

மத்திய அரசு மின்னணு ஊடகம் மற்றும் பத்திரிக்கைகள் வாயிலாக பரவலாக மேற்கொள்ள வேண்டும்.

இந்த ஆணையானது இந்த நீதிமன்றம் ஏப்ரல்2, 2004 அன்று பிறப்பித்த ஆணையின் தொடர்ச்சியே ஆகும்.இந்த ஆணையானது மே10, 2004 வரை இடைக்கால நடவடிக்கையாக அமலில் இருக்கும்.

மேற்கண்ட ஆணையில் கூறப்பட்டுள்ள வகையில், மார்ச் 23, 2004 அன்று ஆந்திரப் பிரதேச உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பானது தொடர்ந்து செயலில் இருந்து நிறுத்தி வைக்கப்படுகிறது. இந்த ஆணையானது மேற்கூறிய சட்டத்தின் விதிமுறைகளை மீறுவது குறித்த மத்திய அரசின் அதிகாரங்களை கட்டுப்படுத்துவதாக இல்லாமல் கூடுதல் அதிகாரங்களை வழங்கும் நோக்கத்துடனேயே வழங்கப்படுகிறது.

6. எனவே, மாண்புமிகு உச்சநீதி மன்றத்தின் மேற்கூறிய வழிகாட்டி நெறிமுறைகளைப் பின்பற்றும் வகையில் தேர்தல் ஆணையமானது கீழ்கண்டவாறு உத்திரவிடுகிறது:

1) அரசியல் கட்சிகள், கீழ்வரும் பத்தி(ஆ)வில் கூறப்பட்டுள்ள அமைப்புகளிடமிருந்து பெறப்படும் மனுக்களின் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்காக கீழ்கண்ட நபர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமிக்குமாறு, தில்லி தலைமை தேர்தல் அலுவலர் இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்:
   i. இணை தலைமை தேர்தல் அலுவலர் - தலைவர்.
   ii. தில்லியில் உள்ள ஒரு நாடாளுமன்றத் தொகுதியின் தேர்தல் அலுவலர்.
   iii. முதல் வகுப்பிற்குக் குறையாத தகுதி கொண்ட அலுவலர் ஒருவரை செய்தி மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்திடமிருந்து இந்தக் குழுவிற்கென கேட்டுப் பெறுவது.

2) கீழ்கண்ட அமைப்புகளால் தொலைக்காட்சி நிலையங்கள் அல்லது கேபிள் வலைப்பின்னலில் எந்தவொரு விளம்பரத்தையும் ஒளிபரப்ப சான்றிதழ் கோரி அனுப்பப்படும் மனுக்களை மேலே குறிப்பிட்ட குழு ஆய்வு செய்யும்.
   i. தில்லி தேசிய தலைநகர் பகுதியில் தங்கள் தலைமையகத்தைக் கொண்டிருக்கும் அனைத்து பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள்.
   ii. தில்லி தேசிய தலைநகர் பகுதியில் தங்கள் தலைமையகத்தைக் கொண்டிருக்கும் அனைத்துக் குழுக்கள் அல்லது அமைப்புகள் அல்லது கழகங்கள் அல்லது நபர்கள்.
   iii. மாநில, யூனியன் பிரதேசங்களின் தலைமை தேர்தல் அலுவலர்கள் அரசியல் கட்சிகள், கீழ்வரும் பத்தி (ஈ) யில் கூறப்பட்டுள்ள அமைப்புகளிடமிருந்து பெறப்படும் மனுக்களின் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்காக கீழ்கண்ட நபர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அ) கூடுதல்/இணை தலைமை தேர்தல் அலுவலர் - தலைவர்.

ஆ) மாநிலத்தின் தலைநகரில் உள்ள நாடாளுமன்றத் தொகுதி ஒன்றின் தேர்தல் அலுவலர்.

இ) முதல் வகுப்பிற்குக் குறையாத தகுதி கொண்ட அலுவலர் ஒருவரை செய்தி மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்திடமிருந்து இந்தக் குழுவிற்கென கேட்டுப் பெறுவது.

(ஈ) மேலே கண்ட (இ) பத்தியில் உருவாக்கப்படும் குழுவானது கீழ்கண்ட அமைப்புகள் தொலைக்காட்சி நிலையங்கள் அல்லது கேபிள் வலைப்பின்னலில் எந்தவொரு விளம்பரத்தையும் ஒளிபரப்ப சான்றிதழ் கோரி அனுப்பப்படும் மனுக்களை ஆய்வு செய்யும்.

- மாநில/ யூனியன் பிரதேச தலைநகர் பகுதியில் தங்கள் தலைமையகத்தைக் கொண்டிருக்கும் அனைத்து பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள்.
- மாநில/ யூனியன் பிரதேச தலைநகர் பகுதியில் பதிவு செய்யப்பட்ட தங்கள் தலைமையகத்தைக் கொண்டிருக்கும் அனைத்துக் குழுக்கள் அல்லது அமைப்புகள் அல்லது கழகங்கள் அல்லது நபர்கள்.

(உ) நாட்டிலுள்ள ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதியின் தேர்தல் அலுவலர்கள் கேபிள் வலைப்பின்னல் மூலமாக அல்லது தொலைக்காட்சி நிலையங்கள் மூலமாக விளம்பரங்களை வெளியிடுவதற்கு தேவையான சான்றிதழை கோரி அனுப்பப்படுகின்ற அவர்கள் தேர்தல் அதிகாரிகளாகச் செயல்படும் நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து போட்டியிடும் தனிப்பட்ட வேட்பாளர்கள் மற்றும் அந்த நாடாளுமன்றத்திற்குள் அடங்கும் சட்டமன்றத் தொகுதியில் இருந்து போட்டியிடும் வேட்பாளர் ஆகியோரின் இத்தகைய மனுக்களை பெற்று அதன் மேல் நடவடிக்கை எடுப்பதற்கான உரிய அலுவலர்களாக இந்த ஆணையின் மூலம் அறிவிக்கப்படுகிறார்கள். இந்தத் தேர்தல் அலுவலர்கள் தங்களுக்கு இந்தச் சான்றிதழ் பணியில் உதவி செய்ய சார்பு கோட்ட அலுவலர்கள் தகுதிக்குக் குறையாத வகையிலுள்ள எந்தவொரு உதவி தேர்தல் அதிகாரியையும் இந்தக் குழுவில் இணைத்துக் கொள்ளலாம்.

7. ஒவ்வொரு மாநில/யூனியன் பிரதேசத்தின் தலைமை தேர்தல் அலுவலரும் விளம்பரத்திற்கான சான்றிதழைக் கோரி எந்தவொரு அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் அல்லது வேறெந்த நபரிடமிருந்து பெறப்படும் மனுக்கள் அல்லது புகார்கள் அல்லது குறைகள் ஆகியவற்றை கையாள கீழ்கண்ட நபர்களைக் கொண்ட குழுவை நியமிக்க வேண்டும்:
   i. தலைமை தேர்தல் அலுவலர் - தலைவர்
   ii. தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்படும் பார்வையாளர்.
   iii. மேலே கண்ட 6(அ) மற்றும்6(இ) ஆகிய பத்திகளில் குறிப்பிட்டுள்ளவர்கள் அல்லாத ஒரு நிபுணரை இந்தக் குழு இணைத்துக் கொள்ளலாம்.
8. மேலே 6(அ) மற்றும் 6(இ) ஆகிய பத்திகளில் கூறப்பட்டுள்ள குழுக்களிடமோஅல்லது 6 (ஈ) பத்தியில் கூறப்பட்டுள்ள நியமிக்கப்பட்ட அலுவலர்களிடமோ விளம்பரத்திற்கான சான்றிதழைக் கோரிய மனுக்களை பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளும், போட்டியிடும் வேட்பாளர்களும் அத்தகைய விளம்பரங்களை ஒளிபரப்ப நிச்சயிக்கப்பட்டுள்ள நாளுக்கு மூன்று நாட்களுக்கு முன்பாக வழங்க வேண்டும். தேர்தலின் முதல் கட்டத்தைப் பொறுத்தவரையில் இத்தகைய மனுக்களின் மீது அவை பெறப்பட்ட இரண்டு நாட்களுக்குள்

முடிவெடுக்கப்பட வேண்டும்.அத்தகைய முடிவு எட்டப்படும் வரை உச்சநீதிமன்றத்தின் ஏப்ரல் 2, 2004 தேதிய ஆணையே பொருந்தும்.

9. இத்தகைய மனுக்களை வேறு தனிநபர்களோ அல்லது பதிவு செய்யப்படாத கட்சிகளோ வழங்க வேண்டுமெனில் இந்த விளம்பரம் ஒளிபரப்ப நிச்சயிக்கப்பட்ட நாளுக்கு ஏழு நாட்களுக்கு முன்பாக வழங்கப்பட வேண்டும்.

10. இதற்கான ஒவ்வொரு மனுவும் இணைப்பு அ வில் குறிப்பிடப்பட்டுள்ள வடிவத்தில், கீழ்கண்ட இணைப்புகளைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

(அ) திட்டமிடப்பட்டுள்ள விளம்பரத்தின் மின்னணு வடிவத்தின் இரண்டு பிரதிகள்; அதனுடன் முறையாக ஒப்பளிக்கப்பட்ட விவரங்கள்.

(ஆ) சான்றிதழுக்கான மனு கீழ்கண்ட விவரங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்:

அ) விளம்பரத்தினை தயாரிப்பதற்கான செலவு.

ஆ) தொலைக்காட்சி நிறுவனத்திலோ அல்லது கேபிள் வலைப்பின்னல் மூலமாகவோ இத்தகைய விளம்பரத்தை ஒளிபரப்ப திட்டமிட்ட வகையில் எத்தனை முறை அந்த விளம்பரம் ஒளிபரப்ப திட்டமிடப்பட்டுள்ளது? ஒவ்வொரு ஒளிபரப்புக்கும் உரிய கட்டண விகிதம் ஆகியவை பற்றிய முழு விவரங்கள் தெரிவிக்கப்பட வேண்டும்.

இ) இவ்வாறு ஒளிபரப்பு செய்யவிருக்கும் விளம்பரமானது வேட்பாளர் /அரசியல் கட்சிகளின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டே வெளியிடப்படுகிறது என்ற ஓர் அறிவிப்பையும் மனுவுடன் இணைக்க வேண்டும்.

ஈ) அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் அல்லாத வேறு ஒருவரால் இந்த விளம்பரம் வெளியிடப்படுமானால், அத்தகைய நபர் இந்த விளம்பரமானது அரசியல் கட்சி அல்லது வேட்பாளரின் நலனுக்காக வெளியிடப்படவில்லை என்றும், எந்தவொரு அரசியல் கட்சியோ அல்லது வேட்பாளரோ இந்த விளம்பரத்திற்கான ஏற்பாடு செய்யவோ, அதற்கான தொகையை வழங்கவோ இல்லை என்ற உறுதிமொழியையும் தனது மனுவுடன் இணைக்க வேண்டும்.

உ) இந்த விளம்பரத்திற்கான அனைத்து தொகைகளும் காசோலை மூலமாகவோ அல்லது கேட்போலை மூலமாகவோ வழங்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பையும் தனது மனுவுடன் அளிக்க வேண்டும்.

11. சான்றிதழுக்கான மனுவின்மீது முடிவெடுக்கையில் இதற்கென மேலே 6(அ) மற்றும் 6(இ) ஆகிய பத்திகளில் கூறப்பட்டுள்ள வகையில் அல்லது 6 (ஈ) பத்தியில் கூறப்பட்ட வகையில் உருவாக்கப்பட்டுள்ள குழுக்கள் அல்லது மேலே பத்தி 7 இன் படி உருவாக்கப்பட்ட மறுபரிசீலனைக்கான குழு ஆகியவை விளம்பரத்தின் எந்தவொரு பகுதியையும் நீக்கவோ அல்லது மாற்றியமைக்கவோ கூறுவதற்கு அதிகாரம் படைத்ததாகும். அவ்வாறு தெரிவிக்கப்படும் கருத்துக்கள் மற்றும் நீக்குவதற்கோ அல்லது திருத்தம் செய்யவோ கூறப்படும் ஆலோசனைகள் ஆகியவை இந்த மனுதாரர்களை கட்டுப்படுத்துவதாகும்.இதுபோன்ற தகவல்

பெறப்பட்ட 24 மணி நேரத்தில் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சியோ, வேட்பாளரோ அல்லது தனிநபரோ அதற்கிணங்க செயல்பட்டு, கூறப்பட்ட திருத்தங்களை கொண்ட விளம்பரத்தை மறுபரிசீலனைக்காகவும் சான்றிதழ் அளிக்கவும் சமர்ப்பிக்க வேண்டும்.

12. மேலே 6(அ) மற்றும் 6(இ) ஆகிய பத்திகளில் கூறப்பட்டுள்ள வகையில் அல்லது 6 (ஈ) பத்தியில் கூறப்பட்ட வகையில் உருவாக்கப்பட்டுள்ள குழுக்கள் அல்லது மேலே பத்தி 7 இன் படி உருவாக்கப்பட்ட மறுபரிசீலனைக்கான குழு சட்டத்தின் தேவைக்கு உகந்த வகையிலும், மேலே 4 மற்றும் 5 பத்திகளில் கூறப்பட்டுள்ள உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களுக்கு உகந்த வகையிலும் அந்த விளம்பரம் இருக்குமானால், அந்தக் குழு அந்த விளம்பரம் ஒளிபரப்புக்குத் தகுதியானது என்று சான்றிதழ் வழங்க வேண்டும்.இத்தகைய சான்றிதழுக்கான மாதிரிப் படிவம் இணைப்பு -ஆவில் கொடுக்கப்பட்டுள்ளது.

13. உச்சநீதிமன்றத்தின் ஏப்ரல் 13, 2004 தேதிய ஆணையில் அடங்கியிருந்த வழிகாட்டுதல்கள் சம்பந்தப்பட்ட அனைவராலும் முறையாகப் பின்பற்றப்பட வேண்டும். இது மே 10, 2004 வரை அமலில் இருக்கும். இந்த ஆணையானது கேபிள் தொலைக்காட்சி வலைப்பின்னல், தொலைக்காட்சி நிலையங்கள், கேபிள் நடத்துநர்கள் உள்ளிட்டு மின்னணு ஊடகத்தில் விளம்பரம் செய்ய திட்டமிட்டுள்ள அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், தனிநபர்கள், நபர்களைக் கொண்ட குழுக்கள் அல்லது டிரஸ்டுகள் போன்ற அனைவரையும் கட்டுப்படுத்துவதாகும்.

*+++ குறிப்பு - (இந்த ஆணைகள் குறித்த மேலும் விவரங்களுக்கு தேர்தல் ஆணையத்தின் இணையதளம் www.eci.nic.in ஐ பார்க்கவும்)*

## தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் கேபிள் டிவி நெட்வொர்க் ஆகியவற்றில் அரசியல் விளம்பரங்கள் குறித்த தேர்தல் ஆணைய உத்தரவு - வானொலிக்கும் விரிவாக்கப்படுகிறது

**இந்தியத் தேர்தல் ஆணையம்**
**நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புதுதில்லி- 110001**

**எண் 509/75/2004/ஜே.எஸ்-1/வால்யூம்2/ஆர்சிசி/**

**தேதி 21, நவம்பர் 2008**

**ஆணை**

1) உச்சநீதி மன்றம் சிறப்பு அனுமதி மனு (சிவில்) எண் 6679 / 2004 (தகவல் ஒளிபரப்பு அமைச்சகம் VS ஜெமினி டிவி மற்றும் பிறர்) மீதான 13.04.2004 தேதியிட்ட ஆணைக்கிணங்க தேர்தல் ஆணையம் தனது 15.04.2004 தேதியிட்ட எண் 509/75/2004/ஜே.எஸ்-1/ ஆணையில் தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் கேபிள் டிவி நெட்வொர்க்குகள் ஆகியவற்றில் அரசியல் விளம்பரங்கள் தொடர்பான நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.

2) தகவல் ஒளிபரப்பு அமைச்சகம் தனது 20.11.2008 தேதியிட்ட எண் 1 / 04 / 2004 - பிசி IV கடிதத்தில் அகில இந்திய வானொலியில் வர்த்தக விளம்பரம் தொடர்பான நெறிமுறைகள் பிரிவு II (4) மாற்றியமைக்கப்பட்டு கீழ்க்கண்ட ஷரத்து சேர்க்கப்பட்டுள்ளது.

"அரசியல் கட்சிகள் / வேட்பாளர்கள் / இதர நபர்கள் ஆகியோரிடமிருந்து லோக்சபா பொதுத் தேர்தல்கள் / மாநில சட்டப் பேரவை பொதுத் தேர்தல்கள் / உள்ளாட்சி அமைப்புகளுக்கான பொதுத் தேர்தல்கள் ஆகியவற்றின் போது மாதிரி நடத்தை நெறிகள் அமலில் உள்ள காலங்களில் குறிப்பிட்ட கட்டணத்தை செலுத்தி குறு விளம்பரங்கள், குறும் பாடல் அடிப்படை விளம்பரங்கள் ஆகியவை ஏற்றுக் கொள்ளப்படும். இந்தத் தேர்தல்கள் காலங்களில் ஏற்று வெளியிடப்படும் விளம்பரங்கள் தேர்தல் ஆணையம் / தேர்தல் ஆணையத்தின் அதிகார அமைப்புகள் ஆகியவற்றின் ஒளிபரப்புக்கு முந்தைய ஆய்வுக்கு உட்படுத்தப்படும். "

3) இதனைக் கருத்தில் கொண்டு தொலைக்காட்சி அலைவரிசைகள் / கேபிள் நெட்வொர்க் ஆகியவற்றில் அரசியல் விளம்பரங்கள் தொடர்பாக 15.04.2004 தேதியிட்ட தனது ஆணை தனியார் பண்பலை வரிசைகள் உள்ளிட்ட வானொலி விளம்பரங்களுக்கும் பொருந்தும் என்றும் அறிவுறுத்தி உள்ளது. மக்களவை பொதுத் தேர்தல் அல்லது மாநிலங்கள் யூனியன் பிரதேசங்கள் சட்டப் பேரவை பொதுத் தேர்தல்கள் ஆகியவை தொடர்பாக மாதிரி நடத்தை நெறிகள் அமலில் உள்ள காலங்களுக்கு இந்த ஆணை பொருந்தும். இதன் அடிப்படையில் அரசியல் விளம்பரங்களை வானொலியில் ஒலிபரப்புவதற்கான சான்றளிப்பு மனு மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள குழுவிடம் ஒலிபரப்புக்கு முந்தைய ஆய்வு மற்றும் சான்றளிப்புக்கென சமர்பிக்கப்பட வேண்டும். இதற்கான விண்ணப்ப படிவம் 15.04.2004 தேதியிட்ட ஆணையில் தொலைக்காட்சி அலைவரிசை / கேபிள் நெட்வொர்க் ஆகியவற்றில் விளம்பரம்

செய்வதற்கான அதே படிவம் ஆகும். படிவத்துடன் கூட உத்தேச விளம்பரத்தின் சான்றொப்பம் அளிக்கப்பட்ட வாசகம் மற்றும் ஒலிப்பதிவு நாடா / குறுந்தகடு ஆகியவற்றையும் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். இந்தப் படிவங்களில் ஒளி பரப்புவது என்ற வாசகம் வானொலியைப் பொருத்தவரை ஒலிபரப்பு என எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

4) 15.04.2004 தேதியிட்ட ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள இதர அணைத்து நிபந்தனைகள் / நெறிமுறைகள் ஆகியவையும் இதற்குப் பிறகு இந்தப் பொருள் குறித்து வெளியிடப்பட்ட அறிவுரைகளில் காணப்படுபவையும் வானொலியில் ஒலிபரப்பாகும் அரசியல் விளம்பரங்களுக்கும் பொருந்தும்.

## *தொலைக்காட்சி அலைவரிசைகள், கேபிள் நெட்வொர்க்குகள் மற்றும் வானொலி மூலம் வெளியாகும் அரசியல் விளம்பரம் தொடர்பான தேர்தல் ஆணையத்தின் ஆணை - சில தெளிவுரைகள்*

**இந்தியத் தேர்தல் ஆணையம்**
**நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புதுதில்லி- 110001**

**எண் 509/75/2004/ஜே.எஸ்-1/வால்யூம்2/ஆர்சிசி/**

**தேதி 18, மார்ச் 2009**

பெறுநர்

அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள்

ஐயா / அம்மையீர்,

தேர்தல் ஆணையத்தின் 2004 ஏப்ரல் 15 - தேதியிட்ட ஆணை எண் 509/75/2004/ஜே.எஸ்-1/ குறித்து தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது. தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் கேபிள் நெட்வொர்க்குகள் ஆகியவற்றின் ஒளிபரப்பு சான்றிதழ் மனுக்களை ஆய்வு செய்வது குறித்த இந்த ஆணையை அடுத்து வெளியிடப்பட்ட 21 நவம்பர் 2008 தேதியிட்ட ஆணையில் முதலாவது ஆணை பொதுத் தேர்தலின் போது வானொலி விளம்பரங்களுக்கும் பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2. 15.04.2004 தேதியிட்ட மேலே குறித்த ஆணையின் படி தில்லி தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள குழு தில்லியில் தலைமை இடத்தைக் கொண்டுள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் மனுக்களையும் கையாளும். அனைத்து 7 தேசியக் கட்சிகளும் சில மாநிலக் கட்சிகளும் தில்லியில் தலைமை இடத்தைக் கொண்டுள்ளன. இந்தக் கட்சிகளின் மாநிலப் பிரிவுகள் அந்தந்த மாநிலங்களை கவனம் செலுத்தி விளம்பரங்களை வெளியிட விரும்பக் கூடும். இத்தகைய நிகழ்வுகளில் தேசியக் கட்சிகளின் மாநிலப் பிரிவுகளிலிருந்து வரும் மனுக்கள் சம்பந்தப்பட்ட மாநிலக் குழுக்களிடம் சமர்ப்பிக்கலாம். எனினும் தேசிய மற்றும் மாநில கட்சிகளின் தில்லி தலைமை அலுவலகங்களிலிருந்து செய்யப்படும் மனுக்கள் தொடர்ந்து தில்லிக் குழுவினால் பரிசீலிக்கப்படும். மாநிலக் கட்சிகளைப் பொருத்தவரை அவற்றின் தலைமை இடங்கள் அமைந்திராத மாநில கட்சிப் பிரிவுகளிலிருந்து சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் சம்பந்தப்பட்ட மாநிலக் குழுவினால் பரிசீலிக்கப்படும்.

3. தனிநபர் வேட்பாளர்களிடம் இருந்து தொலைக் காட்சி மற்றும் வானொலிக்கான விளம்பரத்திற்கென பெறப்படும் மனுக்கள் சம்பந்தப்பட்ட தொகுதி சார்ந்த தேர்தல் அதிகாரி தலைமையிலான குழுவிடம் சமர்பிக்கப்படும் என தெளிவு படுத்தப்படுகிறது.

4. ஒலிபரப்பு - ஒளிபரப்பு தொடர்பான சான்றிதழ் குழுவினால் வழங்கப்படும்போது இக்குழு ஒப்புதல் அளித்த விளம்பரத்தின் வாசகப் பிரதி ஒன்றையும் மனுதாரருக்கு அளிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அதே சமயம் இந்தக் குழு

அனுமதிக்கப்பட்ட வாசக பிரதியையும் சான்றளிக்கப்பட்ட விளம்பரத்தின் மின்னனுப் பிரதியையும் தன்னிடம் வைத்துக் கொள்ள வேண்டும்.

5. சம்பந்தப்பட்ட அனைவரின் கவனத்திற்கும் இந்த அறிவுரைகளைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். மேலும் உங்கள் மாநிலங்களில் அலுவலகம் அமைத்துள்ள அரசியல் கட்சிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மாநிலப் பிரிவுகள் ஆகியவற்றின் கவனத்துக்கும் கொண்டு வருமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

(ஒப்பம்)

நகல் - அனைத்து அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள்

***தொலைக்காட்சி அலைவரிசைகள், கேபிள் நெட்வொர்க்குகள் மற்றும் வானொலி மூலம் வெளியாகும் அரசியல் விளம்பரம் தொடர்பான தேர்தல் ஆணையத்தின் ஆணை - சில தெளிவுரைகள்***

**இந்தியத் தேர்தல்ஆணையம்**

**நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புதுதில்லி- 110001**

**எண் 509/75/2004/ஜே.எஸ்-1/வால்.-2/ஆர்சிசி/**

**தேதி 18, மார்ச் 2009**

பெறுநர்

அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள்

ஐயா / அம்மையீர்,

தேர்தல் ஆணையத்தின் 2004 ஏப்ரல் 15 - தேதியிட்ட ஆணை எண் 509/75/2004/ஜே.எஸ்-1/ குறித்து தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது. தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் கேபிள் நெட்வொர்க்குகள் ஆகியவற்றின் ஒளிபரப்பு சான்றிதழ் மனுக்களை ஆய்வு செய்வது குறித்த இந்த ஆணையை அடுத்து வெளியிடப்பட்ட 21 நவம்பர் 2008 தேதியிட்ட ஆணையில் முதலாவது ஆணை பொதுத் தேர்தலின் போது வானொலி விளம்பரங்களுக்கும் பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2. 15.04.2004 தேதியிட்ட மேலே குறித்த ஆணையின் படி தில்லி தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள குழு தில்லியில் தலைமை இடத்தைக் கொண்டுள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் மனுக்களையும் கையாளும். அனைத்து ஏழு தேசியக் கட்சிகளும் சில மாநிலக் கட்சிகளும் தில்லியில் தலைமை இடத்தைக் கொண்டுள்ளன.இந்தக் கட்சிகளின் மாநிலப் பிரிவுகள் அந்தந்த மாநிலங்களை கவனம் செலுத்தி விளம்பரங்களை வெளியிட விரும்பக் கூடும். இத்தகைய நிகழ்வுகளில் தேசியக் கட்சிகளின் மாநிலப் பிரிவுகளிலிருந்து வரும் மனுக்கள் சம்பந்தப்பட்ட மாநிலக் குழுக்களிடம் சமர்ப்பிக்கலாம். எனினும் தேசிய மற்றும் மாநில கட்சிகளின் தில்லி தலைமை அலுவலகங்களிலிருந்து செய்யப்படும் மனுக்கள் தொடர்ந்து தில்லிக் குழுவினால் பரிசீலிக்கப்படும். மாநிலக் கட்சிகளைப் பொருத்தவரை அவற்றின் தலைமை இடங்கள் அமைந்திராத மாநில கட்சிப் பிரிவுகளிலிருந்து சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் சம்பந்தப்பட்ட மாநிலக் குழுவினால் பரிசீலிக்கப்படும்.

3. தனிநபர் வேட்பாளர்களிடம் இருந்து தொலைக் காட்சி மற்றும் வானொலிக்கான விளம்பரத்திற்கென பெறப்படும் மனுக்கள் சம்பந்தப்பட்ட தொகுதி சார்ந்த தேர்தல் அதிகாரி தலைமையிலான குழுவிடம் சமர்பிக்கப்படும் என தெளிவு படுத்தப்படுகிறது.

4. ஒலிபரப்பு - ஒளிபரப்பு தொடர்பான சான்றிதழ் குழுவினால் வழங்கப்படும்போது இக்குழு ஒப்புதல் அளித்த விளம்பரத்தின் வாசகப் பிரதி ஒன்றையும் மனுதாரருக்கு அளிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அதே சமயம் இந்தக் குழு

அனுமதிக்கப்பட்ட வாசக பிரதியையும் சான்றளிக்கப்பட்ட விளம்பரத்தின் மின்னணுப் பிரதியையும் தன்னிடம் வைத்துக் கொள்ள வேண்டும்.

5. சம்பந்தப்பட்ட அனைவரின் கவனத்திற்கும் இந்த அறிவுரைகளைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். மேலும் உங்கள் மாநிலங்களில் அலுவலகம் அமைத்துள்ள அரசியல் கட்சிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மாநிலப் பிரிவுகள் ஆகியவற்றின் கவனத்துக்கும் கொண்டு வருமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

(ஒப்பம்)

நகல்- அனைத்து அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள்

***தேர்தலின்போது பணம் பெற்றுக்கொண்டு செய்தி வெளியிடுதல் தொடர்பாக தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களும் - திருத்தப்பட்ட வழிகாட்டுதல்களும்***

**இந்திய தேர்தல் ஆணையம்**
**நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புது தில்லி - 110 001.**

எண் 491/பணம்-செய்தி/2012/ஊடகம் நாள்: ஆகஸ்ட் 27, 2012

பெறுநர்
மாநில தேர்தல் அலுவலர்கள்
அனைத்து மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்கள்

ஐயா/அம்மையீர்,

மேலே குறிப்பிட்ட விஷயம் குறித்த தங்களின் கவனத்தை ஈர்க்குமாறு பணிக்கப்பட்டுள்ளேன். சிறப்பு விடுப்பு மனு எண் 6679/2004 என்ற வழக்கின் கீழ் உச்சநீதி மன்றம் (தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சகம் எதிர் ஜெமினி டிவி ப்ரைவேட் லிமிடெட் மற்றும் பிறர்) வழங்கிய ஆணையின் அடிப்படையில் தேர்தல் ஆணையம் எண்.509/75/2004/ஜேஎஸ் -1 என்ற எண்ணுள்ள ஆணையை ஏப்ரல் 15, 2004 அன்று வெளியிட்டது. இந்த ஆணையின்படி, தேர்தலில் போட்டியிடும் தனிநபர் வேட்பாளர்கள் அல்லது அரசியல் கட்சிகள் மின்னணு ஊடகத்தில் விளம்பரம் செய்வதற்கு முன்பாக அனைத்து விளம்பரங்களையும் பரிசீலிக்கவும், சோதிக்கவும், ஆய்வு செய்யவும் என ஒரு குழுவை உருவாக்குவது பற்றி குறிப்பிட்டிருந்தது. இதைத் தொடர்ந்து ஊடகச் சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக் குழு ஒன்றை ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்தல் காலங்களில் உருவாக்கி, பணத்தைப் பெற்றுக் கொண்டு செய்திகளை வெளியிடுவதை தடுப்பது என்ற கூடுதல் கடமையை மேற்கொள்ள தேர்தல் ஆணையம் தனது அதே கடித எண். ஜூன் 8, 2010, செப்டம்பர் 23, 2010, மார்ச் 18, 2011 மற்றும் ஆகஸ்ட் 16, 2011 ஆகிய தேதிய கடிதங்களில் வழிவகுத்து அளித்திருந்தது.

ஜூன் 8, 2010 மற்றும் அதைத் தொடர்ந்த கடிதங்களில் குறிப்பிடப்பட்டிருந்த பணம் கொடுத்து செய்தி பெறுவது என்ற நிகழ்வின் மீது வழங்கப்பட்ட ஆணைகளை மாற்றியமைத்த வகையில் கீழ்கண்டவாறு இந்த நிகழ்வு குறித்த நடவடிக்கைகள் அமையும் என்று அறிவுறுத்துமாறு கோரப்பட்டுள்ளேன்.

1. மாவட்ட அளவிலான ஊடகச் சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக் குழு

1.1 மாவட்ட அளவிலான ஊடகச் சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக் குழு கீழ்கண்ட உறுப்பினர்களைக் கொண்டதாக ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படும்.

(அ) மாவட்ட தேர்தல் அலுவலர்/ நாடாளுமன்றத் தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலர்.

(ஆ) உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் (சார்பு கோட்ட ஆட்சியர் தகுதிக்குக் குறையாத நிலையில் உள்ள அலுவலர்)

(இ) மத்திய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சக அலுவலர் (மாவட்ட அளவில் இருந்தால்)

(ஈ) ஒரு தனிநபர் அல்லது பிரஸ் கவுன்சில் ஆ.ப் இந்தியா பரிந்துரைக்கும் ஒரு பத்திரிக்கையாளர்.

(உ) மாவட்ட தகவல் தொடர்பு அலுவலர்/ மாவட்ட செய்தி அலுவலர்/அதற்கு இணையான தகுதி கொண்ட அலுவலர் - உறுப்பினர் செயலர்

1.1.1. மேற்குறிப்பிட்ட உச்சநீதி மன்றத்தின் ஆணையின்படி, நாடாளுமன்றத் தொகுதியின் தேர்தல் அலுவலர்/மாவட்டத் தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் (சார்பு கோட்ட ஆட்சியர் தகுதிக்குக் குறையாத நிலையில் உள்ள அலுவலர்) ஆகியோர் ஊடகச் சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக் குழுவில் உறுப்பினர்களாக இருக்க வேண்டியது அவசியமாகிறது. எனினும் பணம் கொடுத்து செய்திகளை வெளியிடுவது போன்ற விஷயங்களை ஆய்வு செய்வதற்காக மேலே குறிப்பிட்ட (இ),(ஈ) மற்றும் (உ) பத்திகளில் குறிப்பிடப்பட்ட அலுவலர்களை கூடுதலாக இந்தக் குழுவில் இணைக்கப்பட்டுள்ளது.

1.1.2 மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் அலுவலர் எவரும் மாவட்ட அளவில் செயல்படவில்லை எனில், மாவட்ட தேர்தல் அலுவலர் அந்த மாவட்டத்தில் உள்ள ஒரு மத்திய அரசு அலுவலர் அல்லது மூத்த மாநில அரசு அலுவலரை இந்தக் குழுவில் நியமித்துக் கொள்ளலாம்.

1.1.3 பிரஸ் கவுன்சில் ஆ.ப் இந்தியா இந்தக் குழுவில் இணைத்துக் கொள்ள பத்திரிக்கையாளர் எவரது பெயரையும் பரிந்துரைக்கவில்லையெனில், மாவட்ட தேர்தல் அலுவலர் அவரது பின்னணி மற்றும் அவரது நடுநிலை குறித்த தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இக்குழுவில் இருக்கத் தகுதியானவர் என தான் கருதுகின்ற ஒரு மூத்த குடிமகன்/மகள் அல்லது பத்திரிக்கையாளரை இக்குழுவில் நியமித்துக் கொள்ளலாம்.

1.1.4 இக்குழுவின் உறுப்பினர்-செயலர் (மாவட்ட தகவல் தொடர்பு அலுவலர்/மாவட்ட செய்தி அலுவலர் அல்லது அதற்குச் சமமான பதவி) அந்த மாநில குடிமைப் பணிகளைச் சேர்ந்த அலுவலராக இருக்க வேண்டும்.

1.2 இந்தக் குழுவானது இரண்டு வெவ்வேறான செயல்பாடுகளைக் கொண்டதாக இருக்கும்:

(அ) விளம்பரங்களுக்குச் சான்றளிப்பதற்கென இக்குழுவின் இரண்டு குறிப்பிட்ட உறுப்பினர்கள் ஒதுக்கப்படுவர். அதாவது தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் ஆகியோர் இதுபோன்ற விளம்பரங்களுக்குச் சான்றளிக்கும் விஷயங்களை கவனித்து முடிவுகளை எடுப்பார்கள்.

(ஆ) கண்காணிப்பு ஏற்பாடுகளின் மூலம் புகார்கள்/ பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது தொடர்பான பிரச்சினைகள் ஆகிய விஷயங்கள் இக்குழுவின் அனைத்து உறுப்பினர்களாலும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

1.3 மேற்கூறிய ஊடகச் சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக் குழுவானது விளம்பரங்களுக்கான சான்றளிப்பது, பணம் கொடுத்து செய்தி வெளியிடும் ஏற்பாடுகளை தடுப்பது போன்ற பணிகளோடு, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் ஊடகம் தொடர்பான விதிமுறைகளை முறையாக அமல்படுத்தவும் உதவி செய்ய வேண்டும். எனவே இந்தக் குழுவின் செயல்பாடுகளில் கீழ்கண்டவை அடங்கும்:

1.3.1 இந்தக் குழுவானது அனைத்து வகையான ஊடகங்களையும் சோதிக்கும்(உதாரணமாக செய்தித்தாள்கள், மின்னணு ஊடகம், கேபிள் டிவி வலையம், இணையதளம், மொபைல் நெட்வொர்க் போன்றவற்றில்)

அ. பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது பற்றிய சந்தேகத்திற்குரிய விஷயங்களை ஆய்விற்கு எடுத்துக் கொள்வது. (தேர்தல் செலவுக்கான பார்வையாளர்களால் இக்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது தொடர்பான வழக்குகளை இக்குழு தீவிரமாக ஆராய வேண்டும். பதிப்பிக்கப்பட்ட செய்தி/விளம்பரத்திற்கு ஆன உண்மையான செலவு அல்லது மாநில செய்தித் துறையின் விளம்பர விகிதத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட தோராயமான செலவு (மாநில செய்தித் துறையின் விளம்பர விகிதம் இல்லையெனில், மத்திய விளம்பரத்துறையின் விளம்பர விகிதம்) பற்றி வேட்பாளரின் செலவுக் கணக்கில் சேர்ப்பது குறித்த அறிவிப்பை வேட்பாளருக்கு அனுப்புவதற்காக அந்தத் தொகுதியின் தேர்தல் நடத்தும் அதிகாரிக்கு அனுப்புவது; இத்தகைய முடிவெடுக்கும்போது தொலைக்காட்சி/பத்திரிக்கை விளம்பரத்திற்கான இந்த செலவை வேட்பாளர் உண்மையிலேயே செய்தாரா அல்லது இல்லையா என்பதை பற்றி இந்தக் குழு கவலைப்பட வேண்டியதில்லை. இந்த அறிவிப்பின் ஒரு நகல் இந்தத் தேர்தலுக்கான செலவுகளுக்கான பார்வையாளருக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.)

ஆ. (ஏற்கனவே குழுவினால் சான்றளிக்கப்பட்ட பிறகே விளம்பரங்கள் ஒளி/ஒலிபரப்பப்படுகின்றனவா என்பதை சோதிக்க) மின்னணு ஊடகத்தில் வெளியாகும் அரசியல் சார்ந்த விளம்பரங்களை தொடர்ந்து கண்காணிப்பது.

இ. வேட்பாளர்கள் தொடர்பாக, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, இதற்கான செலவை கண்காணிக்கும் நோக்கில், இதர ஊடகங்களில் வெளியாகும் அரசியல் சார்ந்த விளம்பரங்களை கண்காணிப்பது. வேட்பாளரால் அல்லது அவரது சார்பாக அல்லது முக்கிய தலைவரின் அல்லது மற்றவர்களின், வேட்பாளரின் தேர்தல் வெற்றி வாய்ப்பில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய, பிரச்சார நடவடிக்கைகள், விளம்பரம் அல்லது வேண்டுகோள் ஆகியவை இதில் அடங்கும்.

ஈ. அச்சு ஊடகங்களில் வெளிவரும் விளம்பரங்கள்.( ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழுவானது இந்த விளம்பரங்கள் வேட்பாளருக்குத் தெரிந்த வகையில் அவரது ஒப்புதலுடன் வெளியிடப்பட்டதா என்பதை சோதிக்க வேண்டும். அப்படியெனில் இந்தச் செலவுகள் வேட்பாளரின் தேர்தல் செலவுகளில் சேர்க்கப்படும்; எனினும், இந்த விளம்பரங்கள் வேட்பாளரிடமிருந்து உரிய அனுமதியைப் பெறாமல் வெளியிடப்பட்டது எனில், இந்திய தண்டனைச் சட்டத்தின் 171எச் பிரிவினை மீறியதற்காக அந்த விளம்பரத்தினை பதிப்பித்தவரின் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

உ. எந்தவொரு தேர்தல் பிரச்சார பிரசுரத்திலும், போஸ்டரிலும், துண்டுப் பிரசுரங்களிலும் இதர பிரச்சார வெளியீடுகளிலும் 1951ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 127ஏ பிரிவில் கோரியுள்ளபடி பதிப்பாளரின் பெயரும் முகவரியும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை சோதிப்பது; (எந்தவொரு அச்சிடப்பட்ட பிரசுரமும் அச்சிடுபவர் அல்லது பதிப்பாளரின் பெயர் மற்றும் முகவரி இல்லாமல் இருந்தால், இது பற்றிய விவரத்தை மேல் நடவடிக்கைக்காக இந்தக் குழு தேர்தல் நடத்தும் அலுவலரின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். 1951ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 127ஏ பிரிவின் நோக்கத்தை நிறைவேற்றவே இத்தகைய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பணம் கொடுத்து செய்தி வெளியிடுவதும் இதர ஆவணங்கள் என்ற வகையில் அடங்கும்.)

1.3.2 ஒவ்வொரு வேட்பாளர் குறித்தும் தினமும் அறிக்கை ஒன்றையும் இந்தக் குழு கணக்குக் குழுவிற்கு அதற்குரிய படிவத்தில் (வரையறுக்கப்பட்ட செலவு குறித்த வழிகாட்டுதல்களின் இணைப்பு 12இன் படி) அனுப்பி வைக்க வேண்டும். இதன் நகல்கள் தேர்தல் நடத்தும் அலுவலருக்கும் செலவுக்கான பார்வையாளருக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டும். தேர்தல் தொடர்பான விளம்பரங்கள் அல்லது செய்தியை வெளியிடுவதற்கு ஆன உண்மையான செலவு, வேட்பாளரால் கொடுக்கப்பட்ட தேவையான ஆவணங்களால் நிரூபிக்கப்பட்ட வகையிலோ அல்லது பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது குறித்த வழக்குகளில் இந்தக் குழு வரையறை செய்த தோராயமான தொகையோ இதற்கான செலவாகக் கணக்கிடப்பட்டு இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட வேண்டும்.

1.3.3 பல்வேறு ஊடகங்களையும் கண்காணிப்பதற்குத் தேவையான, பொருத்தமான அமைப்பை கொண்டதாகவும், இதற்குத் தேவையான ஊழியர்களையும் கட்டமைப்பையும் கொண்டதாகவும் இந்தக் குழு இருக்க வேண்டும்.

2. மாநில அளவிலான ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழு

2.1 மாநில அளவிலான ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழுவானது கீழ்கண்ட அலுவலர்களைக் கொண்டதாக இருக்கும்:

(அ) தலைமை தேர்தல் அலுவலர் - தலைவர்

(ஆ) தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட பார்வையாளர்.

(இ) குழுவினால் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஒரு நிபுணர்.

(ஈ) மேலே கூறப்பட்ட நிபுணர் மட்டுமின்றி, இந்திய தகவல் பணியைச் சேர்ந்த மாநிலத்தில்/ யூனியன் பிரதேசத்தில் பணிபுரியும், இந்திய அரசின் ஊடகப் பிரிவு ஒன்றில் செயல்படுகின்ற ஓர் அலுவலர் ( சார்புச் செயலர்/ துணைச் செயலர் தகுதியில்)

(உ) தனிப்பட்ட ஒரு இந்தியக் குடிமகன்/மகள் அல்லது பிரஸ் கவுன்சில் ஆஃப் இந்தியாவினால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு பத்திரிக்கையாளர்.

(ஊ) கூடுதல்/இணை தலைமை தேர்தல் அலுவலர் (ஊடகத் தொடர்பிற்கான பொறுப்பு வகிப்பவர்) - உறுப்பினர் -செயலர்.

2.1.1 பிரஸ் கவுன்சில் ஆ.ஃப் இந்தியா இதற்கென பெயர் எதையும் சிபாரிசு செய்யவில்லையெனில், தலைமை தேர்தல் அலுவலரே ஒரு தனிப்பட்ட மூத்த குடிமகன்/மகள் அல்லது பத்திரிக்கையாளரை, அவரது பின்னணி மற்றும் நடுநிலை குறித்த விவரங்கள் அடிப்படையில் தகுதியானவர் என்று கருதும் பட்சத்தில், இந்தக் குழுவில் இணைத்துக் கொள்ளலாம்.

2.2 மாநில அளவிலான ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழு கீழ்கண்ட இரண்டு வகையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்:

(அ) மேலே குறிப்பிட்ட தேர்தல் ஆணையத்தின் ஏப்ரல் 15, 2004 தேதியிட்ட ஆணையின்படி, விளம்பரங்களுக்கு சான்றளிப்பது குறித்த மாவட்டக் குழுக்கள் மற்றும் கூடுதல்/இணை தலைமை தேர்தல் அலுவலர் ஆகியோரிடமிருந்து பெறப்படும் மேல்முறையீடுகள் குறித்த முடிவுகளை எடுப்பது.

(ஆ) பணம் கொடுத்து செய்திகளை வெளியிடுவது குறித்த மாவட்டக் கண்காணிப்புக் குழுக்களின் முடிவுகளை எதிர்த்து செய்யப்படும் மேல்முறையீடுகள் மீது முடிவுகள் எடுப்பது; அல்லது தாமாகவே முன்வந்து இத்தகைய சம்பவங்கள் மீது முடிவு எடுத்து அதை சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலருக்கு, வேட்பாளருக்கு உரிய அறிவிப்பு செய்வதற்காக, உத்திரவிடுவது.

2.2.1 விளம்பரங்களுக்கு சான்றிதழ் வழங்குவது குறித்த மேல் முறையீடுகளை மேலே கூறப்பட்ட (அ),(ஆ),மற்றும் (இ) ஆகிய அலுவலர்கள் ஏப்ரல் 15,2004 தேதிய தேர்தல் ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க கையாள வேண்டும். மேலே குறிப்பிட்ட (ஈ),(உ) மற்றும் (ஊ) அலுவலர்கள் பணம் கொடுத்து செய்தியை வெளியிடும் முயற்சிகள் குறித்த விஷயங்களை விசாரிக்கவே இந்தக் குழுவில் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

2.2.2 சான்றிதழ் வழங்குவதைப் பொறுத்தவரையில், இது குறித்து மாவட்டம் மற்றும் கூடுதல்/இணை தலைமை தேர்தல் அலுவலர் ஆகியோர் அடங்கிய குழுக்களின் முடிவுகளை எதிர்த்து மேற்கொள்ளப்படும் மேல்முறையீடுகள், ஏப்ரல் 15, 2004 தேதிய தேர்தல் ஆணையத்தின் ஆணைப்படி, மாநில தேர்தல் அலுவலர் தலைமையிலான மாநில அளவிலான ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழுவினால் மட்டுமே முடிவு எடுக்கப்படும். தேர்தல் ஆணையத்திற்கு இது குறித்து எவ்வித தகவலையும் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை.

3. சான்றிதழ் வழங்குவதற்கான கூடுதல்/இணை தலைமை தேர்தல் அலுவலர்:

விளம்பரங்களுக்கான சான்றளிக்க தேர்தல் ஆணையத்தின் ஏப்ரல் 15, 2004 தேதியிட்ட ஆணையின்படி நியமிக்கப்படும் கூடுதல்/இணை தலைமை தேர்தல் அலுவலர் தலைமையிலான குழுவானது மேலே குறிப்பிட்ட ஆணையின்படி தொடர்ந்து செயல்படும். பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது குறித்த விஷயங்களில் இந்தக் குழுவிற்கு எவ்வித அதிகாரமும் இருக்காது.

4. பணம் கொடுத்து செய்தி வெளியிடுதல் தொடர்பான வழக்குகளில் மாநில அளவிலான ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழுவின் முடிவிற்கு எதிராக மேல்முறையீடு

பணம் கொடுத்து செய்தி வெளியிடுதல் தொடர்பான வழக்குகளில் மாநில அளவிலான ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழுவின் முடிவிற்கு எதிரான எந்தவொரு மேல்முறையீட்டையும் தேர்தல் ஆணையத்திடம் செய்து கொள்ளலாம். அவசியம் எனக் கருதினால், மாநில அளவிலான குழுவும் தேர்தல் ஆணையத்திடம் எந்தவொரு வழக்கு குறித்தும் கருத்து கேட்கலாம். பணம் கொடுத்து செய்தி வெளியிடுதல் தொடர்பான புகார்கள் நேரடியாக தேர்தல் ஆணையத்திடம் செய்யப்படும்போது, இவை சம்பந்தப்பட்ட மாநில அளவிலான ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்காகவும் துவக்கநிலை நடவடிக்கைக்குமாக அனுப்பி வைக்கப்படும்.

5. பணம் கொடுத்து செய்தி வெளியிடுதல் தொடர்பான வழிகாட்டுதல்கள்:

இது தொடர்பாக கீழ்கண்ட வழிகாட்டுதல்களை பின்பற்றலாம்:

5.1 மக்களவை, மாநில/யூனியன் பிரதேச சட்டமன்றங்கள் ஆகியவற்றின் காலம் முடிவடைவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பாக, மாநிலத்தில்/யூனியன் பிரதேசத்தில் உள்ள தொலைக்காட்சி நிறுவனங்கள், ரேடியோ நிறுவனங்கள், நாளிதழ்கள் ஆகியவற்றின் பட்டியலும் அவற்றின் வழக்கமான விளம்பர விகிதங்களும் மாநில தலைமை தேர்தல் அலுவலரால் சேகரிக்கப்பட்டு, விளம்பரங்களுக்கான விகிதத்தை நிர்ணயிப்பதற்கென மாவட்டங்களில் உள்ள ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழுக்களுக்கு வழங்கப்படும்.

5.2. ஏதாவதொரு மக்களவை அல்லது சட்டமன்ற தொகுதிக்கான இடைத் தேர்தல் அறிவிக்கப்படுமாயின், அந்த மாவட்ட தலைமை தேர்தல் அலுவலர் உடனடியாக இந்த விளம்பரத்திற்கான விலைப்பட்டியலை பெற வேண்டும்.

5.3 இந்த விளம்பர விலைப்பட்டியலை பயன்படுத்துவது தொடர்பாக ஏதாகிலும் சந்தேகம் ஏற்படுமாயின் அந்த விஷயமானது மாநில தகவல் தொடர்புத் துறை அல்லது மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள ஊடக விளம்பரப் பிரிவிடம் கருத்து கோரப்பட வேண்டும்.

5.4 தேர்தல் பிரச்சாரம் துவங்குவதற்கு முன்பாக, மாநில/மாவட்ட தலைமை தேர்தல் அலுவலர் மேற்கண்ட வழிகாட்டுதல்கள் குறித்து அரசியல் கட்சிகளுக்கும், ஊடகங்களுக்கும் தகவல் தெரிவிப்பார். இந்த விஷயத்தில் ஊடகங்கள் தாங்களாகவே உரிய கட்டுப்பாடுகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்படும். இந்த வழிகாட்டுதல்கள் குறித்து பொதுமக்கள் பரவலாக அறிந்து கொள்ளும் வகையில் விரிவான பிரச்சாரம் மேற்கொள்ளப்படும். சுயகட்டுப்பாட்டின் அவசியத்தை உணர்த்துவதாகவே இந்த கருத்துப் பரிமாற்றத்தின் போக்கு அமைந்திருக்கும்.

5.5 பணம் கொடுத்து செய்திகளை வெளியிடுவது மற்றும் விளம்பரம் குறித்த சந்தேகத்திற்கிடமான வழக்குகள் கீழ்கண்ட வகையில் ஒரு குறிப்பிட்ட கால அளவில் தீர்வு காணப்பட வேண்டும்:

5.5.1 மாவட்ட அளவிலான ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழுவிடமிருந்து தகவல் பெற்றதும் வெளியீடு/ஒலிபரப்பு/ஒளிபரப்பு/பெறப்பட்ட புகார் ஆகியவை வெளியான 96 மணிநேரத்திற்குள் 'செய்தி' அல்லது அதைப்போன்ற விஷயத்தினை வெளியிடுவதற்கு ஆன செலவு குறித்து விளக்கவோ/ அதற்கான செலவை அறிவிக்கவோ அல்லது வழக்கமான விலைப்பட்டியலின் அடிப்படையில் இந்தச் செலவை ஏன் வேட்பாளரின் செலவுக் கணக்கில் சேர்க்கக் கூடாது? என்ற விளக்கத்தைக் கோரி தேர்தல் நடத்தும் அலுவலர் வேட்பாளருக்கு அறிவிப்பு தரவேண்டும். மாநில அளவிலான குழு இதுபோன்ற விஷயங்களில் தானாகவே முன்வந்து கையிலெடுக்கும் விஷயங்கள் மற்றும் புகார்களின் அடிப்படையில் எடுக்கும் விஷயங்கள் ஆகியவற்றுக்கும் இதே காலக்கெடு பொருந்தும்.

5.5.2 மாவட்ட/மாநில அளவிலான ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழுவிடமிருந்து அறிவிப்பு கிடைத்த 48 மணி நேரத்திற்குள் வேட்பாளர் அதற்கு உரிய பதிலை வழங்க வேண்டும். குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் பதில் பெறப்படவில்லையெனில், ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழுவின் முடிவே இறுதியானதாகும். வேட்பாளரின் பதில் கிடைத்தவுடன் மாவட்ட/மாநில அளவிலான ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழு அந்த பதிலை விரைவாக பரிசீலித்து, பதில் கிடைத்த 48 மணி நேரத்திற்குள் தனது இறுதி முடிவை வேட்பாளருக்கோ/கட்சிக்கோ தெரிவிக்க வேண்டும். (தேர்தல் ஆணையத்தின் கடித எண் 491/பணம் கொடுத்து செய்தி/ 2012/ஊடகம் தேதி: அக்டோபர் 9, 2012 இல் குறிப்பிடப்பட்டபடி இப்பகுதியானது திருத்தம் செய்யப்பட்டது)

5.5.3 மாவட்ட அளவிலான குழுவின் முடிவு வேட்பாளருக்குத் திருப்தி அளிக்கவில்லையெனில், இந்த முடிவு பெறப்பட்ட 48 மணி நேரத்திற்குள் மாநில அளவிலான குழுவிற்கு மேல் முறையீடு செய்யலாம். இது குறித்த தகவல் மாவட்ட அளவிலான குழுவிற்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

5.5.4 இவ்வாறு வேட்பாளரிடம் இருந்து மேல்முறையீடு பெறப்பட்ட 96 மணி நேரத்திற்குள் மாநில அளவிலான குழு விசாரித்து தனது முடிவை வேட்பாளருக்கு தெரிவிக்க வேண்டும். இந்த முடிவின் ஒரு நகல் மாவட்ட அளவிலான குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

5.5.5 மாநில அளவிலான குழுவின் முடிவையும் வேட்பாளர் ஏற்கவில்லையெனில் இந்த முடிவு பெறப்பட்ட 48 மணி நேரத்திற்குள் தேர்தல் ஆணையத்திடம் மேல்முறையீடு செய்யலாம். இந்த விஷயத்தில் தேர்தல் ஆணையத்தின் முடிவே இறுதியானது.

5.6 மேற்கூறிய இந்தச் செயல்முறைகள் அனைத்தும் தேர்தல் நடைபெறும் காலப்பகுதிக்குள் முடிக்கப்பட வேண்டும்.

6. ஒரு சில வழக்குகளில் பெரும் எண்ணிக்கையில் பணம் கொடுத்து செய்திகளை வெளியிடுவது குறித்த அறிவிப்புகள் கொடுக்கப்பட்ட போதிலும் அதைத் தொடர்ந்த நடவடிக்கைகள் தொடர்ந்து நிலுவையிலேயே இருந்து வந்துள்ளதையும் காண முடிகிறது. இது குறித்த ஒவ்வொரு வழக்கிலும் முறையான விவாதம் நடைபெறுவதை ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் உறுதிப்படுத்த வேண்டும். சந்தேகத்திற்கிடமான

பணம் கொடுத்து செய்தி வெளியிடும் விஷயங்கள் மட்டுமே தேர்தல் அலுவலருக்கு, வேட்பாளருக்கு உரிய அறிவிப்பு தருவதற்காக, அனுப்பி வைக்கப்பட வேண்டும். தேவையற்ற வழக்குகள் நடவடிக்கைக்கு எடுக்கப்படுவதை தவிர்க்கும் அதே நேரத்தில், ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் உண்மையான பணம் கொடுத்து செய்தி வெளியிடும் வழக்குகளை சோதிப்பதில் எவ்வித தயக்கமும் காட்டக் கூடாது.

7. பணம் கொடுத்து செய்தி வெளியிடுதல் என்ற சந்தேகத்திற்கு இடமான வழக்குகளை அவை உண்மையானவை ஏன்று மாவட்ட அளவிலோ/தலைமை தேர்தல் அலுவலர் அளவிலோ/ஆணைய அளவிலோ தீர்மானிக்கப்பட்ட பிறகு, இதற்கான உண்மையான செலவு/தோராயமான செலவு சம்பந்தப்பட்ட வேட்பாளரின் செலவுக்கணக்கின் ஒரு பகுதியாக சேர்க்கப்பட வேண்டும். இது குறித்து வேட்பாளருக்கு/அவரது முகவருக்கு முறையாக தகவல் தெரிவிக்கப்பட வேண்டும்.

மாவட்ட அளவில்/ மாநில அளவில்/தேர்தல் ஆணைய அளவில் பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது பற்றிய வழக்கு உண்மையானதே என முடிவு செய்யப்பட்டால், இது குறித்த விவரங்கள் பிரஸ் கவுன்சில் ஆ.ப் இந்தியாவிற்கு சம்பந்தப்பட்ட ஊடகம் குறித்து மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

***தேர்தல் பிரசாரத்தின் போது சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கான தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகள்***

**இந்தியத் தேர்தல் ஆணையம்**
**நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புதுதில்லி - 110001**

எண். 491/S.M./2013/தகவல் தொடர்பு தேதி 25 அக்டோபர், 2013

பெறுநர்

1. அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள்

2. அனைத்து தேசிய / மாநில அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்கள் / பொதுச் செயலாளர்கள்

ஐயா/ அம்மையீர்,

தேர்தல் பிரசாரத்திற்காக சமூக ஊடகங்களை பயன்படுத்துவது மற்றும் சமூக ஊடகங்களில் தேர்தல் சட்டங்கள் குறித்த சில விதிமீறல்கள் ஆகியவை குறித்து தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. தேர்தலில் சமநிலையான செயல்களத்தை அமைப்பது, வெளிப்படைத் தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இவை முறைப்படுத்தப்பட வேண்டியது அவசியம்.

சமூக ஊடகம் என்பது மக்களிடையே ஏற்படும் தகவல் பரிமாற்றம்.இதில் தகவல் மற்றும் கருத்துக்களை மெய்நிகர் சமுதாயங்கள் மற்றும் கட்டமைப்புகளிடையே அவர்கள் உருவாக்கி பகிர்ந்து கொண்டு பரிவர்த்தனை செய்து கொள்கின்றனர். தரம், சென்றடைவு நிலை, அடிக்கடி பயன்படுத்துதல், பயன்பாட்டுத் திறன், உடனடி நிலை, நிலைப்புத் தன்மை ஆகிய அம்சங்களில் இது பாரம்பரிய / தொழில்சார்ந்த ஊடகங்களில் இருந்து மாறுபடுகிறது. வலைத்தளம் மற்றும் சமூக ஊடகங்கள் கடந்த ஆண்டுகளாக உயர்ந்து பரவலாகி வருவதை அடுத்து அரசியல் கட்சிகளிடம் இருந்தும் சமூக குழுக்களிடம் இருந்தும் இந்த சமூக ஊடகங்களையும் இதர ஊடகங்களைப் போன்றே தேர்தல் காலத்தில் வரைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

விரிவாகப் பார்த்தோமெனில் சமூக ஊடகங்களில் 5 வகைகள் காணப்படுகின்றன.

a) கூட்டு முயற்சித் திட்டங்கள் (உதாரணமாக விக்கிப்பீடியா)

b) வலைப்பூ மற்றும் குறும்பதிவுகள் (உதாரணமாக டுவிட்டர்)

c)காணொளி சமூகதளங்கள் (உதாரணமாக யூ டியூப்)

d) சமூக இணைப்பு தளங்கள் (உதாரணமாக .:பேஸ்புக்)

e) மெய்நிகர் விளையாட்டு செயலிகள் (உதாரணமாக ஆப்ஸ்)

தேர்தல் பிரசாரம் தொடர்பான சட்டப் பிரிவுகள் பிற ஊடகங்களைப் பயன்படுத்தும் இதர மின்னணு பிரசாரத்துக்கு பொருந்துவதைப் போல சமூக ஊடக தேர்தல் பிரசாரத்துக்கும் பொருந்தும்.சமூக ஊடகங்கள் புதிதாக ஏற்பட்ட சமீப காலத்திய ஊடகங்கள் என்பதால் கீழ்க்கண்ட அறிவுரைகளின் மூலம் அவற்றின் பயன்பாட்டைத் தெளிவுபடுத்துவது அவசியமாகிறது.

A) வேட்பாளர்கள் தங்களது சமூக ஊடக கணக்குகள் குறித்த தகவல்களைச் சமர்ப்பிக்க வேண்டும்

வேட்பாளர்கள் படிவம் 26 -ல் பிரமாண வாக்கு மூலங்களை வேட்பு மனு தாக்கல் செய்யும் போது சமர்ப்பிக்க வேண்டும். பிரமாண வாக்கு மூலங்கள் எந்தப் படிவத்தில் எவ்வாறு சமர்ப்பிக்க வேண்டும் என்பது குறித்த விரிவான அறிவுரைகள் தேர்தல் ஆணையத்தின் 2012 ஆகஸ்ட் 24 தேதியிட்ட கடித எண் 3 / 4 / 2012 / எஸ்.டி.ஆர் என்ற கடிதத்தில் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் படிவத்தின் பத்தி 3 -ல் வேட்பாளரின் மின் அஞ்சல் அடையாளம் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட வேண்டும்.தேர்தல் ஆணையம் அவசியம் என்று கருதினால் வேட்பாளர்களின் சமூக ஊடகக் கணக்குகளும் ஆணையத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.இத் தகவல்கள் மேலே குறிப்பிட்ட பத்தி எண் 3 - ன் படி கீழ்க் கண்டவாறு அளிக்கப்பட வேண்டும்.

"எனது தொடர்புத் தொலைபேசி எண் / எண்கள் .....

எனது மின் அஞ்சல் குறியீடு.....

எனது சமூக ஊடக கணக்குகள் ....."

B) அரசியல் விளம்பரங்களுக்கு முன் சான்றளிப்பு

சிறப்பு அனுமதி மனு (சிவில்) N. 6679 / 2004 தேதி 13 ஏப்ரல் 2004 தொடர்பாக உச்சநீதி மன்றம் பிறப்பித்த ஆணையின் படி இப்பொருள் தொடர்பாக இந்தியத் தேர்தல் ஆணையம் தனது 15.04.2004 தேதியிட்ட ஆணை எண் 509 / 75 / 2004 / ஜே.எஸ் - 1 / 4572 -ன் படி விரிவான அறிவுரைகளை வழங்கியுள்ளது. ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட / தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகள் மற்றும் போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளரும் வெளியிட உத்தேசித்துள்ள தொலைக்காட்சி மற்றும் / அல்லது கேபிள் நெட்வொர்க் விளம்பரங்கள் தொடர்பாக தேர்தல் ஆணையத்திற்கு / நியமிக்கப்பட்ட அதிகாரிக்கு முந்தைய சான்றளிப்புக்காக விண்ணப்பிக்க வேண்டும் என்று இந்த ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆணை மேலும் மாற்றி அமைக்கப்பட்டு, ஒருமைப்படுத்தப்பட்டு, ஆணையத்தின் 27.08.2012 தேதியில் வெளியிடப்பட்டது. இதன்படி மாவட்ட மற்றும் மாநில நிலைகளில் ஊடகச் சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் இத்தகைய விளம்பரங்களுக்கு முன்பே சான்றளிக்கும் பொறுப்பைப் பெறுகின்றன. இந்தக் குழுக்களுக்கு பணம் செலுத்திய செய்திக்கு எதிரான நடவடிக்கைகள் போன்ற இதர பொறுப்புகளும் உள்ளன. சமூக ஊடக வலைத்தளங்கள் மின்னணு ஊடகமாக வரையறுக்கப்பட்டுள்ளதால் மேலே குறிப்பிடப்பட்ட தேர்தல் ஆணையத்தின் ஆணை சமூக ஊடக வலைத்தளங்கள் உள்ளிட்ட அனைத்து வலைத்தளங்களுக்கும் அப்படியே

பொருந்தும். எனவே அவற்றுக்கும் முந்தைய சான்றளிப்பு அவசியமாகின்றது. எனவே அரசியல் கட்சிகள் வேட்பாளர்கள் வெளியிட விரும்பும் எந்த அரசியல் விளம்பரமும் சமூக ஊடக வலைத்தளம் உள்ளிட்ட எந்த இணையதளம் அடிப்படை ஊடகம் / வலைத்தளம் மூலம் வெளியிடப்படும் போது உரிய அதிகாரிகளிடமிருந்து முன்பே சான்றளிக்கப்பட்டு வெளியிடப்படுவதை உறுதி செய்யுமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். மேலே குறிப்பிட்ட ஆணையில் கண்டுள்ளபடி அதே நடைமுறையைப் பின்பற்றி அதே படிவத்தில் சான்றளிப்பு இருப்பதையும் உறுதி செய்யுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

C) சமூக ஊடக வலைத்தளங்கள் உள்ளிட்ட இணையதளம் மூலமான பிரச்சாரச் செலவினங்கள்

1951 - ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 77 - வது பிரிவு முதல் துணைப் பிரிவின்படி வேட்பாளர் ஒவ்வொருவரும் தேர்தல் தொடர்பான செலவினத்திற்கு தனியாகவும் மற்றும் சரியாகவும் கணக்கு வைத்திருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இக் கணக்கில் வேட்பாளர் வேட்பு மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட தேதி வரையில் தாமே செலவிட்டது / செலவிட அனுமதித்தது / தனது தேர்தல் முகவர் செலவளித்தது ஆகியன இடம் பெற்றிருக்க வேண்டும். பொதுக் காரியங்கள், எதிர் இந்திய யூனியன் இடையே ஆன 2005 - ம் ஆண்டு வழக்கில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணையின்படி அரசியல் கட்சிகள் தேர்தல் செலவின அறிக்கையை தேர்தல் ஆணையத்திடம் சட்டப் பேரவைத் தேர்தலாய் இருந்தால் 75 நாட்களுக்குள்ளும், மக்களவைத் தேர்தலாக இருந்தால் 90 நாட்களுக்குள்ளும் சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வகையில் சமூக ஊடக விளம்பரங்கள் மூலமான தேர்தல் பிரச்சார செலவினமும் தேர்தல் செலவினத்தின் ஒரு பகுதியே என்பது தெளிவாகிறது.

இதில் ஐயப்பாடு ஏதும் இருந்தால் அதனை நீக்கும் வகையில் தற்போது ஆணை பிறப்பிக்கப்படுகிறது. இதன்படி வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் சமூக ஊடக விளம்பரச் செலவினங்கள் உள்ளிட்ட அனைத்து தேர்தல் பிரச்சார செலவினங்களையும் உள்ளடக்கி சரியான செலவினக் கணக்கைப் பராமரித்து செலவின அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும். இதில் இணையதளம் நிறுவனங்களுக்கு செலுத்திய தொகைகள், இணையதள விளம்பரத்திற்கான தொகைகள், பிரச்சாரம் தொடர்பான பொருளடக்க உருவாக்க நடைமுறைச் செலவினம் ஊதியம் போன்ற நடைமுறைச் செலவினங்கள், சமூக ஊடகக் கணக்குகளை பராமரிப்பதற்கு பணியாளர்களுக்கு வழங்கிய தொகைகள் ஆகியவை அனைத்தையும் வேட்பாளர்களும் அரசியல் கட்சிகளும் செலவுக்கணக்கில் இணைத்திருக்க வேண்டும்.

D) சமூக ஊடக வலைத்தளங்கள் உள்ளிட்ட இணையதளம் பொருளடக்கத்திற்கும் மாதிரி நடத்தை விதிகள் பொருந்தும்.

அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்குப் பொருந்துவது மாதிரி நடத்தை விதிகள் தேர்தல் காலத்தில் தேர்தல் அறிவிக்கப்பட்ட தேதி முதல் தேர்தல் நடவடிக்கைகள் முடிவடையும் வரை அமலில் இருக்கும். வேட்பாளர்களும் அரசியல் கட்சிகளும்

வெளியிடும் சமூக ஊடக வலைத்தளங்கள் உள்ளிட்ட இணையதளம் பொருளடக்கத்திற்கும் இந்த மாதிரி நடத்தை விதிகளும், தேர்தல் ஆணையம் அவ்வப்போது வெளியிடும். இது தொடர்பான அறிவுரைகளும் பொருந்தும்.

E) வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் அல்லாத நபர்கள் வெளியிடும் பொருளடக்கம் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் தேர்தல் பிரச்சாரத்துடன் எந்த அளவு தொடர்புடையவை என்பது சம்பந்தமாக தேர்தல் ஆணையம் தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்துடன் ஆலோசித்து இவற்றை நடைமுறையில் கையாளுவது பற்றி ஆலோசித்து வருகிறது.

இந்த அறிவுரைகளை வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள், ஊடகங்கள், தேர்தல் பார்வையாளர்கள் போன்ற இதனோடு தொடர்புடைய அனைவரின் கவனத்துக்கும் உடனடி நடவடிக்கைக்காக கொண்டு வருமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தங்கள் உண்மையுள்ள

(ஒப்பம்)

## *1951 - ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் பிரிவு 126 -ல் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தில் ஊடகப் பிரசாரம்*

1. தேர்தலின் போது தொகுதியில் வாக்குப் பதிவு முடிவடைவதற்கு 48 மணி நேரம் முன்பு வரையான காலத்தில் தொலைக்காட்சி அது போன்ற கருவிகள் மூலமான எவ்வித தேர்தல் காட்சிகளும் இடம் பெறக் கூடாது என 1951 - ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 176 பிரிவு தடை செய்துள்ளது. 176 - வது பிரிவின் சம்பந்தப்பட்ட துணைப் பிரிவுகள் (1) (b) கீழே தரப்பட்டுள்ளன,

(பிரிவு 126. தேர்தல் வாக்குப் பதிவு முடிவதற்கு நிர்ணயிக்கப்பட்ட மணிக்கு 48 மணி நேர முந்தைய காலத்துக்கு பொதுக் கூட்டங்களை தடைசெய்தல்.

(1) ஏந்த ஒரு நபரும் -

(a) ..... அல்லது (b) பொது மக்களுக்கு தேர்தல் தொடர்பான எந்தக் காட்சியையும் திரைப்படம், தொலைக்காட்சி அல்லது இதர அது போன்ற கருவிகள் அல்லது (c) .....

(2) துணைப் பிரிவு (1) இன் விதிமுறைகளை மீறும் எந்தவொரு நபருக்கும் 2 ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

(3) இந்தப் பிரிவில் "தேர்தல் விஷயம்" என்ற சொற்றொடரானது தேர்தல் முடிவுகளை பாதிக்கும் அல்லது தாக்கத்தை ஏற்படுத்தும் அனைத்து விஷயங்களையும் குறிப்பதாகும்)

2. தேர்தலின் போது தொலைக்காட்சி அலைவரிசைகள் தங்களது குழு விவாதம், இதர செய்தி மற்றும் நடப்பு நிகழ்வுகள் ஆகிய நிகழ்ச்சிகளின் போது மேலே குறித்த மக்கள் பிரதிநிதித்துவ சட்டப் பிரிவின் ஷரத்துகளை மீறியதற்கான குற்றச்சாட்டுக்கள் சில சமயம் எழுவதுண்டு. முற்காலத்தில் தேர்தல் ஆணையம் மேலே சொன்ன 126 - வது பிரிவு தேர்தல் தொடர்பான வாக்குப் பதிவு முடியும் நேரத்திற்கு முந்தைய 48 மணி நேரத்தில் விஷயத்தை தொலைக்காட்சி மற்றும் அது போன்ற கருவிகளின்முலம் காட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது என்பதை வலியுறுத்தி உள்ளது. அதே பிரிவில் தேர்தல் விஷயம் என்பது தேர்தல் முடிவைப் பாதிக்கக் கூடிய அல்லது தாக்கத்தைக் கொண்டுவரும் நோக்கத்துடனான எந்தவொரு விஷயமும் எனவும் வரையறுக்கப்பட்டுள்ளது.முன்னே குறித்த பிரிவு 126-ன் ஷரத்துக்களை மீறுவது 2 ஆண்டு வரையிலான சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டு ஆகிய தண்டனைகளுக்கு உட்பட்டது.

3) இந்த வகையில் மக்கள் பிரநிதித்துவ சட்ட 126 A பிரிவு குறித்தும் கவனம் ஈர்க்கப்படுகிறது. இதன்படி வாக்குப் பதிவுக்குப் பிந்தய கருத்துக் கணிப்பு மற்றும் இத்தகைய கருத்துக் கணிப்பு முடிவுகளை வெளியிடுதல் ஆகியன தடை செய்யப்பட்டுள்ளன.

4) தேர்தல் ஆணையம் மீண்டும் வலியுறுத்த விரும்புவது என்னவெனில் தொலைக்காட்சி / வானொலி அலை வரிசைகள் மற்றும் கேபிள் நெட்வொர்க்குகள் ஆகியன பிரிவு 126 - ல் குறிப்பிட்டுள்ள 48 மணி காலத்திற்கு தங்கள் நிகழ்ச்சிகளில் விவாதக் குழுவினர் / பங்கேற்பாளர்கள் கருத்துக்கள் / வேண்டுகோள்கள் போன்ற குறிப்பிட்ட கட்சி அல்லது

வேட்பாளரின் தேர்தல் எதிர்காலத்தை மேம்படுத்தும் / சிதைத்துவிடும் அல்லது தேர்தல் முடிவுகளைப் பாதிக்கும் வகையில் வெளியிட வேண்டாம் என்பதே ஆகும்.

5) சம்பந்தப்பட்ட தொலைக்காட்சி / வானொலி / கேபிள் / பண்பலை அலைவரிசை ஆகியவை மாநில / மாவட்ட / உள்ளூர் அதிகாரிகளை ஒளிபரப்பு தொடர்பான நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு தேவையான அனுமதி கோரி அணுகலாம். இத்தகைய நிகழ்ச்சிகள் மாதிரி நடத்தை வதிகளுக்கு உட்பட்டும் கேபிள் நெட்வொர்க் வரன்முறைச் சட்டத்தின்படி தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் வகுத்துள்ள நிகழ்ச்சி நெறிமுறைகளுக்கும் உட்பட்டு கண்ணியம் தவறாமல் சமுதாய நல்லிணக்கத்தைப் பராமரிக்கும் வகையில் அமைந்திருக்க வேண்டும். இந்த அமைப்புகள் தேர்தல் ஆணையத்தின் 2012 ஆகஸ்ட் 27 நெறிமுறைகளுக்கு உட்பட்டும் நடந்து கொண்டு பணம் செலுத்தி செய்திகள் வெளியிடுதல் போன்ற விஷயத்தில் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். இந்த அமைப்புகள் கோரும் அனுமதியை வழங்குவதற்கு முன், சம்பந்தப்பட்ட தலைமைத் தேர்தல் அதிகாரிகள் / மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் ஆகியோர் சட்டம் ஒழுங்கு நிலைமை உள்ளிட்ட அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

6) தேர்தல் காலத்தில் கடைபிடிப்பதற்கென இந்தியப் பத்திரிகை கவுன்சில் வெளியிட்டுள்ள கீழ்கண்ட நெறிமுறைகளையும் அனைத்து ஊடகங்களும் கவனத்தில் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(i) தேர்தல்கள் மற்றும் வேட்பாளர்கள் குறித்த நடுநிலையான செய்திகளை வெளியிடுவது பத்திரிகைகளின் கடமையாகும். தேர்தலின் போது எந்த வேட்பாளர் / கட்சி அல்லது சம்பவம் தொடர்பாகவும் மிகைப்படுத்தப்பட்ட செய்திகள் ஆரோக்கியமற்ற தேர்தல் பிரச்சாரங்களில் செய்தித் தாள்கள் ஈடுபடக் கூடாது. நடைமுறையில் 2 அல்லது 3 வேட்பாளர்கள் அனைத்து ஊடகங்களின் கவனத்தை கவருவார்கள்.உண்மையான பிரச்சாரம் பற்றி செய்தி வெளியிடும் போது வேட்பாளர் எழுப்பிய எந்தவொரு முக்கிய விஷயத்தையும் செய்தித்தாள்கள் விட்டு விடக் கூடாது.அந்த வேட்பாளரின் எதிர் வேட்பாளர் மீதான தாக்குதல்களுக்கு முக்கியத்துவம் தரக் கூடாது.

(ii) தேர்தல் விதிகளின் படி இன அல்லது சாதி அடிப்படையிலான பிரச்சாரம் தடை செய்யப்பட்டுள்ளது.எனவே பத்திரிகைகள் பகைமை உணர்வை வளர்க்கும் செய்திகளை தவிர்க்க வேண்டும்.சமய, இன, சாதி, சமுதாய, மொழி அடிப்படையில் மக்களிடையே வெறுப்பை ஏற்படுத்தும் செய்திகளையும் தவிர்க்க வேண்டும்.

(iii) எந்த வேட்பாளரின் தனிப் பண்புகள் மற்றும் நடத்தைகள் சார்ந்த தவறான அறிக்கைகளை பிரசுரிப்பதை பத்திரிகைகள் தவிர்க்க வேண்டும். தேர்தல்களில் வேட்பாளர் ஒருவரின் எதிர்காலத்திற்கு ஊறு ஏற்படுத்தும் வகையில் செய்தி வெளியிடக் கூடாது. எந்த வேட்பாளருக்கும் / கட்சிக்கும் எதிரான நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுகளை பத்திரிகைகள் பிரசுரிக்கக் கூடாது.

(iv) வேட்பாளர் / கட்சியை முன் நிறுத்துவதற்காக பத்திரிகைகள் எவ்விதமான நிதி உள்ளிட்ட கையூட்டுகளை ஏற்கக் கூடாது. வேட்பாளர் / கட்சி சார்பில் வழங்கப்படும் விருந்து உபசாரம் அல்லது இதர வசதிகளைப் பத்திரிகைகள் ஏற்கக் கூடாது.

(v) குறிப்பிட்ட வேட்பாளர் / கட்சிக்கு ஆதரவான பிரசாரங்களில் பத்திரிகைகள் ஈடுபடக் கூடாது. அவ்வாறு ஈடுபடும் போது இதர வேட்பாளர்கள் / கட்சிகள் பதிலளிக்கும் உரிமையை அவை அனுமதிக்க வேண்டும்.

(vi) கட்சிகளின் சாதனைகள் / அதிகாரத்தில் உள்ள அரசு ஆகியவை தொடர்பான பொதுச் செலவின் மூலம் கொடுக்கப்படும் விளம்பரங்களைப் பத்திரிகைகள், ஏற்கவோ வெளியிடவோ கூடாது.

(vii) தேர்தல் ஆணையம், தேர்தல் நடத்தும் அதிகாரிகள் அல்லது தலைமைத் தேர்தல் அதிகாரி வெளியிடும் ஆணைகள் / அறிவுரைகள் / நெறிப்படுத்துதல்கள் ஆகியவை அனைத்தையும் பத்திரிகைகள் கடைப்பிடிக்க வேண்டும்.

அனைத்து தொடர்புடைய ஊடகங்களும் மேற்குறித்த நெறிமுறைகளைக் கடைப்பிடித்து பின்பற்றி நடக்க வேண்டும்.

## *இந்தியப் பத்திரிகை மன்றம் தேர்தல் விவரங்கள் வெளியிடுவது குறித்த வழிகாட்டும் முறைகள், 1996*

பொது தேர்தல் நமது ஜனநாயகத்தின் மிக முக்கியமான அம்சமாகும். இந்தத் தேர்தல் குறித்து ஊடகங்கள் பணியாற்றும் பொழுது, வாக்காளர்கள் மத்தியில் போட்டியிடும் கட்சிகளின் தேர்தல் பிரச்சாரம் குறித்து ஊடகங்கள் நியாயமாகவும் நடுநிலையுடனும் செய்தி வெளியிடுவது கட்டாயமாகும். பத்திரிகை சுதந்திரம் என்பது அவை பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வதைப் பொறுத்தே உள்ளது. ஊடகங்கள் தேர்தல் பிரச்சாரத்தின் நியாயமான மற்றும் பாரபட்சமற்ற தகவல்களை வெளியிடுதல் வேண்டும். இந்தக் கொள்கையையே பின்பற்றுவதில் உறுதியுடன் செயலாற்ற வேண்டியது அத்தியாவசியமாகிறது.

எனவே தேர்தலின் போது ஊடகங்கள் கடைபிடிக்க வேண்டிய பின்வரும் வழிமுறைகளை இந்திய பத்திரிகை கவுன்சில் வகுத்திருக்கிறது:

1. தேர்தல் மற்றும் வேட்பாளர்கள் பற்றி பாரபட்சமற்ற செய்திகள் வெளியிடுவது ஊடகங்களின் கடமை. செய்தித்தாள்கள் எந்த வேட்பாளர் அல்லது கட்சி குறித்தும் ஆரோக்கியமற்ற, மிகைப்படுத்தப்பட்ட தகவல்களை தேர்தல் சமயத்தில் வெளியிடக்கூடாது. இரண்டு அல்லது மூன்று வேட்பாளர்கள் அனைத்து ஊடகங்களில் கவனத்தையும் ஈர்ப்பது நடைமுறை. தேர்தல் பிரச்சார செய்தியை வெளியிடும்போது ஒரு வேட்பாளர் எழுப்பும் முக்கிய பிரச்சினையை புறக்கணிப்பதோ அவரது எதிர் வேட்பாளர் மீதான தாக்குதலை பெரிதுபடுத்துவதோ கூடாது.
2. வகுப்பு ரீதியிலோ அல்லது சாதி ரீதியிலோ தேர்தல் பிரச்சாரம் செய்வது தேர்தல் விதிகளின்படி தடை செய்யப்பட்டுள்ளது. எனவே ஊடகங்கள் மதம், இனம், சாதி, சமூகம் அல்லது மொழி போன்றவற்றால் மக்களிடையே பகைமையையும் வெறுப்பையும் தூண்டும் உணர்வுகளை ஊக்குவிக்கும் அறிக்கைகளை வெளிக்கொணரவும் கூடாது.
3. ஊடகங்கள் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் வெற்றி பெறக்கூடிய வாய்ப்புக்களை பாதிக்கும் வண்ணம் தனிப்பட்ட நன்னடத்தை தொடர்பான தவறான அல்லது விமர்சன அறிக்கைகள் வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும். ஊடகங்கள் எந்த வேட்பாளருக்கோ அல்லது கட்சிக்கு எதிராக சரிபார்க்கப்படாத ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தக் கூடாது.
4. ஊடகங்கள் ஒரு வேட்பாளரிடத்திலிருந்தோ அல்லது கட்சியில் இருந்தோ (அவரையோ அல்லது ஒரு கட்சியையோ) முன்நிறுத்துவதற்காக அவர்கள் சார்பில் கொடுக்கப்படும் நிதி ஊக்கத்தையோ அல்லது எந்த வகையான பிற வசதிகளையோ ஏற்கக் கூடாது.
5. ஊடகங்கள் ஒரு குறிப்பிட்ட வேட்பாளர் அல்லது கட்சிக்காகவென்று தன்னை ஈடுபடுத்திக் கொள்ளக் கூடாது என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது நடக்காத பட்சத்தில் பிறிதொரு வேட்பாளர் அல்லது கட்சி தனது பதிலை அளிக்க உரிமை வழங்க வேண்டும்
6. ஊடகங்கள், ஆட்சியில் இருக்கும் கட்சியோ அல்லது வேறு விதத்திலோ பொதுக்கருவூலத்திலிருந்து செலவு செய்யப்பட்டு வழங்கப்படும் ஒரு கட்சி அல்லது அரசு சாதனைகள் பற்றிய எந்த விளம்பரத்தையும் ஏற்கவோ அல்லது வெளியிடவோ கூடாது

7. ஊடகங்கள் அவ்வப்பொழுது தேர்தல் ஆணையம் / தேர்தல் அதிகாரிகள் அல்லது தலைமை தேர்தல் அதிகாரிகள் வெளியிடும் எல்லா இயங்கும் முறைகளையும் / உத்தரவுகளையும் / அறிவுறுத்தல்களையும் ஏற்று நடந்து கொள்ள வேண்டும்
8. செய்தித்தாள்கள் தேர்தலுக்கு முந்தைய ஆய்வுகளை வெளியிடும் போது அந்த ஆய்வை மேற்கொண்ட நிறுவனம், தனிநபர் மற்றும் அமைப்பு, மாதிரி ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட பகுதி, அதன் தன்மை ஆய்வு செய்த விதம் ஆகியவற்றை தெளிவாக குறிப்பிட்டு இந்த ஆய்வில் ஏற்படக்கூடிய குறைபாடு சாத்தியங்களையும் சேர்த்து வெளியிட வேண்டும்.
9. ஒரு வேளை தேர்தல் மாறுபட்ட தேதிகளில் நிகழ நேர்ந்தால், எந்த ஒரு பத்திரிகையும் தேர்தல் முடிவு-குறித்த தேர்தலுக்கு முந்தைய ஆய்வுகளை, அவை எவ்வளவு உண்மைத்தன்மையுடன் இருந்தாலும் சரி, தேர்தல் முடிவடைவதற்கான கடைசி நாள் வரை காத்திருந்து, அதன் பின்னரே அவற்றை வெளியிட வேண்டும்.

***வாக்குபதிவுக்கு முன்னரும் வாக்குபதிவுக்கு பின்னரும் எடுக்கப்படும் ஆய்வு குறித்த நெறிமுறைகள் - 1996***

பிரதிநிதித்துவ முறைகொண்ட நமது ஜனநாயக்கத்தில் தேர்தல் நடவடிக்கை மிக முக்கிய பங்கு வகிப்பதால் தேர்தலில் தங்களின் மகத்தான பணி சிதைவுகளுக்கோ திரிபுகளுக்கோ பயன்படுத்தப் படாதபடி கவனமாக இருக்க வேண்டும் என்று இந்திய பத்திரிகை கவுன்சில் அறிவுறுத்துகிறது. தேர்தலுக்கு முந்தைய கருத்து கணிப்பை சுயநல சக்திகளும் தனிநபர்களும் நேரடியாகவோ மறைமுகமாகவோ சாதி, மதம், இனம் அடிப்படையில் வாக்காளர்களை தவறான வழியில் திருப்பிவிடுவதற்கு பயன்படுத்தாமல் தடுக்க வேண்டியது அச்சு ஊடகங்களின் கடமை என்பதால் பத்திரிகை கவுன்சில் இதனை அறிவுறுத்துகிறது.

வகுப்புவாத மற்றும் தேசவிரோத பிரச்சாரங்களை கண்டறிவது பல சந்தர்ப்பங்களில் சிரமம் இல்லை என்ற அதேவேளையில் தேர்தலுக்கு முந்தைய கருத்து கணிப்பை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வதை கண்டுபிடிப்பது அவ்வளவு எளிதாக இருக்காது.

எனவே, இந்திய பத்திரிகை கவுன்சில் செய்தித்தாள்கள் தேர்தலுக்கு முந்தைய ஆய்வுகள் வெளியிட முனையும் போதெல்லாம், அத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் நிறுவனங்களை முகவுரையில் தெளிவாக தெரிவிக்க வேண்டும் என்றும் இந்த ஆய்வை மேற்கொண்ட தனிநபர் மற்றும் அமைப்புகள் அதற்காக தேர்வு செய்யப்பட்ட மாதிரியின் அளவு, தன்மை, தேர்வுசெய்த விதம், தவறுகளுக்கான சாத்தியம் முதலியவற்றையும் வெளியிட வேண்டும் என்று அறிவுறுத்துகிறது.

தேர்தல் நடவடிக்கை நீண்டுகொண்டே போகும்போது ஏற்கனவே வாக்குபதிவு நடந்து முடிந்த இடங்களில் வாக்காளர்களிடம் எடுக்கப்பட்ட கருத்துகளை கருத்து கணிப்பாக ஊடகங்கள் வெளியிடுகின்றன. வாக்குபதிவு நடைபெற உள்ள இடங்களில் இந்த கருத்துக் கணிப்பு வாக்காளர் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும். இத்தகைய தாக்கம் இன்றி வாக்காளர்கள் வாக்களிபதை உறுதி செய்வதற்கு வாக்குபதிவுக்கு பிந்தைய ஆய்வை

தேர்தல் முடிவடையும் வரை வெளியிடாமல் இருப்பது அவசியம் என்று பத்திரிகை கவுன்சில் கூறுகிறது.

இந்திய பத்திரிகை கவுன்சில் ஊடகங்களை பின் வரும் வழிகாட்டி முறைகளை, அவசியம் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது.

***வழி காட்டி நெறிமுறைகள்:***

எந்த பத்திரிகையும் தேர்தல் கருத்து கணிப்பு ஆய்வுகளையும், எவ்வளவு ஆதாரத்துடன் அவை இருப்பினும், தேர்தல் நடந்து முடியும் கடைசி நாள் வரையில் வெளியிடக்கூடாது.

***தேர்தல் ஒளிபரப்புக்கான செய்தி ஒளிபரப்பு தர ஆணையத்தின் (NBSA) விதிமுறைகள்***

ஒவ்வொரு தேர்தலிலும் வாக்காளர்கள் அவர்களின் வாக்குகளை, நன்றாக அறிந்த தகவல்களின் அடிப்படையில், யாருக்குச் செலுத்துவது என்பதை தீர்மானிப்பதற்கான துல்லியமான, நோக்கம் சார்ந்த, முழுமையான தகவல்களை வழங்குவதுதான் தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடப்பதற்கான அடிப்படை தேவை ஆகும். இந்த நோக்கத்தைக் கருத்தில் கொண்டு தேர்தல் மற்றும் தேர்தல் சார்ந்த விசயங்கள் குறித்த செய்தி மற்றும் நாட்டு நடப்பு நிகழ்ச்சிகள், செய்தி அலைவரிசைகளின் மற்ற அனைத்து உள்ளடக்கங்கள் ஆகியவை நியாயமாகவும், சமநிலையுடனும், துல்லியமாகவும், நோக்கம் சார்ந்தவையாகவும், முறையாக சரிபார்க்கப்பட்டவையாகவும் இருப்பதை உறுதி செய்வதற்காக கீழ்க்கண்ட விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

1) தேர்தல் காலத்தில் தேர்தல் தொடர்பான விசயங்கள், அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், பிரச்சாரம் சார்ந்த விசயங்கள், வாக்களிக்கும் நடைமுறைகள் ஆகியவை குறித்து 1951 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின்படி தேர்தல் ஆணையத்தால் வகுக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் விதிமுறைகளுக்குட்பட்டு நோக்கம் சார்ந்த முறையில் மக்களுக்கு விளக்க செய்தி ஊடகங்கள் முயல வேண்டும்.
2) செய்தி அலைவரிசைகள் எந்த ஒரு கட்சியிடமோ அல்லது வேட்பாளரிடமோ சார்புநிலையை வெளிப்படுத்தக்கூடாது. எந்த ஒரு கட்சியையோ அல்லது வேட்பாளரையோ வெளிப்படையாக ஆதரிக்காத பட்சத்தில், தங்களது உள்ளடக்கத்தில், குறிப்பாக தேர்தல் தொடர்பான செய்திகளை வெளியிடுவதில் சமநிலையையும், நடுநிலை தவறாமையையும் கடைபிடிக்க வேண்டிய கடமை செய்தி ஒலிபரப்பாளர்களுக்கு உண்டு.
3) அனைத்து வகையான வதந்திகள், அடிப்படையில்லாத யூகங்கள் மற்றும் பொய் செய்திகள், குறிப்பாக, குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர் சார்ந்த இத்தகைய அம்சங்களை தவிர்க்க செய்தி அலைவரிசைகள் முயலவேண்டும். அவதூறுக்கு உள்ளாக்கப்பட்ட அல்லது தவறுதலாக பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்ட, தவறான செய்திகள் அல்லது ஒலிபரப்பால் பாதிக்கப்பட்ட அரசியல் கட்சிகள்/ வேட்பாளர்களுக்கு, திருத்தத்தை தெரிவிக்கவும், பதில் கூறவும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.
4) தேர்தல் மற்றும் தேர்தல் தொடர்பான நடுநிலையான ஒலிபரப்பை பாதிக்கக்கூடிய அனைத்து வகையான அரசியல் மற்றும் நிதி சார்ந்த நிப்பந்தங்களையும் செய்தி ஒலிப்பரப்பாளர்கள் தவிர்க்க வேண்டும்.
5) செய்தி அலைவரிசைகளில் ஆசிரியர் குழு கருத்துக்கும் (தலையங்கம்), வல்லுனர் கருத்துக்கும் இடையே தெளிவான வித்தியாசத்தை செய்தி ஒலிபரப்பாளர்கள் கடைபிடிக்க வேண்டும்.
6) அரசியல் கட்சிகளிடமிருந்து பெறப்பட்ட வீடியோ காட்சிகளை பயன்படுத்தும் செய்தி ஒலிபரப்பாளர்கள் அதை வெளிப்படையாக குறிப்பிடுவதுடன், மேற்குறிப்பிடவும் வேண்டும்.
7) தேர்தல்கள் மற்றும் தேர்தல் தொடர்பான விசயங்கள் சம்பந்தப்பட்ட செய்திகள் உள்ளிட்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும், நிகழ்வுகள், தேதிகள், இடங்கள்,

மேற்கோள்கள் தொடர்பான அனைத்து உண்மைகளும் துல்லியமாக இருப்பதை உறுதி செய்ய சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும். தவறுதலாகவோ அல்லது நம்மையும் அறியாமலோ ஏதேனும் தவறு நிகழ்ந்துவிட்டால், அது குறித்து ஊடகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்படும் பட்சத்தில், உடனடியாக அதை சரி செய்வதுடன், மூலச்செய்திக்கு எந்த அளவுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதோ அதே அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து திருத்த செய்தியும் ஒலிபரப்பப்பட வேண்டும்.

8) செய்தி ஒலிபரப்பாளர்கள், அதன் செய்தியாளர்கள், அதிகாரிகள் உள்ளிட்டோர் செய்திகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அல்லது தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்று தோன்றக்கூடிய, செய்தி ஒலிபரப்பு நிறுவனம் அல்லது அதன் செய்தியாளர்களின் நம்பகத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய வகையில் வழங்கப்படும் பணத்தையோ, பரிசுப் பொருட்களையோ அல்லது வேறு வகையான சலுகைகளையோ பெறக்கூடாது.

9) தேர்தல் விதிகளின்படி சாதி மற்றும் மதத்தின் அடிப்படையிலான பிரச்சாரம் தடை செய்யப்பட்டிருப்பதால், வெறுப்புணர்வைத் தூண்டும் வகையிலான பேச்சுக்களையோ அல்லது வன்முறையை தூண்டும் வகையிலான, பொது அமைதியை குலைக்கும் வகையிலான, அருவருக்கத்தக்க பிரச்சாரங்களையோ செய்தி ஊடகங்கள் எந்த வகையிலும் அனுமதிக்கக்கூடாது. மக்களிடையே சாதி, மதம், இனம், மொழி, பிராந்தியம் ஆகியவற்றின் அடிப்படையில் பகைமை அல்லது வெறுப்புணர்வைத் தூண்டக்கூடிய செய்திகளை செய்தி ஊடகங்கள் தவிர்க்க வேண்டும்.

10) செய்திகளுக்கும், பணம் கொடுத்து வெளியிடப்படும் விளம்பரங்களுக்கும் இடையே தெளிவான வித்தியாசத்தை ஊடகங்கள் கடைபிடிக்க வேண்டும். பணம் பெற்றுக்கொண்டு வெளியிடப்படும் விளம்பரங்கள் மீது, பணம் பெறப்பட்ட விளம்பரம் அல்லது பணம்பெற்றுக்கொண்டு ஒலிபரப்படும் உள்ளடக்கம் என்று தெளிவாக குறிப்பிடப்படவேண்டும். இத்தகைய உள்ளடக்கங்கள் 24.11.2011 ஆம் தேதியிட்ட கட்டண செய்திகளுக்கான விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு இயைந்த ஒன்றாக இருக்க வேண்டும்.

11) கருத்துக்கணிப்புகளை வெளியிடும்போது, அதை யார் நடத்தியது? யார் நடத்தச் சொன்னது? அதற்கான கட்டனத்தை யார் செலுத்தியது? உள்ளிட்ட விவரங்களை நேயர்களுக்கு தெரிவிப்பதன் மூலம் கருத்துக்கணிப்புகள் நேர்மையாகவும், துல்லியமாகவும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். கருத்துக்கணிப்பு முடிவுகளையோ அல்லது பிற தேர்தல் கணிப்புகளையோ வெளியிடும் போது, அத்தகைய கணிப்புகளின் வரையறை என்ன? அது எந்த அளவுக்கு சாத்தியமாகும்? என்பது குறித்த விவரங்களையும் ஊடகங்கள் வெளியிட வேண்டும். கருத்துக்கணிப்பு முடிவுகளை வெளியிடும்போது, அதுகுறித்த விவரங்களான மாதிரியின் அளவு, கணிப்புகள் தவறக்கூடிய சதவீதம், களத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட தேதிகள், பயன்படுத்தப்பட்ட தகவல்கள் ஆகியவை குறித்த விவரங்களும் வெளியிடப்பட வேண்டும். வாக்கு விகிதம் எவ்வாறு வெற்றி

விகிதமாக மாறுகிறது என்பதையும் நேயர்களுக்கு ஊடகங்கள் தெரிவிக்க வேண்டும்.

12) 1951 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 126(1) (பி) பிரிவின்படி வாக்குப்பதிவு முடிவடையும் நேரத்திற்கு 48 மணிநேரம் முன்பாக தேர்தல் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய எந்த ஒரு செய்தியையும் ஊடகங்கள் ஒலிபரப்பக்கூடாது.

13) தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து தேர்தல் முடிவடைந்து முடிவுகள் அறிவிக்கப்படும் வரை செய்தி ஒலிபரப்பாளர்கள் ஒலிபரப்பும் அனைத்து செய்திகளையும் இந்திய தேர்தல் ஆணையம் கண்காணிக்கும். ஊடகங்களின் விதிமீறல்கள் குறித்து செய்தி ஒலிபரப்பு தர ஆணையத்திடம் தேர்தல் ஆணையம் அளிக்கும் புகார்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட ஊடகங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

14) வாக்களிக்கும் நடைமுறைகள், வாக்களிக்க வேண்டியதன் அவசியம், , எங்கு, எப்படி, எப்போது வாக்களிக்க வேண்டும்? வாக்காளர் பட்டியலில் எவ்வாறு பதிவு செய்வது? வாக்களிப்பை இரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டியது ஏன்? என்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை முடிந்த அளவுக்கு செய்தி ஒலிபரப்பாளர்கள் ஒலிபரப்ப வேண்டும்.

15) தேர்தல் முடிவுகளை தேர்தல் ஆணையம் அதிகாரபூர்வமாக அறிவிக்கும்வரை, அந்த முடிவுகளை செய்தி ஒலிபரப்பாளர்கள் உறுதியாகவோ, இறுதியாகவோ அல்லது அதிகாரபூர்வமாகவோ ஒலிபரப்பக்கூடாது. அதேநேரத்தில், இது அதிகாரபூர்வமற்ற, முழுமையற்ற, பகுதியான முடிவு அல்லது கணிப்பு என்ற அறிவிப்புடன் முடிவுகளை வெளியிடலாம்.

16) இந்தியாவில் நடைபெறும் அனைத்து நாடாளுமன்ற, சட்டமன்ற, நகராட்சி மற்றும் உள்ளாட்சித் தேர்தல்களுக்கும் இந்த வழிகாட்டி நெறிமுறைகள் பொருந்தும்.

*கட்டண செய்திகளுக்கான விதிகள் மற்றும் வழிகாட்டி நெறிமுறைகள்*

செய்தி ஒலிபரப்பாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள்/ இணை உறுப்பினர்கள் கட்டண செய்தி வெளியிடுதல் என்ற முறைகேட்டில் ஈடுபடக்கூடாது. கட்டண செய்தி என்பது தார்மீக நெறிமுறை சார்ந்த விசயம் என்பதால், ஜனநாயகத்தின் பொது நலன் மற்றும் ஜனநாயக நலன் மற்றும் செய்தி ஒலிபரப்பு ஊடகங்களின் நம்பகத்தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இதை தடுக்கும் வகையில் கடுமையான விதிமுறைகள் வகுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இதைக் கருத்தில் கொண்டு, கீழ்கண்ட விதிகளும், வழிகாட்டுதல்களும் வகுக்கப் பட்டிருக்கின்றன. இவற்றை செய்தி ஒலிபரப்பாளர்கள் சங்கத்தில் இடம் பெற்றுள்ள அனைத்து உறுப்பினர்களும்/ இணை உறுப்பினர்களும் உறுதியாக பின்பற்ற வேண்டியது அவசியமாகும்.

***வரையறைகள்:***

1) இந்த விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்காக கீழ்க்கண்ட வரையறைகள் உருவாக்கப் பட்டிருக்கின்றன.

   a. அமைப்பு என்பது தனிநபர் (இயற்கையான அல்லது சட்டபூர்வமானதாக இருக்கலாம்) நிறுவனம், பங்குதாரர் நிறுவனம், தனிநபருக்கு சொந்தமான நிறுவனம், சங்கம், அறக்கட்டளை, அரசியல் கட்சி, தனிநபர்களை உள்ளடக்கிய சங்கம், இயற்கையானதை போன்ற வேறு ஏதேனும் அமைப்புகள் ஆகியவற்றை குறிக்கும் மற்றும் இவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்;

   b. நெருங்கிய சொந்தங்கள் என்பது பொறுப்பில் இருப்பவர்களின் நெருங்கிய சொந்தங்கள், அதாவது வாழ்க்கைத் துணை, பெற்றோர்கள், உடன்பிறப்புக்கள், குழந்தைகள், அவர்களை சார்ந்திருப்பவர்கள் மற்றும் குறிப்பிட்ட மற்றவர்களையும் குறிக்கும்.

   c. கட்டண செய்திகள் என்பது ஏதேனும் பிரதிபலனையோ அல்லது பணம் அல்லது பணம் சாராத பயன்கள் அல்லது வெகுமதிகளை எதிர்பார்த்து வெளியிடப்படும் செய்திகள் (அரசியல் செய்திகள், வணிகச் செய்திகள், விளையாட்டுச் செய்திகள், பொழுதுபோக்குச் செய்திகள் அல்லது வேறு ஏதேனும் துறை சார்ந்த செய்திகளாகவும் இவை இருக்கலாம்) அல்லது புறக்கணிக்கப்படும் செய்திகள்( செய்தி அறிக்கைகள், நாட்டு நடப்பு நிகழ்ச்சிகள், சிறப்பு நிகழ்ச்சிகள் அல்லது வேறு எந்த பெயரிலாவது அழைக்கப்படும் மற்ற நிகழ்ச்சிகளில் புறக்கணிக்கப்படுபவையாகவும் இவை இருக்கலாம்) ஆகியவற்றைக் குறிக்கும் மற்றும் உள்ளடக்கியதாக இருக்கும்.

   d. பொறுப்பில் இருப்பவர்கள் என்பது இயக்குனர்கள் குழுவின் உறுப்பினர்கள், ஆசிரியர் குழு, பதிப்பகம் மற்றும்/ அல்லது செயல் இயக்குனர்கள், முதன்மை நிர்வாக அதிகாரிகள், ஆசிரியர்கள், தயாரிப்பாளர்கள் உள்ளிட்ட செய்தி ஒலிபரப்பு நிறுவனத்தின் மேலாண்மை பொறுப்பில் இருப்பவர்களைக் குறிக்கும் அல்லது உள்ளடக்கியதாக இருக்கும்.

2) எந்த ஒரு செய்தி ஒலிபரப்பு நிறுவனமும் கட்டண செய்திகளை ஒலிபரப்பவோ அல்லது அதனுடன் எந்த வகையிலும் சம்பந்தப்பட்டிருக்கவோ கூடாது.

3) ஒவ்வொரு செய்தி ஒலிபரப்பு நிறுவனமும், அவற்றின் ஒவ்வொரு பொறுப்பாளரும் செய்தி ஒலிபரப்பு நிறுவனத்தின் பங்கு விழுக்காடு விவரங்கள், முதலீடுகள், பிற பங்கு விவரங்கள் அல்லது நிதிப் பொறுப்புகள் அல்லது ஏதேனும் நிறுவனத்துடனான வேறு வகையிலான பயன்கள் ( தனியார் பங்கு ஒப்பந்தங்கள் உள்ளிட்டவை) ஆகியவற்றை தெரிவிக்க வேண்டும். அதேபோல் ஒவ்வொரு பொறுப்பாளரும் இத்தகைய பங்கு விழுக்காடு விவரங்கள், முதலீடுகள், பிற பங்கு விவரங்கள் அல்லது நிதிப் பொறுப்புகள் அல்லது ஏதேனும் நிறுவனத்துடனான வேறு வகையிலான பயன்கள் ( தனியார் பங்கு ஒப்பந்தங்கள் உள்ளிட்டவை) ஆகியவற்றை தங்களின் இணையதளங்களில் தெரிவிக்க வேண்டும்.

4) ஒரு செய்தி ஒலிபரப்பு நிறுவனம் மற்றும்/ அல்லது அதன் பொறுப்பாளர் பணம், கடன், பரிசு, தள்ளுபடி, உபசரிப்பு அல்லது கேளிக்கை உள்ளிட்ட எந்தவகையான நிதி சார்ந்த அல்லது நிதி சாராத பயன்களையோ, வேறு பயன்கள் அல்லது பரிசுகளையோ, வேறு

எதையுமோ எந்த ஒரு நிறுவனத்திடமிருந்தும் அது குறித்த செய்திகளை வெளியிடுவதற்காக பெறக்கூடாது.

5) ஒவ்வொரு செய்தி ஒலிபரப்பு நிறுவனமும் தங்களின் இயக்குனர் குழு, மேலாண்மைக்குழு அல்லது நிர்வாகக்குழுவில் இடம் பெற்றுள்ள பிரதிநிதிகளின் பெயர்களை தங்களின் இணையதளத்தில் வெளியிட வேண்டும்.

6) ஒவ்வொரு செய்தி ஒலிபரப்பு நிறுவனமும் தங்களின் தொலைக்காட்சியிலோ அல்லது இணையதளத்திலோ செய்திகள், நாட்டு நடப்புகள், விளையாட்டு நிகழ்ச்சிகள், கேளிக்கைகள், விளம்பரதாரர் நிகழ்ச்சிகள் ஆகியவற்றை ஒலிபரப்பும் போது, அது அதனுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் நிறுவனத்தின் சார்பில் கட்டணம் செலுத்தி ஒலிபரப்பப்படுகிறதா? அல்லது விளம்பரம் போன்று ஒலிபரப்பப்படுகிறதா? அல்லது சந்தை மேம்பாட்டுக்காக ஒலிபரப்பப்படுகிறதா? என்பதை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

7) ஜனநாயகத்தில் தேர்தல் நடைமுறைக்கு உள்ள முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, எந்த ஒரு செய்தி ஒலிபரப்பு நிறுவனமும் தேர்தல் தொடர்பான அல்லது எந்த ஒரு தேர்தலிலும் போட்டியிடும் அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்கள் தொடர்பான செய்திகளை (கருத்துக்கணிப்புகளை வெளியிடுதல் அல்லது அதேபோன்ற நிகழ்ச்சிகள்) வெளியிடுவதற்காக எந்த ஒரு நிறுவனத்திடமிருந்தும் நிதி சார்ந்த அல்லது நிதி சாராத பயன்கள், வேறு பயன்கள் அல்லது வெகுமதிகளை பெறக்கூடாது.

8) ஏதேனும் ஒரு செய்தி ஒலிபரப்பு நிறுவனம் தேர்தல் தொடர்பாக ஏதாவது ஒரு அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் சம்பந்தப்பட்ட சிறப்பு நிகழ்ச்சியையோ அல்லது சிறப்பு செய்தியையோ ஒலிபரப்பும் பட்சத்தில், அதில் இந்த நிகழ்ச்சி யாருடைய ஆதரவிலும் அல்லது கட்டணத்திலும் ஒலிபரப்பப்படவில்லை என தெளிவாக குறிப்பிடப்படாவிட்டால், அந்தநிகழ்ச்சி அல்லது சிறப்பு செய்தி யாரோ ஒருவரின் ஆதரவு அல்லது கட்டணத்தில்தான் ஒலிபரப்பப்படுகிறது என்றே கருதப்படும்.

9) தேர்தல் தொடர்பான செய்தி வழங்கல்கள் மற்றும் நிகழ்ச்சிகள் உட்பட அனைத்து செய்திகளும் ஆசிரியர் குழுவில் மிக மூத்த பொறுப்பில் ( எந்த பதவியாக இருந்தாலும்) உள்ள ஒருவரால் கண்காணிக்கப்பட, மேற்பார்வையிடப்படவும் வேண்டும். ஏதேனும் தவறு நடந்தாலோ அல்லது இந்த விதிகளும், வழிகாட்டுதல்களும் மீறப்பட்டாலோ, அதற்கு அவர் தான் பொறுப்பேற்க வேண்டும்.

10) மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களும் செய்தி ஒலிபரப்பு நிறுவனத்துடன் இணைந்து செயல்படும் அனைத்து பத்திரிகையாளர்கள், நிருபர்கள், பகுதிநேர நிருபர்களுக்கு பொருந்தும். இவர்கள் அனைவரும் தாங்கள் அளிக்கும் செய்தி சம்பந்தப்பட்ட நிறுவனத்தில் தங்களுக்கு ஏதேனும் பங்குகள், முதலீடுகள், பிற பங்கு விவரங்கள் அல்லது நிதிப் பொறுப்புகள் அல்லது ஏதேனும் நிறுவனத்துடனான வேறு வகையிலான பயன்கள் இருந்தால் அது குறித்து செய்தி ஒலிபரப்பு நிறுவனத்தின் ஆசிரியர் குழுவில் மூத்த பொறுப்பில் உள்ள அதிகாரியிடம் எழுத்து வடிவில் தெரிவிக்க வேண்டும். இத்தகைய தன்மை கொண்ட பத்திரிகையாளர்கள், நிருபர்கள், பகுதிநேர நிருபர்களை, சம்பந்தப்பட்ட நிறுவனம் தொடர்பான செய்தி சேகரிக்க அனுப்பலாமா? அல்லது அந்த பொறுப்பிலிருந்து திரும்ப அழைத்துக் கொள்ளலாமா?

என்பதை தீர்மானிப்பது ஆசிரியர் குழுவில் மூத்த பொறுப்பில் உள்ள அதிகாரியின் உரிமையாகும்.

11) இந்த விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களில் ஏதேனும் மீறப்பட்டால் அது, செய்தி ஒலிபரப்பு தர (பிரச்சினைகளை தீர்த்தல்) ஒழுங்குமுறை விதிகளின்படியான (இந்த விதிகளின் 7.1 பிரிவுக்குட்பட்ட அனைத்து உட்பிரிவுகளையும் உள்ளடக்கிய) நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு, அதன் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டும்.

இந்த விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களில் செய்யப்படும் மீறல்களுக்காக ஒழுங்குமுறை விதிகளின் 7.1 பிரிவின்படி விதிக்கப்படும் அபராதம் ஒரு லட்ச ரூபாய்க்குள் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. கட்டண செய்திக்காக பெறப்பட்ட நிதி சார்ந்த அல்லது நிதி சாராத பயன்கள், வேறு பயன்கள் அல்லது பெறப்பட்ட வெகுமதிகளின் மதிப்பை விட 10 மடங்கு வரையிலான அபராதத்தை, செய்தி ஒலிபரப்பு நிறுவனத்திற்கு விதிக்க, செய்தி ஒலிபரப்பு தர ஆணையத்திற்கு அதிகாரம் உண்டு.



# தமிழக சட்டமன்ற வரலாறு

# தமிழ்நாட்டின் முதலமைச்சர்கள்

| வ.எண் | முதலமைச்சர் | காலம் |
|---|---|---|
| | ஓ. பி. ராமசாமி ரெட்டியார் | 23.03.1947 முதல் 06.04.1949 வரை |
| | பி. எஸ். குமாரசாமி ராஜா | 06.04.1949 - 09.04.1952 |
| | சி. ராஜகோபாலாச்சாரி | 10.04.1952 - 13.04.1954 |
| | கு. காமராஜ் | 13.04.1954 - 02.10.1963 |
| | எம். பக்தவச்சலம் | 02.10.1963 - 06-03-1967 |
| | சி. என். அண்ணாதுரை | 06.03.1967 – 03.02.1969 |
| | மு. கருணாநிதி | 10.02.1969 - 04.01.1971<br>15.03.1971 - 31.01.1976 |
| | எம். ஜி. ராமச்சந்திரன் | 30.06.1977 – 17.02.1980<br>09.06.1980 - 15.11.1984<br>10.02.1985 – 24.12.1987 |
| | ஜானகி ராமச்சந்திரன் | 07.01.1988 – 30.01.1989 |
| | மு. கருணாநிதி | 27.01.1989 - 30.01.1991 |
| | ஜெ. ஜெயலலிதா | 24.06.1991 - 12.05.1996 |
| | மு. கருணாநிதி | 13.05.1996 - 13.05.2001 |
| | ஜெ. ஜெயலலிதா | 14.05.2001 - 21.09.2001 |
| | ஓ. பன்னீர்செல்வம் | 21.09.2001 - 01.03.2002 |
| | ஜெ. ஜெயலலிதா | 02.03.2002 - 12.05.2006 |
| | மு. கருணாநிதி | 13.05.2006 - 15.05.2011 |
| | ஜெ. ஜெயலலிதா | 16.05.2011 - 27.09.2014 |
| | ஓ. பன்னீர்செல்வம் | 29.09.2014 - 22.05.2015 |
| | ஜெ. ஜெயலலிதா | 23.05.2015 முதல் இன்று வரை |

# அத்தியாயம் 8

# தமிழக சட்டமன்ற வரலாறு

தமிழக சட்டமன்றத்தின் வரலாறு 18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் துவங்குகிறது. தற்போதைய தமிழ்நாடு மற்றும் ஒரிசா, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களின் சில பகுதிகள், முந்தைய நிஜாம் மாநிலம் நீங்கலான தற்போதைய ஆந்திரப் பிரதேசம் ஆகியவை அடங்கியதாகஅன்றையமதராஸ் மாகாணம் விளங்கியது.

மதராஸ் மாகாணத்தை போலவே பம்பாய், கல்கத்தா ஆகிய மாகாணங்களும் நடைமுறையில் இருந்தன. இந்த மாகாணங்களுக்கு பொறுப்பாக தனித்தனி ஆளுநர்கள் செயல்பட்டு வந்தனர். 1773-ம் ஆண்டின் முறைப்படுத்தும் சட்டத்தின் கீழ் வங்காள ஆளுநர் அனைத்து மாகாணங்களின் தலைமை ஆளுநராக (கவர்னர் ஜெனரல்) நியமிக்கப்பட்டார்.

1833 மற்றும் 1853 ஆகிய ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்த சட்டங்களின்படி நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களுக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் துவங்கின. 1861 மற்றும் 1892 ஆகிய ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட இந்திய கவுன்சில்கள் சட்டத்தின்கீழ் சட்டம் இயற்றும் மன்றங்கள் உருப்பெற்றன.

*மதராஸ் மாகாணம்*

1861-ம் ஆண்டு சட்டத்தின் கீழ் மதராஸ் மாகாணத்திற்கான நிர்வாகக் குழுவில் ஆறுக்கு குறைவில்லாத 12-க்கு மேற்படாத எண்ணிக்கையிலான அதிகாரிகள் அல்லாத கூடுதல் உறுப்பினர்களை நியமிக்க வகை செய்யப்பட்டது. அமைதி மற்றும் நல்லாட்சியை வழங்கும் வகையில் சட்டம் இயற்ற இந்த சட்டமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

1892-ம் ஆண்டின் இந்திய கவுன்சில்கள் சட்டத்தின்கீழ் மதராஸ் மாகாண சட்டமன்றத்திற்கு நியமிக்கப்படும் கூடுதல் உறுப்பினர்களின் அதிகபட்ச எண்ணிக்கை 20-ஆக அதிகரிக்கப்பட்டது. அதிகாரிகள் அல்லாத இந்த உறுப்பினர்களை மாவட்ட நிர்வாக குழுக்களும் (ஜில்லா போர்டுகள்), பல்கலைக் கழகங்களும், நகராட்சிகளும் பரிந்துரை செய்தன.

மார்லே-மின்டோ சீர்திருத்தங்கள் என அழைக்கப்படும் 1861-ம் ஆண்டு சட்டத்தின்கீழ் முதல் முறையாக சட்டமன்றங்களுக்கு தேர்தல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. எனினும் நேரடித் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. இந்த சட்டத்தின்கீழ் மதராஸ் மாகாண சட்டமன்றத்தில் நியமிக்கப்படும் கூடுதல் உறுப்பினர்களின் அதிகபட்ச எண்ணிக்கை 50-ஆக உயர்த்தப்பட்டது.

1919-ம் ஆண்டு மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்திய அரசு சட்டத்தின்கீழ் மத்திய, மாகாண அரசுகளுக்கு இடையே சட்டம் இயற்றும் பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இச்சட்டத்தின் கீழ் மாகாண சட்டமன்றத்தின் உறுப்பினர் அல்லாத ஆளுநர் அந்த சட்டமன்ற கூட்டத்தில் உரையாற்றும் அதிகாரத்தை பெற்றார்.

*மதராஸ் சட்டமன்றம்*

1919-ம் ஆண்டின் இந்திய அரசு சட்டத்தின்கீழ் மதராஸ் மாகாண சட்டமன்றம் 1921-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதன் ஆயுட்காலம் மூன்றாண்டுகளாகும். ஆளுநரால் நியமிக்கப்பட்ட 34 உறுப்பினர்கள் உட்பட மொத்தம் 132 உறுப்பினர்களை கொண்டதாக இது இருந்தது.

சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் 1921-ம் ஆண்டு ஜனவரி 9-ம் நாள் மதராஸ் சட்டமன்றத்தின் முதலாவது கூட்டம் நடைபெற்றது. அப்போது ஆளுநராக இருந்த வெலிங்டன் பிரபுவின் வேண்டுகோளின் பேரில் கன்னாட் கோமகன் மதராஸ் மாகாண சட்டமன்றத்தை ஜனவரி 12-ம் நாள் துவக்கி வைத்தார். இதில் முதல்முறையாக மாகாண ஆளுநர் பிப்ரவரி 14-ம் நாள் உரையாற்றினார்.

1923 மற்றும் 1926 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களின் அடிப்படையில் மதராஸ் மாகாணத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது சட்டமன்றங்கள் அமைந்தன.1930-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்களின் அடிப்படையில் அமைக்கப்பட்ட நான்காவது சட்டமன்றத்தின் ஆயுட்காலம் நீட்டிக்கப்பட்டு 1935-ம் ஆண்டின் இந்திய அரசு சட்டத்தின்கீழ் மாகாண தன்னாட்சி 1937-ஆம் ஆண்டு நடைமுறைக்கு வரும் வரை அதுசெயல்பட்டது.

*இரு அவைகள்*

1935-ம் ஆண்டின் சட்டத்தின்கீழ் மதராஸ் மாகாண சட்டமன்றத்திற்கு மேல் அவை, கீழ் அவை என இரு அவைகள் உருவாக்கப்பட்டன. இந்த இரு அவைகளும், ஆளுநரும் சேர்ந்து மாகாண சட்டமன்றம் என அழைக்கப்பட்டது.

*சட்ட மேலவை*

இந்த சட்டமன்றத்தில் கலைக்கப்பட இயலாத நிரந்தர அவையாக சட்ட மேலவை செயல்பட்டது. ஒவ்வொரு மூன்றாண்டின் நிறைவிலும் அதன் மூன்றில் ஒரு பகுதி உறுப்பினர்கள் ஓய்வுபெற வகை செய்யப்பட்டிருந்தது. இதன் உறுப்பினர் எண்ணிக்கை குறைந்தபட்சம் 54-ஆகவும் அதிகபட்சம் 56-ஆகவும் இருந்தது.

சட்ட மேலவையில் 35 பொது உறுப்பினர்களும், ஏழு இஸ்லாமிய உறுப்பினர்களும், ஒரு ஐரோப்பிய உறுப்பினரும், மூன்று இந்திய கிறிஸ்துவ உறுப்பினர்களும் இருந்தனர். எட்டுக்கு குறையாமலும் பத்துக்கு மேற்படாமலும் நியமன உறுப்பினர்களை நியமிக்கவும் ஆளுநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

*சட்டப்பேரவை*

மதராஸ் மாகாண சட்டப்பேரவையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 215-ஆக இருந்தது. இதில் 146 இடங்களுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவற்றில் கீழ்கண்டவாறு இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது:

| பிரிவு | இடங்கள் |
|---|---|
| தாழ்த்தப்பட்டவகுப்பினர் | 30 |

| | |
|---|---|
| பிற்படுத்தப்பட்டபகுதிகளைசேர்ந்தோர்மற்றும்பழங்குடியினர் | 1 |
| இஸ்லாமியர்கள் | 28 |
| ஆங்கிலோஇந்தியர்கள் | 2 |
| ஐரோப்பியர்கள் | 3 |
| இந்தியகிறிஸ்தவர்கள் | 8 |
| தொழில்மற்றும்வர்த்தகபிரதிநிதிகள் | 6 |
| நிலச்சுவான்தார்கள் | 6 |
| பல்கலைக்கழகம் | 1 |
| தொழிலாளர்பிரதிநிதிகள் | 6 |
| பெண்கள் | 8 |

1935-ம் ஆண்டு இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் மாகாணங்களை பொறுத்தவரை 1937-ம் ஆண்டுதான் நடைமுறைக்கு வந்தது. இதன் அடிப்படையில் தேர்தல் நடத்தப்பட்டு சென்னை மாகாணத்தின் முதலாவது சட்டமன்றம் 1937-ம் ஆண்டு ஜூலை மாதம் அமைக்கப்பட்டது. எனினும் இரண்டாம் உலகப் போரையொட்டி அவசரகால பிரகடனம் அறிவிக்கப்பட்டதால் 1939-ம் ஆண்டு அக்டோபர் மாதம் அமைச்சரவை பதவி விலகியது. இதனை தொடர்ந்து இந்த சட்டமன்றம் கலைக்கப்பட்டது.

போர் முடிவடைந்ததும் 1946-ம் ஆண்டு மார்ச் மாதம் தேர்தல்கள் நடத்தப்பட்டு மே மாதம் இரண்டாவது சட்டமன்றம் அமைக்கப்பட்டது.

***சுதந்திரத்திற்குப் பின்முதல் சட்டப்பேரவை: (1952 – 1957)*** 1947-ம் ஆண்டின் இந்திய சுதந்திர சட்டத்தின் விளைவாக இந்தியா சுதந்திரம் பெற்றபின் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் அடிப்படையில் 1952-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாவது பொதுத்தேர்தல் நடைபெற்றது. வயது வந்தோருக்கான வாக்குரிமையின் அடிப்படையில் நடத்தப்பட்ட இத்தேர்தலை தொடர்ந்து மதராஸ் மாநிலத்தின் முதலாவது சட்டமன்றம் 1952-ம் ஆண்டு மார்ச் முதல் நாள் அமைக்கப்பட்டது.

ஒருங்கிணைந்த மதராஸ் மாநில சட்டப்பேரவையில் 375 உறுப்பினர்கள் இருந்தனர். மொத்தம் 309 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற்றது. இவற்றில் 243 ஒரு உறுப்பினர் தொகுதிகளும் 66 இரு உறுப்பினர் தொகுதிகளும் இடம் பெற்றிருந்தன. இவற்றில் 62 இரு உறுப்பினர் தொகுதிகளில் தலா ஒரு இடம் தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கும் நான்கு இரு உறுப்பினர் தொகுதிகளில் தலா ஒரு இடம் பழங்குடியினருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. இவை தவிர ஆங்கிலோ இந்திய வகுப்பினரைச் சேர்ந்த ஒரு உறுப்பினரை ஆளுநர் நியமனம் செய்தார்.

*மாநில சீரமைப்பு*

ஒருங்கிணைந்த மதராஸ் மாநிலத்தின் தெலுங்கு பேசப்பட்ட பகுதிகளை தனி ஆந்திர மாநிலமாக அறிவித்தும், பெல்லாரி மாவட்டத்தின் கன்னடம் பேசப்பட்ட பகுதிகளை

அன்றைய மைசூர் மாநிலத்துடன் இணைத்தும் 1953-ம் ஆண்டு அக்டோபர் முதல் நாள் உத்தரவிடப்பட்டது. இதன் விளைவாக சென்னை மாநில சட்டப்பேரவையின் உறுப்பினர் எண்ணிக்கை 231-ஆக குறைந்தது.

1956-ம் ஆண்டு நவம்பர் முதல் நாளிலிருந்து மாநிலங்கள் சீரமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்ததை தொடர்ந்து மலபார் மாவட்டங்களைச் சேர்ந்த தொகுதிகள் கேரள மாநிலத்துடன் இணைக்கப்பட்டன. இதன் விளைவாக மதராஸ் மாநில சட்டப்பேரவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 190-ஆக குறைத்தது. அன்றைய கேரள மாநிலத்தில் இருந்த தமிழ் பேசும் பகுதிகளான தற்போதைய கன்னியாகுமரி மாவட்டமும், செங்கோட்டை வட்டமும் சென்னை மாநிலத்துடன் இணைக்கப்பட்டன.

பின்னர் 1956-ஆம் ஆண்டின் தொகுதி சீரமைப்பு நடவடிக்கைகளின் விளைவாக சென்னை மாநில சட்டப்பேரவை உறுப்பினர் எண்ணிக்கை 205-ஆக உயர்த்தப்பட்டது. மொத்தம் 167 தொகுதிகளில் 38 இரு உறுப்பினர் தொகுதிகள் இடம் பெற்றிருந்தன.

***இரண்டாம் சட்டப்பேரவை: (1957 – 1962)*** 1957-ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தல்களைத் தொடர்ந்து இரண்டாவது சட்டப்பேரவை ஏப்ரல் முதல் நாள் அமைக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட 205 உறுப்பினர்களுடன் ஒரு நியமன உறுப்பினரும் இதில் இடம் பெற்றிருந்தார். மொத்தமுள்ள 205 உறுப்பினர்களில் 167 ஒற்றைத் தொகுதி உறுப்பினர்களும், 37 இரு உறுப்பினர் தொகுதி உறுப்பினர்களும் இடம் பெற்றனர். இரட்டை உறுப்பினர் தொகுதிகளில் ஒரு உறுப்பினர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த உறுப்பினருக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த 37 தொகுதியில் ஒரு தொகுதி பழங்குடியின உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்டு இருந்தது.

1959-ஆம் ஆண்டு மதராஸ் மாநிலத்திற்கும் ஆந்திர மாநிலத்திற்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட எல்லை சீர்திருத்தத்தின் விளைவாக ஆந்திர மாநில சட்டப்பேரவையின் ஒரு உறுப்பினர் இடம் மதராஸ் சட்டப்பேரவைக்கு மாற்றப்பட்டது. இதன் விளைவாக மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 206-ஆக உயர்ந்தது.

1962-ஆம் ஆண்டில் இரு உறுப்பினர் தொகுதிகள் நீக்கப்பட்டு 38 கூடுதல் ஒரு உறுப்பினர் தொகுதிகள் உருவாக்கப்பட்டன. இவற்றில் 37 தொகுதிகள் தாழ்த்தப்பட்டோருக்கும் ஒரு தொகுதி பழங்குடியினருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

***234 தொகுதிகள்***

***மூன்றாம் சட்டப்பேரவை: (1962 – 1967)*** 1962-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தல்களை தொடர்ந்து மார்ச் 3-ஆம் நாள் மூன்றாவது சட்டப்பேரவை அமைக்கப்பட்டது. 1965-ஆம் ஆண்டின் தொகுதி சீரமைப்பு நடவடிக்கைகளின் விளைவாக சென்னை சட்டப்பேரவையின் உறுப்பினர் எண்ணிக்கை 234-ஆக உயர்த்தப்பட்டது. இவற்றில் 42 இடங்கள் தாழ்த்தப்பட்டோருக்கும் இரண்டு இடங்கள் பழங்குடியினருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டன. கூடுதலாக ஒரு இடத்திற்கு ஆங்கிலோ இந்திய உறுப்பினர் நியமனம் செய்யப்பட்டார்.

***பெயர் மாற்றம்***

***நான்காம் சட்டப்பேரவை: (1967 – 1971)*** 1967-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற்ற தேர்தல்களின் விளைவாக மார்ச் முதல் நாள் சென்னை மாநிலத்தின் நான்காவது சட்டப்பேரவை அமைந்தது. இப்பேரவைக் கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை தொடர்ந்து நாடாளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டு 1969-ஆம் ஆண்டு ஜனவரி 14-ஆம் நாள் மதராஸ் மாநிலம் தமிழ்நாடு மாநிலமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

***ஐந்தாம் சட்டப்பேரவை: (1971 – 1976)*** 1971-ஆம் ஆண்டு மார்ச் 15-ஆம் நாள் அமைக்கப்பட்ட ஐந்தாவது சட்டப்பேரவை 1976-ஆம் ஆண்டு ஜனவரி 31-ஆம் நாள் கலைக்கப்பட்டு குடியரசு தலைவர் ஆட்சி அமல் செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் சட்டப்பேரவை கலைக்கப்பட்டு குடியரசு தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது இதுவே முதல் முறையாகும்.

***ஆறாம் சட்டப்பேரவை: (1977 – 1980)*** 1977, ஜூனில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களையடுத்து ஆறாம் சட்டப்பேரவை 1977 ஜூன் 30 ஆம் தேதி அமைக்கப்பட்டது. 1975-ஆம் ஆண்டின் தொகுதி சீரமைப்பு நடவடிக்கைகளின் விளைவாக மாற்றியமைக்கப்பட்ட 234 தொகுதிகளில் இதற்கான தேர்தல் நடத்தப்பட்டது. ஆனால் இதுவும் பதவிக்காலம் முடிவதற்கு முன்பே கலைக்கப்பட்டது. 1980 பிப்ரவரி 17 இல் இருந்து தமிழகம் குடியரசுத் தலைவர் ஆட்சியின்கீழ் கொண்டுவரப்பட்டது. இதற்கிடையே 1979-ஆம் ஆண்டு உப்பிலியாபுரம் பொது தொகுதி பழங்குடியினருக்கான தனித்தொகுதியாக மாற்றம் செய்யப்பட்டது.

***ஏழாம் சட்டப்பேரவை: (1980 – 1984)*** 1980 ஜூன் 9 ஆம் தேதி அமைக்கப்பட்டது. இதற்கான பொதுத் தேர்தல் 1980 மே மாதம் நடைபெற்றது. மொத்தமுள்ள 234 சட்டப்பேரவை தொகுதிகளில் மூன்று இடங்கள் பழங்குடியினருக்கும், 42 இடங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

***எட்டாவது சட்டப்பேரவை: (1985-1988)*** 1985 ஜனவரி 16 இல் அமைக்கப்பட்டது. இதற்கான பொதுத் தேர்தல் 1984 டிசம்பர் மாதம் நடைபெற்றது. எட்டாவது சட்டப்பேரவையின்போது, சட்டமேலவையை நீக்கும் அரசுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (1986 மே.14). இதன் மூலம் தமிழக சட்டமேலவை 1986 நவம்பர் 1 ஆம் தேதி முதல் அடியோடு ரத்து செய்யப்பட்டது.

எட்டாவது சட்டப்பேரவை கலைக்கப்பட்டு 1988 ஜனவரி 30 முதல் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது.

***மேலவை ஒழிப்பு***

எட்டாவது சட்டப்பேரவையில் தமிழக சட்ட மேலவையை நீக்குவதற்கான தீர்மானம் 1986-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதல் பெறப்பட்டது. இதனை தொடர்ந்து அதே ஆண்டின் நவம்பர் முதல் நாள் தமிழக சட்ட மேலவை கலைக்கப்பட்டது. 1937-ஆம் ஆண்டு இரு அவைகளாக உருவாக்கப்பட்ட தமிழக சட்டமன்றம் 1986-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் ஒரே அவையைக் கொண்ட சட்டமன்றமாக உருவெடுத்தது.

***ஒன்பதாம் சட்டப்பேரவை ( 1989 – 1991)*** 1989 ஜனவரியில் நடைபெற்ற தேர்தல்களை அடுத்து, 1989 ஜனவரி 27 ஆம் தேதி அமைக்கப்பட்டது. இதன் பதவிக்காலம் முடியும் முன்பே 1991 ஜனவரி 30 இல் கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது. இச் சட்டப்பேரவை காலத்தின்போது சட்ட மேலவையை மீண்டும் கொண்டு வரும் அரசுத் தீர்மானம் சட்டப்பேரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது (1989 பிப்ரவரி 20). இதனைத் தொடர்ந்து 1990 மே 10 ஆம் தேதி தமிழகத்திலும், ஆந்திரப்பிரதேசத்திலும் மீண்டும் சட்ட மேலவையை உருவாக்கும் மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இது 1990 மே மாதம் 28 ஆம் தேதி மாநிலங்களவையின் ஒப்புதலை பெற்றது; ஆனால் சில நடைமுறைச் சிக்கலின் காரணமாக இது நாடாளுமன்றத்தின் ஒப்புதலை பெறவில்லை.

***பத்தாவது சட்டப்பேரவை: (1991 – 1996)***1991-ஆம் ஆண்டு ஜூன் 24-ஆம் நாள் அமைக்கப்பட்டது. இந்த சட்டப்பேரவையில் சட்ட மேலவையை மீண்டும் உருவாக்கும் தீர்மானத்தை ரத்து செய்வதற்கான தீர்மானம் 1991-ஆம் ஆண்டு அக்டோபர் 4-ஆம் நாள் நிறைவேற்றப்பட்டது.

***பதினோராம் சட்டப்பேரவை: (1996 – 2001)*** பதினோறாவது சட்டப்பேரவைக்கு 1996 ஏப்ரல் 27, மே 2 ஆம் தேதிகளில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அதையடுத்து சபையின் முதல் கூட்டத்தொடர் மே 22 ஆம் தேதி துவங்கியது. இதன் பதவிக்காலம் 2001 மே 21 ஆம் தேதி வரை இருந்தாலும், பன்னிரெண்டாம் சட்டப்பேரவைக்கான தேர்தல் 2001, மே 10 ஆம் தேதி நடைபெற்றதையடுத்து, இந்த அவை 2001மே 14 ஆம் தேதி கலைக்கப்பட்டது.

***பன்னிரெண்டாம் சட்டப்பேரவை: (2001 – 2006):*** 2001-ஆம் ஆண்டு மே 10-ஆம் நாள் நடைபெற்ற தேர்தல்களை தொடர்ந்து மே 14 ஆம் தேதி உருவாக்கப்பட்டது. இதன் முதல் கூட்டம் நடைபெற்ற நாள் 2001 மே 22 ஆம் தேதி. இந்த அவை 2006 மே 12 ஆம் தேதி முடிவுற்றது.

***பதிமூன்றாம் சட்டப்பேரவை: (2006 – 2011):*** 13-வது தமிழக சட்டப்பேரவைக்கான தேர்தல் 2008 மே 8-ஆம் தேதி நடைபெற்றது. 2006 மே 13 ஆம் தேதி உருவாக்கப்பட்டது. இதன் முதல் கூட்டம் 2006மே 17 ஆம் தேதி நடைபெற்றது.


***பதினான்காம் சட்டப்பேரவை: (2011 – 2016):*** 2011 ஏப்ரல் 13 ஆம் தேதி நடைபெற்ற பொதுத் தேர்தலையடுத்து மே 23 ஆம் தேதி அமைக்கப்பட்டது. இதன் முதல் கூட்டத்தொடர் 2011 ஜூன் 5 தேதி ஆளுநர் உரையுடன் துவங்கியது. பேரவையின் கடைசி கூட்டத்தொடர் 2016 பிப்ரவரி 20 ஆம் தேதியுடன் முடிவடைந்தது.

# தமிழகத் தேர்தல்களில் வாக்குப்பதிவு சதவிகிதம்

தமிழ்நாட்டில் 1952-ம் ஆண்டிலிருந்து 2001-ம் ஆண்டு வரை நடைபெற்றுள்ள சட்டப் பேரவைத் தேர்தல்களில் 2011ஆம் ஆண்டில் மிக அதிகபட்சமாக 78.01 சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளன. இதற்கு அடுத்தபடியாக 1967-ம் ஆண்டு 76.57 சதவிகித வாக்குகளும் 1984 ம் ஆண்டு 73.47 சதவிகித வாக்குகளும் பதிவாகியுள்ளன.

1957-ம் ஆண்டு நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தல்களில்தான் மிகக் குறைவாக 46.56 சதவிகித வாக்குகள் பதிவாகின. தமிழகச் சட்டப் பேரவைக்கு இதுவரை நடைபெற்றுள்ள தேர்தல்களில் பதிவான வாக்குகளின் விவரம் வருமாறு:

| தேர்தல் ஆண்டு | மொத்தவாக்காளர்கள் | வாக்களித்தோர்எண்ணிக்கை | வாக்குப்பதிவுசதவிகிதம் |
|---|---|---|---|
| 1952 | 26981825 | 20253093 | 55.34% |
| 1957 | 17495831 | 11130996 | 46.56% |
| 1962 | 18675436 | 13194649 | 70.65% |
| 1967 | 20799362 | 15925796 | 76.57% |
| 1971 | 22976680 | 16567286 | 72.10% |
| 1977 | 28161418 | 17342799 | 61.58% |
| 1980 | 29197882 | 19101113 | 65.42% |
| 1984 | 30947873 | 22735869 | 73.47% |
| 1989 | 35294451 | 24595016 | 69.69% |
| 1991 | 39908787 | 25478644 | 63.84% |
| 1996 | 42478965 | 28439249 | 66.95% |
| 2001 | 47479000 | 28048077 | 59.07% |
| 2006 | 46603352 | 33005492 | 70.82% |
| 2011 | 47115846 | 36756813 | 78.01% |
| 2016 | | | |



# தமிழக சட்டப்பேரவை – கூடுதல் தகவல்கள்

தமிழக சட்டமன்றத்தின் 15-வது பேரவையை அமைப்பதற்கான தேர்தல் மே 16-ம் நாள் நடைபெற உள்ளது. மொத்தமுள்ள 234 தொகுதிகளிலும் ஒரே நாளில் வாக்குப் பதிவு நடைபெறும். தற்போது செயல்பாட்டிலுள்ள 14-வது சட்டப் பேரவைக்கான வாக்குப் பதிவும் ஒரே நாளில் நடைபெற்றது.

இதுவரை தமிழக சட்டப் பேரவைக்கு நடைபெற்றுள்ள தேர்தல்கள் குறித்த முக்கிய அம்சங்கள் வருமாறு:

| சட்டப்பேரவையும்ஆயுட்காலமும் | வாக்குப்பதிவுநடைபெற்றநாள் | பேரவைஅமைக்கப்பட்டநாள் | அமைச்சரவைபதவியேற்றநாள் | பேரவைகலைக்கப்பட்டநாள் |
|---|---|---|---|---|
| முதலாவதுபேரவை (1952-57) * | 1952 ஜனவரி 2, 5, 8, 9, 11, 12, 16, 21, 25 (9 நாட்கள்) | 01.03.1952 | 10.04.1952 | 31.03.1957 |
| இரண்டாவதுபேரவை (1957-62)** | 1957 மார்ச் 1, 4, 6, 8, 11 (5 நாட்கள்) | 01.04.1957 | 13.04.1957 | 01.03.1962 |
| மூன்றாவதுபேரவை (1962-67) | 1962 பிப்ரவரி 17, 19, 21, 24 (4 நாட்கள்) | 03.03.1962 | 15.03.1962 | 28.02.1967 |
| நான்காவதுபேரவை (1967-71) | 1967 பிப்ரவரி 5, 18, 21 (3 நாட்கள்) | 01.03.1967 | 06.03.1967 | 05.01.1971 |
| ஐந்தாவதுபேரவை (1971-76) | 1971 மார்ச் 1, 4, 7 (3 நாட்கள்) | 15.03.1971 | 15.03.1971 | 31.01.1976 |
| ஆறாவதுபேரவை (1977-80) | 1977 ஜூன் 12, 14 (2 நாட்கள்) | 30.06.1977 | 30.06.1977 | 17.02.1980 |
| ஏழாவதுபேரவை (1980-84) | 1980 மே 28, 31 (2 நாட்கள்) | 09.06.1980 | 09.06.1980 | 15.11.1984 |
| எட்டாவதுபேரவை (1985-88) | 1984 டிசம்பர் 24 (ஒரேநாள்) | 16.01.1985 | 10.02.1985 | 30.01.1988 |
| ஒன்பதாவதுபேரவை (1989-91) | 1989 ஜனவரி 21 (ஒரேநாள்) | 27.01.1989 | 27.01.1989 | 30.01.1991 |

| | | | | |
|---|---|---|---|---|
| பத்தாவதுபேரவை (1991-96) | 1991 ஜூன் 15 (ஒரேநாள்) | 24.06.1991 | 24.06.1991 | 13.05.1996 |
| 11-வதுபேரவை (1996-2001) | 1996 ஏப்ரல் 22, மே 2 (2 நாட்கள்) | 13.05.1996 | 13.05.1996 | 14.05.2001 |
| 12-வதுபேரவை (2001-06) | 2001 மே 10 (ஒரேநாள்) | 14.05.2001 | 14.05.2001 | |
| 13-வதுபேரவை (2006-2011 | 2006 மே 8 (ஒரேநாள்) | 13.5.2006 | 13.5.2006 | 14.5.2011 |
| 14-வதுபேரவை 2011 | 2011 ஏப்ரல் 13 (ஒரேநாள்) | 14.5.2011 | 16.5.2011 | |

இதுவரை தமிழக சட்டப் பேரவைக்கு நடைபெற்றுள்ள 12 தேர்தல்களில் நான்கு முறை ஒரே நாளிலும், மூன்று முறை இரு கட்டமாகவும், இரண்டு முறை மூன்று கட்டமாகவும் வாக்குப் பதிவு நடைபெற்றுள்ளது. தலா ஒரு முறை நான்கு கட்டமாகவும், ஐந்து கட்டமாகவும், ஒன்பது கட்டமாகவும் தேர்தல் நடத்தப்பட்டுள்ளது.

* 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் முந்தைய மதராஸ் பிரசிடென்சியை உள்ளடக்கியதாக நடைபெற்றது. இதில் தமிழகம், ஆந்திர பிரதேசம், கர்நாடகம் மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களின் தொகுதிகள் இடம் பெற்றன. மொத்தம் 375 தொகுதிகளைக் கொண்டிருந்தது. தமிழகத்திற்கு 188 தொகுதிகள் இடம் பெற்றன.

1952 ஆம் நடைபெற்ற தேர்தலில் 112 தொகுதிகள் ஒற்றை உறுப்பினர் தொகுதியாகவும். 37 தொகுதிகள் இரட்டை உறுப்பினர் தொகுதியாகவும் இருந்தன. ஒரு நியமன உறுப்பினர்.

** 1957 ஆம் ஆண்டு மாநிலங்கள் சீரமைப்புக்குப்பின் மதராஸ் மாகாணத்தின் சட்டமன்றத்திற்கு 205 உறுப்பினர்கள் கொண்டதாக இருந்தது. இதில் 130 ஒற்றை உறுப்பினர் தொகுதியாகவும் 37 இரட்டை உறுப்பினர் தொகுதியாகவும் இருந்தன. ஒருவர் நியமன உறுப்பினர்.


# தமிழக சட்டப்பேரவை தேர்தலில் பெண் வேட்பாளர்கள்

தமிழக சட்டப்பேரவைக்கு 1957-ம் ஆண்டிலிருந்து நடைபெற்ற தேர்தல்களில் அதிகபட்சமாக 156 பெண் வேட்பாளர்கள் 1996-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டுள்ளனர். குறைந்தபட்சமாக 1967-ம் ஆண்டு தேர்தலில் 11 பெண் வேட்பாளர்கள் மட்டுமே தேர்தல் களத்தில் இருந்தனர்.

வெற்றி பெற்ற வேட்பாளர்களை பொறுத்தவரை 1991-ம் ஆண்டு தேர்தல்களில் அதிக எண்ணிக்கையில் 32 பெண் வேட்பாளர்கள் வெற்றிவாகை சூடினார்கள். இதுவரை தமிழக சட்டப்பேரவைக்கு நடைபெற்றுள்ள தேர்தல்களில் 1977-ம் ஆண்டில்தான் குறைந்த அளவில் இரண்டு பெண் வேட்பாளர்கள் மட்டுமே வெற்றி பெற்றனர்.

தமிழக சட்டப்பேரவை தேர்தல்களில் போட்டியிட்ட பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு :

| தேர்தல்ஆண்டு | மொத்தஇடங்கள் | மொத்தவேட்பாளர்கள் | பெண்வேட்பாளர்கள் | வெற்றிபெற்ற பெண்கள் | பெண்உறுப்பினர்சதவிகிதம் |
|---|---|---|---|---|---|
| 1957 | 205 | 887 | 20 | 9 | 4.39% |
| 1962 | 206 | 798 | 17 | 10 | 4.85% |
| 1967 | 234 | 778 | 11 | 3 | 1.28% |
| 1971 | 234 | 748 | 15 | 5 | 2.14% |
| 1977 | 234 | 1390 | 24 | 2 | 0.85% |
| 1980 | 234 | 1029 | 17 | 5 | 2.13% |
| 1984 | 234 | 1499 | 43 | 8 | 3.42% |
| 1989 | 234 | 3046 | 70 | 9 | 3.85% |
| 1991 | 234 | 2834 | 102 | 32 | 13.67% |
| 1996 | 234 | 5017 | 156 | 9 | 3.85% |
| 2001 | 234 | 1860 | 112 | 25 | 10.68% |
| 2006 | 234 | 2586 | 156 | 22 | 9.40% |
| 2011 | 234 | 2748 | 143 | 17 | 7.26% |
| 2016 | | | | | |



# 1952-ம் ஆண்டிலிருந்து நடைபெற்ற தேர்தல்கள் : கட்சிகள் பெற்ற வாக்குகள் சதவிகிதம்

1952-ம் ஆண்டிலிருந்து 2011-ம் ஆண்டு வரை நடைபெற்றுள்ள தமிழக சட்டப்பேரவை தேர்தல்களில் பல்வேறு அரசியல் கட்சிகள் பெற்றுள்ள வாக்குகள் சதவிகிதம் வருமாறு:


| ஆண்டு | காங்கிரஸ் | பா.ஜ.க | சி.பி.ஐ | சி.பி.எம் | தி.மு.க | அ.இ.அ.தி.மு.க | பா.ம.க | ம.தி.மு.க | மற்றவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1952 | 34.88 | -- | 13.18 | -- | -- | -- | -- | -- | 6.48 (சோசலிசகட்சி) |
| 1957 | 45.34 | -- | 7.4 | -- | -- | -- | -- | -- | 2.64 (பிரஜாசோசலிச கட்சி) |
| 1962 | 46.14 | -- | 7.72 | -- | 27.1 | -- | -- | -- | 7.82 (சுதந்திரா) |
| 1967 | 41.1 | -- | 1.8 | 4.07 | 40.69 | -- | -- | -- | 5.30 (சுதந்திரா) |
| 1971 | 34.99 (ஸ்தாகாங்கிரஸ்) | -- | 2.32 | 1.65 | 48.58 | -- | -- | -- | 2.95 (சுதந்திரா) |
| 1977 | 17.5 | -- | 2.9 | 2.79 | 24.89 | 30.36 | -- | -- | 16.67 (ஜனதா) |
| 1980 | 20.92 (காங்.ஐ) 0.28 (காங்.ஐக்) | 0.07 | 2.66 | 3.16 | 22.1 | 38.75 | -- | -- | -- |
| 1984 | 16.28 | 0.25 | 2.62 | 2.76 | 29.34 | 37.03 | -- | -- | -- |
| 1989 | 19.83 | 0.35 | 1.22 | 3.53 | 33.18 | 21.15 (ஜெ) 9.19 (ஜா) | -- | -- | -- |
| 1991 | 15.19 | 1.7 | 1.24 | 3.15 | 22.46 | 44.39 | 5.89 | -- | -- |
| 1996 | 5.61 | 1.81 | 2.12 | 1.68 | 42.07 | 21.47 | 3.84 | 5.78 | 9.30(தமாக) |
| 2001 | 2.48 | 3.19 | 1.59 | 1.68 | 30.92 | 31.44 | 5.56 | 4.65 | 6.73(தமாக) |
| 2006 | 8.38 | 2.02 | 1.61 | 2.65 | 26.46 | 32.64 | 5.65 | 5.98 | --- |
| 2011 | 9.3 | 2.22 | 1.97 | 2.41 | 22.39 | 38.4 | 5.23 | -- | 7.88(தேமுதிக) |
| 2016 | | | | | | | | | |


# சட்டமன்றத் தேர்தல்களில் ஆட்சியைப் பிடித்த கட்சிகள் பெற்ற தொகுதிகள்

| தேர்தல் ஆண்டு | வெற்றி பெற்ற கட்சிகள் | போட்டியிட்ட இடங்கள் | வெற்றி பெற்ற தொகுதிகள் |
|---|---|---|---|
| 1952 | **காங்கிரஸ்** | 367** | 152 |
| 1957 | **காங்கிரஸ்** | 204 | 151 |
| 1962 | **காங்கிரஸ்** | 206 | 139 |
| 1967 | தி.மு.க | 174 | 137 |
| 1971 | தி.மு.க | 203 | 184 |
| 1977 | அ.தி.மு.க | 200 | 130 |
| 1980 | அ.தி.மு.க | 177 | 129 |
| 1984 | அ.தி.மு.க | 155 | 132 |
| 1989 | தி.மு.க | 202 | 150 |
| 1991 | அ.தி.மு.க | 168 | 164 |
| 1996 | தி.மு.க | 182 | 173 |
| 2001 | அ.தி.மு.க | 141 | 132 |
| 2006 | தி.மு.க | 132 | 96 |
| 2011 | அ.தி.மு.க | 165 | 150 |
| 2016 | | | |

** 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் முந்தைய மதராஸ் பிரசிடென்சியை உள்ளடக்கியதாக நடைபெற்றது. இதில் தமிழகம், ஆந்திர பிரதேசம், கர்நாடகம் மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களின் தொகுதிகள் இடம் பெற்றன. மொத்தம் 375 தொகுதிகளைக் கொண்டிருந்தது. தமிழகத்திற்கு 188 தொகுதிகள் இடம் பெற்றன.

1952 ஆம் நடைபெற்ற தேர்தலில் 150 தொகுதிகள் ஒற்றை உறுப்பினர் தொகுதியாகவும். 37 தொகுதிகள் இரட்டை உறுப்பினர் தொகுதியாகவும் இருந்தன.





# தொகுதி சீரமைப்பு

# அத்தியாயம் - 9
# தொகுதிச் சீரமைப்பு - ஒரு பார்வை

மக்கள் தொகையில் ஏற்படும் மாறுதலுக்கு ஏற்ப சட்டமன்ற, மக்களவை தொகுதிகளின் எல்லைகளை அவ்வப்போது மாற்றியமைக்கும் நடவடிக்கையே தொகுதிச் சீரமைப்பு ஆகும். இதற்கெனவே இயற்றப்படும் தொகுதிச் சீரமைப்பு ஆணையத்தின் கமிஷன் சட்டத்தின் விதிமுறைகளின்படி நியமிக்கப்படும் தொகுதிச் சீரமைப்புக் கமிஷனின் முடிவை எந்த வகையிலும் மாற்றவோ, எதிர்க்கவோ சட்டரீதியாக முடியாது என்பதும் இதில் குறிப்பிடத்தக்கதாகும்.

எனினும் மக்களவையில் ஒவ்வொரு மாநிலத்தின் பிரதிநிதித்துவம் இந்தத் தொகுதிச் சீரமைப்பினால் எவ்வகையிலும் மாற்றத்திற்கு ஆளாகாது. அந்த சமயத்தில் உள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் ஒரு மாநிலத்தில் தாழ்த்தப்பட்ட, பழங்குடி பிரிவினருக்கு என ஒதுக்கப்படும் தொகுதிகளில் வேண்டுமானால் மாற்றம் செய்யப்படக் கூடும். இந்தக் கமிஷனின் சீரமைப்பு நடவடிக்கையினால் சில நேரங்களில் தொகுதிகளின் பெயர்கள் மாறுதலுக்கு ஆளாகவும் கூடும்.

இதன்படி 1952, 1962, 1972, 2002 ஆகிய ஆண்டுகளில் இயற்றப்பட்ட தொகுதிச் சீரமைப்பு ஆணையத்தின் சட்டங்களின் அடிப்படையில் முறையே 1952, 1962, 1973, 2002 ஆகிய ஆண்டுகளில் தொகுதிச் சீரமைப்பு ஆணையங்கள் உருவாக்கப்பட்டு அவற்றின் முடிவுகள் நாடாளுமன்றத்திலும், சம்பந்தப்பட்ட மாநில சட்டமன்றங்களிலும் வைக்கப்பட்டு, அவற்றின் சட்டபூர்வமான முடிவாக மாற்றப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வந்துள்ளன. எனினும் 2002ஆம் ஆண்டில் குறிப்பாக மேற்கொள்ளப்பட்ட ஓர் அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி, 2026ஆம் ஆண்டுக்குப் பிறகு மேற்கொள்ளப்படும் மக்கள் கணக்கெடுப்பிற்குப் பிறகே, 2001ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் 2002ஆம் ஆண்டில் தொகுதிகளில் செய்யப்பட்ட மாற்றங்களை மீண்டும் திருத்துவதற்கான வாய்ப்பு கிடைக்கும்.

இத்தகைய பணியில் ஆணையம் ஈடுபடும்போது, அப்போதுள்ள மொத்த சட்டமன்ற, மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கையில் எவ்வித மாற்றமும் இருக்காது. இதன்படி ஒரு மாநிலத்தின் மக்கள்தொகையை அந்த மாநில சட்டமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையால் வகுத்து (உதாரணமாக, 8 கோடி பேர் மக்கள்தொகை - 250 தொகுதிகள் எனில், 3,20,000 பேர் கொண்டதாக ஒரு தொகுதி அமையும்) வரும் சராசரியே ஒரு தொகுதிக்கான மக்கள்தொகை அளவாக நிர்ணயிக்கப்படும். மேலும் அந்தத் தொகுதியின் எல்லைகள் தொடர்ச்சியான நிலப்பரப்பைக் கொண்டதாக, மாவட்டம், வட்டம், ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி போன்ற தற்போதைய நிர்வாக வசதிகளுக்கு இடையூறு செய்யாத வகையில், தகவல் தொடர்பு வசதிகள், பொதுமக்களுக்கான வசதிகள் ஆகியவற்றை சம அளவில் கொண்டதாக சீரமைப்பதே தொகுதிச் சீரமைப்பு ஆணையத்தின் பணியாக அமைகிறது.

எனினும் இந்த அடிப்படை வசதிகளில் சமநிலை இருக்குமானால், மக்கள் தொகையைப் பொறுத்தவரையில், மாநில சராசரி அளவிற்கு 10 சதவீதம் கூடுதலாகவோ அல்லது

குறைவாகவோ கொண்டதாக தொகுதிகளை அமைக்கலாம் என்ற முடிவையும் கடைசியாக 2002ஆம் ஆண்டு செயல்பட்ட கமிஷன் முடிவெடுத்துச் செயல்பட்டது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

## சென்னை மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 1 | இராயபுரம் | இராயபுரம் |
| 2 | துறைமுகம் | துறைமுகம் |
| 3 | ராதாகிருஷ்ணன் நகர் | ராதாகிருஷ்ணன் நகர் |
| 4 | பூங்கா நகர் | நீக்கப்பட்டது |
| 5 | பெரம்பூர் | பெரம்பூர் |
| 6 | புரசைவாக்கம் | நீக்கப்பட்டது |
| 7 | எழும்பூர் | எழும்பூர் (தனி) |
| 8 | அண்ணா நகர் | அண்ணா நகர் |
| 9 | தியாகராய நகர் | தியாகராய நகர் |
| 10 | ஆயிரம் விளக்கு | ஆயிரம் விளக்கு |
| 11 | சேப்பாக்கம் | நீக்கப்பட்டது |
| 12 | திருவல்லிக்கேணி | நீக்கப்பட்டது |
| 13 | மைலாப்பூர் | மைலாப்பூர் |
| 14 | சைதாப்பேட்டை | சைதாப்பேட்டை |
| | | கொளத்தூர் |
| | | வில்லிவாக்கம் |
| | | திரு.வி.க நகர் (தனி) |
| | | விருகம்பாக்கம் |
| | | வேளச்சேரி |
| | | சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி |

## திருவள்ளூர் மாவட்டம்

| | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதி | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதி |
|---|---|---|
| 15 | கும்மிடிப்பூண்டி | கும்மிடிப்பூண்டி |
| 16 | பொன்னேரி | பொன்னேரி (தனி) |
| 17 | திருவொற்றியூர் | திருவொற்றியூர் |
| 18 | வில்லிவாக்கம் | இது சென்னை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. |
| 19 | பூவிருந்தவல்லி | பூவிருந்தவல்லி (தனி) |
| 20 | திருவள்ளூர் | திருவள்ளூர் |
| 21 | திருத்தணி | திருத்தணி |
| 22 | பள்ளிப்பட்டு | நீக்கப்பட்டது |
| | | ஆவடி |
| | | மதுரவாயல் |
| | | அம்பத்தூர் |
| | | மாதவரம் |

## காஞ்சிபுரம் மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 23 | ஆலந்தூர் | ஆலந்தூர் |
| 24 | தாம்பரம் | தாம்பரம் |
| 25 | திருப்போரூர் | திருப்போரூர் |
| 26 | செங்கல்பட்டு | செங்கல்பட்டு |
| 27 | மதுராந்தகம் | மதுராந்தகம் |
| 28 | அச்சரப்பாக்கம் | நீக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 29 | உத்திரமேரூர் | உத்திரமேரூர் |
| 30 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 31 | திருப்பெரும்புதூர் | திருப்பெரும்புதூர் (தனி) |
| | | சோளிங்கநல்லூர் |
| | | பல்லாவரம் |
| | | செய்யூர் (தனி) |

## வேலூர் மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 32 | அரக்கோணம் | அரக்கோணம் (தனி) |
| 33 | சோளிங்கர் | சோளிங்கர் |
| 34 | ராணிப்பேட்டை | ராணிப்பேட்டை |
| 35 | ஆற்காடு | ஆற்காடு |
| 36 | காட்பாடி | காட்பாடி |
| 37 | குடியாத்தம் | குடியாத்தம் (தனி) |
| 38 | பேரணாம்பட்டு | நீக்கப்பட்டது |
| 39 | வாணியம்பாடி | வாணியம்பாடி |
| 40 | நாட்ராம்பள்ளி | நீக்கப்பட்டது |
| 41 | திருப்பத்தூர் | திருப்பத்தூர் |
| 42 | அணைக்கட்டு | அணைக்கட்டு |
| 43 | வேலூர் | வேலூர் |
| | | கீழ்வைத்தனன் குப்பம் (தனி) |
| | | ஆம்பூர் |
| | | ஜோலார் பேட்டை |

## திருவண்ணாமலை மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 44 | செங்கம் | செங்கம் (தனி) |
| 45 | தண்டராம்பட்டு | நீக்கப்பட்டது |
| 46 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 47 | கலசப்பாக்கம் | கலசப்பாக்கம் |
| 48 | போளூர் | போளூர் |
| 49 | ஆரணி | ஆரணி |
| 50 | செய்யாறு | செய்யாறு |
| 51 | வந்தவாசி | வந்தவாசி (தனி) |
| 52 | பெரணமல்லூர் | நீக்கப்பட்டது |
| | | கீழ்பெண்ணாத்தூர் |

## விழுப்புரம் மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 53 | மேல்மலையனூர் | நீக்கப்பட்டது |
| 54 | செஞ்சி | செஞ்சி |
| 55 | திண்டிவனம் (தனி) | திண்டிவனம் |
| 56 | வானூர் | வானூர் (தனி) |
| 57 | கண்டமங்கலம் | நீக்கப்பட்டது |
| 58 | விழுப்புரம் | விழுப்புரம் |
| 59 | முகையூர் | நீக்கப்பட்டது |
| 60 | திருநாவலூர் | நீக்கப்பட்டது |
| 61 | உளுந்தூர்ப்பேட்டை | உளுந்தூர்ப்பேட்டை |
| 62 | இரிஷிவந்தியம் | இரிஷிவந்தியம் |
| 63 | சின்னசேலம் | நீக்கப்பட்டது |
| 64 | சங்கராபுரம் | சங்கராபுரம் |

| | | |
|---|---|---|
| | | மயிலம் |
| | | விக்கிரவாண்டி |
| | | திருக்கோயிலூர் |
| | | கள்ளக்குறிச்சி (தனி) |

## கடலூர் மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 65 | நெல்லிக்குப்பம் | நீக்கப்பட்டது |
| 66 | கடலூர் | கடலூர் |
| 67 | பண்ருட்டி | பண்ருட்டி |
| 68 | குறிஞ்சிப்பாடி | குறிஞ்சிப்பாடி |
| 69 | புவனகிரி | புவனகிரி |
| 70 | காட்டுமன்னார் கோயில் | காட்டுமன்னார் கோயில் (தனி) |
| 71 | சிதம்பரம் | சிதம்பரம் |
| 72 | விருத்தாச்சலம் | விருத்தாச்சலம் |
| 73 | மங்களூர் | நீக்கப்பட்டது |
| | | திட்டக்குடி (தனி) |
| | | நெய்வேலி |

## கிருஷ்ணகிரி மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 74 | ஓசூர் | ஓசூர் |
| 75 | தளி | தளி |
| 76 | காவேரிப்பட்டினம் | நீக்கப்பட்டது |
| 77 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி |
| 78 | பர்கூர் | பர்கூர் |
| | | ஊத்தங்கரை (தனி) |
| | | வேப்பனஹள்ளி |

## தர்மபுரி மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 79 | அரூர் | அரூர் (தனி) |
| 80 | மொரப்பூர் | நீக்கப்பட்டது |
| 81 | பாலக்கோடு | பாலக்கோடு |
| 82 | தர்மபுரி | தர்மபுரி |
| 83 | பென்னாகரம் | பென்னாகரம் |
| | | பாப்பிரெட்டிபட்டி |

## சேலம் மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| | | கங்கவள்ளி (தனி) |
| 84 | மேட்டூர் | மேட்டூர் |
| 85 | தாரமங்கலம் | நீக்கப்பட்டது |
| 86 | ஓமலூர் | ஓமலூர் |
| 87 | ஏற்காடு (தனி) | ஏற்காடு (தனி) |
| 88 | சேலம்-I | நீக்கப்பட்டது |
| 89 | சேலம்-II | நீக்கப்பட்டது |
| | | சேலம்-வடக்கு |
| | | சேலம்-தெற்கு |
| | | சேலம்-மேற்கு |
| | முன்பு நாமக்கல் மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்தது | சங்ககிரி |
| 90 | வீரபாண்டி | வீரபாண்டி |

| | | |
|---|---|---|
| 91 | பனமரத்துப்பட்டி | நீக்கப்பட்டது |
| 92 | ஆத்தூர் | ஆத்தூர் (தனி) |
| 93 | தலைவாசல் | நீக்கப்பட்டது |
| 94 | எடப்பாடி | எடப்பாடி |

## நாமக்கல் மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 95 | இராசிபுரம் | இராசிபுரம் (தனி) |
| 96 | சேந்தமங்கலம் (தனி) | சேந்தமங்கலம் (தனி) |
| 97 | நாமக்கல் (தனி) | நாமக்கல் |
| 98 | கபிலர்மலை | நீக்கப்பட்டது |
| 99 | திருச்செங்கோடு | திருச்செங்கோடு |
| | | குமாரபாளையம் |
| | | பரமத்தி-வேலூர் |
| 100 | சங்ககிரி | சேலம் மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. |

## கோயம்புத்தூர் மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 101 | மேட்டுப்பாளையம் | மேட்டுப்பாளையம் |
| 102 | தொண்டாமுத்தூர் | தொண்டாமுத்தூர் |
| 103 | சிங்காநல்லூர் | சிங்காநல்லூர் |
| 104 | கோயம்புத்தூர் மேற்கு | நீக்கப்பட்டது |
| 105 | கோயம்புத்தூர் கிழக்கு | நீக்கப்பட்டது |
| 106 | பேரூர் | நீக்கப்பட்டது |
| 107 | கிணத்துக்கடவு | கிணத்துக்கடவு |
| 108 | பொள்ளாச்சி | பொள்ளாச்சி |
| 109 | வால்பாறை | வால்பாறை (தனி) |
| 110 | பொங்கலூர் | நீக்கப்பட்டது |
| | | சூலூர் |
| | | கோயம்புத்தூர் வடக்கு |
| | | கோயம்புத்தூர் தெற்கு |
| | | கவுண்டம்பாளையம் |

## திருப்பூர் மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 111 | பல்லடம் | பல்லடம் |
| 112 | திருப்பூர் | நீக்கப்பட்டது |
| | | மடத்துக்குளம் |
| | | திருப்பூர் வடக்கு |
| | | திருப்பூர் தெற்கு |
| 113 | உடுமலைப்பேட்டை | உடுமலைப்பேட்டை |
| 114 | அவினாசி (தனி) | அவினாசி |
| 115 | காங்கேயம் | காங்கேயம் |
| 116 | தாராபுரம் | தாராபுரம் (தனி) |

## ஈரோடு மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 117 | வெள்ளக்கோயில் | நீக்கப்பட்டது |
| 118 | மொடக்குறிச்சி | மொடக்குறிச்சி |
| 119 | பெருந்துறை | பெருந்துறை |
| 120 | ஈரோடு | நீக்கப்பட்டது |
| 121 | பவானி | பவானி |
| 122 | அந்தியூர் | அந்தியூர் |

| | | |
|---|---|---|
| 123 | கோபிச்செட்டிப்பாளையம் | கோபிச்செட்டிப்பாளையம் |
| 124 | பவானிசாகர் | பவானிசாகர் (தனி) |
| 125 | சத்தியமங்கலம் | நீக்கப்பட்டது |
| | | ஈரோடு கிழக்கு |
| | | ஈரோடு மேற்கு |

## நீலகிரி மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 126 | குன்னூர் | குன்னூர் |
| 127 | உதகமண்டலம் | உதகமண்டலம் |
| 128 | கூடலூர் | கூடலூர் (தனி) |

## திண்டுக்கல் மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 129 | பழநி | பழநி |
| 130 | ஒட்டன்சத்திரம் | ஒட்டன்சத்திரம் |
| 131 | நிலக்கோட்டை | நிலக்கோட்டை (தனி) |
| 132 | நத்தம் | நத்தம் |
| 133 | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 134 | ஆத்தூர் | ஆத்தூர் |
| 135 | வேடசந்தூர் | வேடசந்தூர் |

## தேனி மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 136 | பெரியகுளம் | பெரியகுளம்- தாழ்த்தப்பட்டவர்களுக்கான தனித் தொகுதியாக மாற்றப்பட்டுள்ளது |
| 137 | தேனி | நீக்கப்பட்டது |
| 138 | போடிநாயக்கனூர் | போடிநாயக்கனூர் |
| 139 | கம்பம் | கம்பம் |
| 140 | ஆண்டிப்பட்டி | ஆண்டிப்பட்டி |

## மதுரை மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 141 | சேடப்பட்டி | நீக்கப்பட்டது |
| 142 | திருமங்கலம் | திருமங்கலம் |
| 143 | உசிலம்பட்டி | உசிலம்பட்டி |
| 144 | சோழவந்தான் | சோழவந்தான் (தனி) |
| 145 | திருப்பரங்குன்றம் | திருப்பரங்குன்றம் |
| 146 | மதுரை மேற்கு | மதுரை மேற்கு |
| 147 | மதுரை மத்தி | மதுரை மத்தி |
| 148 | மதுரை கிழக்கு | மதுரை கிழக்கு |
| 149 | சமயநல்லூர் | நீக்கப்பட்டது |
| 150 | மேலூர் | மேலூர் |
| | | மதுரை வடக்கு |
| | | மதுரை தெற்கு |

## கரூர் மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 151 | அரவக்குறிச்சி | அரவக்குறிச்சி |
| 152 | கரூர் | கரூர் |
| 153 | கிருஷ்ணராயபுரம் | கிருஷ்ணராயபுரம் |
| 154 | குளித்தலை | குளித்தலை |

## பெரம்பலூர் மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 155 | பெரம்பலூர் | பெரம்பலூர் (தனி) |
| 156 | வரகூர் | நீக்கப்பட்டது |

## அரியலூர் மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 157 | அரியலூர் | அரியலூர் |
| 158 | ஆண்டிமடம் | நீக்கப்பட்டது |
| 159 | ஜெயங்கொண்டம் | ஜெயங்கொண்டம் |
| | | குன்னம் |

## திருச்சிராப்பள்ளி மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 160 | மருங்காபுரி | நீக்கப்பட்டது |
| 161 | தொட்டியம் | நீக்கப்பட்டது |
| 162 | உப்பிலியாபுரம் | நீக்கப்பட்டது |
| 163 | முசிறி | முசிறி |
| 164 | இலால்குடி | இலால்குடி |
| 165 | ஸ்ரீரங்கம் | ஸ்ரீரங்கம் |
| 166 | திருச்சிராப்பள்ளி-I | நீக்கப்பட்டது |
| 167 | திருச்சிராப்பள்ளி-II | நீக்கப்பட்டது |
| 168 | திருவெறும்பூர் | திருவெறும்பூர் |
| | | மணப்பாறை |
| | | திருச்சிராப்பள்ளி கிழக்கு |
| | | திருச்சிராப்பள்ளி மேற்கு |
| | | மண்ணச்சநல்லூர் |
| | | துறையூர் (தனி) |

## நாகப்பட்டினம் மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 169 | சீர்காழி | சீர்காழி (தனி) |
| 170 | பூம்புகார் | பூம்புகார் |
| 171 | மயிலாடுதுறை | மயிலாடுதுறை |
| 172 | குத்தாலம் | நீக்கப்பட்டது |
| 173 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் |
| 174 | வேதாரண்யம் | வேதாரண்யம் |
| | | கீழ்வேளூர் |

## திருவாரூர் மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 175 | நன்னிலம் | நன்னிலம் |
| 176 | திருவாரூர் | திருவாரூர் |
| 177 | திருத்துறைப்பூண்டி | திருத்துறைப்பூண்டி (தனி) |
| 178 | மன்னார்குடி | மன்னார்குடி |

## தஞ்சாவூர் மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 179 | பட்டுக்கோட்டை | பட்டுக்கோட்டை |
| 180 | பேராவூரணி | பேராவூரணி |
| 181 | ஒரத்தநாடு | ஒரத்தநாடு |
| 182 | திருவோணம் | நீக்கப்பட்டது |
| 183 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 184 | திருவையாறு | திருவையாறு |
| 185 | பாபநாசம் | பாபநாசம் |
| 186 | வலங்கைமான் | நீக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 187 | கும்பகோணம் | கும்பகோணம் |
| 188 | திருவிடைமருதூர் | திருவிடைமருதூர் (தனி) |

## புதுக்கோட்டை மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 189 | திருமயம் | திருமயம் |
| 190 | கொளத்தூர் (புதுக்கோட்டை) | நீக்கப்பட்டது |
| 191 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை |
| 192 | ஆலங்குடி | ஆலங்குடி |
| 193 | அறந்தாங்கி | அறந்தாங்கி |
| | | விராலிமலை |
| | | கந்தர்வக்கோட்டை (தனி) |

## சிவகங்கை மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 194 | திருப்பத்தூர் | திருப்பத்தூர் |
| 195 | காரைக்குடி | காரைக்குடி |
| 196 | இளையான்குடி | நீக்கப்பட்டது |
| 197 | சிவகங்கை | சிவகங்கை |
| 198 | மானாமதுரை | மானாமதுரை (தனி) |

## இராமநாதபுரம் மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 199 | திருவாடாணை | திருவாடாணை |
| 200 | பரமக்குடி | பரமக்குடி |
| 201 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| 202 | கடலாடி | நீக்கப்பட்டது |
| 203 | முதுகுளத்தூர் | முதுகுளத்தூர் |

## விருதுநகர் மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 204 | அருப்புக்கோட்டை | அருப்புக்கோட்டை |
| 205 | சாத்தூர் | சாத்தூர் |
| 206 | விருதுநகர் | விருதுநகர் |
| 207 | சிவகாசி | சிவகாசி |
| 208 | திருவில்லிபுத்தூர் | திருவில்லிபுத்தூர் (தனி) |
| 209 | இராஜபாளையம் | இராஜபாளையம் |
| | | திருச்சுழி |

## தூத்துக்குடி மாவட்டம்


| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 210 | விளாத்திகுளம் | விளாத்திகுளம் |
| 211 | ஒட்டப்பிடாரம் | ஒட்டப்பிடாரம் (தனி) |
| 212 | கோவில்பட்டி | கோவில்பட்டி |
| 213 | சாத்தான்குளம் | நீக்கப்பட்டது |
| 214 | திருச்செந்தூர் | திருச்செந்தூர் |
| 215 | ஸ்ரீவைகுண்டம் | ஸ்ரீவைகுண்டம் |
| 216 | தூத்துக்குடி | தூத்துக்குடி |

## திருநெல்வேலி மாவட்டம்

| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
|---|---|---|
| 217 | சங்கரன்கோவில் | சங்கரன்கோவில் (தனி) |
| 218 | வாசுதேவநல்லூர் | வாசுதேவநல்லூர் (தனி) |
| 219 | கடையநல்லூர் | கடையநல்லூர் |
| 220 | தென்காசி | தென்காசி |

| | | |
|---|---|---|
| 221 | ஆலங்குளம் | ஆலங்குளம் |
| 222 | திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 223 | பாளையங்கோட்டை | பாளையங்கோட்டை |
| 224 | சேரன்மகாதேவி | நீக்கப்பட்டது |
| 225 | அம்பாசமுத்திரம் | அம்பாசமுத்திரம் |
| 226 | நாங்குநேரி | நாங்குநேரி |
| 227 | ராதாபுரம் | ராதாபுரம் |
| **கன்னியாகுமரி மாவட்டம்** | | |
| எண் | சீரமைப்பிற்கு முன்னுள்ள தொகுதிகள் | சீரமைப்பிற்கு பின்னுள்ள தொகுதிகள் |
| 228 | கன்னியாகுமரி | கன்னியாகுமரி |
| 229 | நாகர்கோயில் | நாகர்கோயில் |
| 230 | குளச்சல் | குளச்சல் |
| 231 | பத்மனாபபுரம் | பத்மனாபபுரம் |
| 232 | திருவட்டாறு | நீக்கப்பட்டது |
| 233 | விளவங்கோடு | விளவங்கோடு |
| 234 | கிள்ளியூர் | கிள்ளியூர் |

⇨ தொகுதி சீரமைப்புக்குப்பின் 2011 தேர்தலில் 52 தொகுதிகள் புதிதாக இடம்பெற்றன


தமிழ் நாடு
ஆந்திரப்பிரதேசம்
கர்நாடகா
கேரளா
பாக் நீரிணை
மன்னார் வளைகுடா
வீரிவு வரைபடம்
சென்னை மாவட்டம்

# தொகுதி பட்டியல்

# அத்தியாயம் - 10

## தொகுதி பட்டியல்

**2008-ல் நடந்த தொகுதி சீரமைப்பிற்கு பின் உள்ள தொகுதிகளின் பட்டியல்**

| எண் | தொகுதி பெயர் | எண் | தொகுதி பெயர் | எண் | தொகுதி பெயர் | எண் | தொகுதி பெயர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கும்மிடிப்பூண்டி | 17 | ராயபுரம் | 33 | திருப்போரூர் | 49 | ஜோலார்பேட்டை |
| 2 | பொன்னேரி(தனி) | 18 | துறைமுகம் | 34 | செய்யூர்(தனி) | 50 | திருப்பத்தூர் |
| 3 | திருத்தணி | 19 | திருவல்லிக்கேணி | 35 | மதுராந்தகம் (தனி) | 51 | ஊத்தங்கரை(தனி) |
| 4 | திருவள்ளூர் | 20 | ஆயிரம்விளக்கு | 36 | உத்திரமேரூர் | 52 | பர்கூர் |
| 5 | பூந்தமல்லி(தனி) | 21 | அண்ணாநகர் | 37 | காஞ்சிபுரம் | 53 | கிருஷ்ணகிரி |
| 6 | ஆவடி | 22 | விருகம்பாக்கம் | 38 | அரக்கோணம் (தனி) | 54 | வேப்பனஹள்ளி |
| 7 | மதுரவாயல் | 23 | சைதாப்பேட்டை | 39 | சோளிங்கர் | 55 | ஹோசூர் |
| 8 | அம்பத்தூர் | 24 | தியாகராயநகர் | 40 | காட்பாடி | 56 | தளி |
| 9 | மாதவரம் | 25 | மயிலாப்பூர் | 41 | ராணிபேட்டை | 57 | பாலக்கோடு |
| 10 | திருவொற்றியூர் | 26 | வேளச்சேரி | 42 | ஆற்காடு | 58 | பென்னாகரம் |
| 11 | டாக்டர். ராதா கிருஷ்ணன் நகர் | 27 | சோழிங்கநல்லூர் | 43 | வேலூர் | 59 | தருமபுரி |
| 12 | பெரம்பூர் | 28 | ஆலந்தூர் | 44 | அணைக்கட்டு | 60 | பாப்பிரெட்டிபட்டி |
| 13 | கொளத்தூர் | 29 | ஸ்ரீபெரும்புதூர்(தனி) | 45 | கீழ்வைத்தினன் குப்பம் (தனி) | 61 | அரூர் (தனி) |
| 14 | வில்லிவாக்கம் | 30 | பல்லாவரம் | 46 | குடியாத்தம்(தனி) | 62 | செங்கம் (தனி) |
| 15 | திரு.வி.க.நகர்(தனி) | 31 | தாம்பரம் | 47 | வாணியம்பாடி | 63 | திருவண்ணாமலை |
| 16 | எழும்பூர்(தனி) | 32 | செங்கல்பட்டு | 48 | ஆம்பூர் | 64 | கீழ்பென்னாததூர் |

| எண் | தொகுதி பெயர் | எண் | தொகுதி பெயர் | எண் | தொகுதி பெயர் | எண் | தொகுதி பெயர் |
|---|---|---|---|---|---|---|---|
| 65 | கலசப்பாக்கம் | 81 | கங்காவள்ளி (தனி) | 97 | குமாரபாளையம் | 113 | திருப்பூர்(வடக்கு) |
| 66 | போளூர் | 82 | ஆத்தூர் (தனி) | 98 | ஈரோடு (கிழக்கு) | 114 | திருப்பூர்(தெற்கு) |
| 67 | ஆரணி | 83 | ஏற்காடு (ST) | 99 | ஈரோடு(மேற்கு) | 115 | பல்லடம் |
| 68 | செய்யார் | 84 | ஓமலூர் | 100 | மொடக்குறிச்சி | 116 | சூலூர் |
| 69 | வந்தவாசி (தனி) | 85 | மேட்டூர் | 101 | தாராபுரம்(தனி) | 117 | கவுண்டம்பாளையம் |
| 70 | செஞ்சி | 86 | எடப்பாடி | 102 | காங்கேயம் | 118 | கோயம்புத்தூர் (வடக்கு) |
| 71 | மயிலம் | 87 | சங்கரி | 103 | பெருந்துறை | 119 | தொண்டமுத்தூர் |
| 72 | திண்டிவனம்(தனி) | 88 | சேலம்(மேற்கு) | 104 | பவானி | 120 | கோயம்புத்தூர் (தெற்கு |
| 73 | வானூர் (தனி) | 89 | சேலம்(வடக்கு) | 105 | அந்தியூர் | 121 | சிங்கநல்லூர் |
| 74 | விழுப்புரம் | 90 | சேலம் (தெற்கு) | 106 | கோபிச்செட்டிபாளையம் | 122 | கிணத்துக்கடவு |
| 75 | விக்கிரவாண்டி | 91 | வீரபாண்டி | 107 | பவானிசாகர்(தனி) | 123 | பொள்ளாச்சி |
| 76 | திருக்கோயிலூர் | 92 | ராசிபுரம் (தனி) | 108 | உதகமண்டலம் | 124 | வால்பாறை |
| 77 | உளுந்தூர் பேட்டை | 93 | சேந்தமங்கலம் (ST) | 109 | கூடலூர் (தனி) | 125 | உடுமலைப்பேட்டை |
| 78 | ரிஷிவந்தியம் | 94 | நாமக்கல் | 110 | குன்னூர் | 126 | மடத்துக்குளம் |
| 79 | சங்கராபுரம் | 95 | பரமத்தி-வேலூர் | 111 | மேட்டுப்பாளையம் | 127 | பழனி |
| 80 | கள்ளக்குறிச்சி(தனி) | 96 | திருச்செங்கோடு | 112 | அவினாசி(தனி) | 128 | ஒட்டன்சத்திரம் |

| எண் | தொகுதி பெயர் | எண் | தொகுதி பெயர் | எண் | தொகுதி பெயர் | எண் | தொகுதி பெயர் |
|---|---|---|---|---|---|---|---|
| 129 | ஆத்தூர் | 145 | முசிறி | 161 | மயிலாடுதுறை | 177 | பேராவூரணி |
| 130 | நிலக்கோட்டை | 146 | துறையூர் | 162 | பூம்புகார் | 178 | கந்தர்வகோட்டை |
| 131 | நத்தம் | 147 | பெரம்பலூர் | 163 | நாகப்பட்டினம் | 179 | விராலிமலை |
| 132 | திண்டுக்கல் | 148 | குன்னம் | 164 | கிள்ளியூர் | 180 | புதுக்கோட்டை |
| 133 | வேதச்சந்தூர் | 149 | அரியலூர் | 165 | வேதாரண்யம் | 181 | திருமயம் |
| 134 | அரவக்குறிச்சி | 150 | ஜெயங்கொண்டம் | 166 | திருத்துறைப்பூண்டி | 182 | ஆலங்குடி |
| 135 | கரூர் | 151 | திட்டக்குடி | 167 | மன்னார்குடி | 183 | அறந்தாங்கி |
